**Recent Tamil Books from India – March 2023**

**Mary Martin Booksellers Pte Ltd**
**Blk 231, Bain Street**
**#03-05, Bras Basah Complex**
**Singapore 180231**
**Tel : +65-6883-2284/6883-2204**
**info@marymartin.com**
**www.marymartin.com**

## Anthropology / Archaeology

இந்தியாவின் பழங்குடிகள் பற்றி விவரிக்கிறது... = Intiyāviṉ Palankuṭikaḷ Parri Vivarikkiratu... / R. ரகோத்தமன் = R. Rakōttamaṉ
சென்னை: சத்யா எண்டர்பிரைசஸ் = Catyā Eṇṭarpiraicas, Ceṉṉai 2022
184p.; 22cm.
9789392474088
300gm.
$ 14.00 / pb
**http://www.marymartin.com/web?pid=841921**
----------------------------------------------------------------------------------------------------
பழந்தமிழர் கணக்கு நீட்டலளவை = Palantamilar Kaṇakku Nīṭṭalaḷavai / கொடுமுடி சண்முகன் = Koṭumuṭi Caṇmukaṉ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai 2022
116p.; 22 cm.
9789391949150
250gm.
$ 6.50 / pb

கொடுமுடி நம்பன்
அஞ்சலட்டையில் வந்த செய்தி இளைஞர்களுக்கு ஆச்சரியமாக இருந்ததத. மாதந்தோறும் நடைபெற்ற வரும் கூட்டங்கள் பற்றி தகவல் தெரிவிக்கக் கேட்டிருந்தது. எழுதியவர் பொதுப்பணித்துறையில் உயர் அலுவலர். அப்படியே கலந்து கொண்டதோடு அரிய ஆலோசனைகளை வழங்கி செயல்படுத்தவும் ஏற்பாடுகளைச் செய்து தந்தார் கொடுமுடி சண்முகன் என்னும் அவ்வறிஞர். செல்லும் இடங்களில் எல்லாம் வரலாறு தொல்லியல் சார்ந்த அரும்பொருட்களைப் பொதுமக்கள் பேணும் வகையில் காக்கவும் காட்சிப்படுத்தவும் செய்தார். அவரின் ஆய்வுகள் பண்டைய வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய பாறை ஓவியங்களில் தொடங்கி அரிய கல்வெட்டுகள் இலக்கியங்கள் என விரிந்தது. அவர் கண்டறிந்தவற்றை நூல்களாகவும் பதிப்பித்தார்.
**http://www.marymartin.com/web?pid=841901**
------------------------------------------------------------------------------------------

## Astrology

ஜாதகமும் குடும்ப வாழ்க்கையும் = Jātakamum Kuṭumpa Vālkkaiyum புலியூர்க் கேசிகன் = Puliyūrk Kēcikaṉ
சென்னை: ஸ்ரீசெண்பா பதிப்பகம் = Srīceṇpā Patippakam, Ceṉṉai 2023
176p.; 22 cm.
320gm.
$ 8.75 / pb

ஆண்மை என்னும் நேர்சக்தியும், பெண்மை என்னும் எதிர்சக்தியும் இப்படித் தம்முள் இணைந்து ஒன்றுபடும்போது புதிய குடும்ப வாழ்வும் உதயமாகின்றது. புதிய வசதிகளும் சந்ததிகளும் அமைகின்றன. குடும்ப வாழ்வில் செழித்துச் சிறப்படைகின்றனர். இதனால்தான் ஒருவருக்கொருவர் தகுதியான துணையைத் தேர்ந்து எடுப்பதில் மிகவும் கவனம் செலுத்துவது நல்லது என்கின்றனர். ஒவ்வொருவரின் பிறப்பையும் காலத்தையொட்டி மதிப்பிட்டு, அவர்களின் குடும்ப வாழ்க்கை எப்படி அமையக் கூடும் என்பதை மிகவும் நுட்பமாகவே ஜோதிட நூல்கள் பலவும் உணர்த்துகின்றன. அந்த நுட்பங்கள் அனுபவத்திலும் சரியாகப் பொருந்துகின்றன.
**http://www.marymartin.com/web?pid=841942**
--------------------------------------------------------------------------------

## Biography /Memoirs

திருநெல்விருந்து = Tirunelviruntu / சுகா = Cukā
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
128 p.; 22 cm.
9789395272513
250gm.
$ 7.50 / pb

‘சுகாவின் எழுத்து எந்த வகைக்கும் உட்படாத எழுத்து. அதனால் தனக்குப் பிடிக்கும்’ என்றார் வெங்கட் சாமிநாதன். சுகாவின் எழுத்தை நடைச்சித்திரம் என்று சொல்லலாம். புனைவு அல்லாத சுகாவின் நடைச்சித்திரங்களில், புனைவில் ஒரு வாசகனுக்குக் கிடைக்கின்ற அத்தனையும் கிடைக்கும். இந்த வகையான நடைச்சித்திர வடிவத்தில் சுகாவை அ. முத்துலிங்கத்தின் தொடர்ச்சியாகச் சொல்லலாம்.

ஆச்சரியமூட்டும் அரிய இயல்பான நகைச்சுவை சுகாவின் பலம். மனம் விட்டுச் சிரிக்க வைக்கும் சுகாவின் எழுத்து சில சமயம் நம்மை வாய் விட்டு அழவும் வைத்து விடும். அபுனைவில் நிகழ்த்த முடியக்கூடிய அத்தனை சாத்தியங்களையும் சுகா தனது கட்டுரைகளில் நிகழ்த்திப் பார்க்கிறார். சாதாரண நிகழ்வுகள் கூட சுகாவின் நடைச்சித்திரத்தில் புதிய பரிமாணம் பெறுகின்றன. தொடக்கம் முதல் முற்றுப் புள்ளி

வரை கட்டிப் போட்டுப் படிக்க வைக்கும் எழுத்துக்குச் சொந்தக்காரரர் சுகா.
http://www.marymartin.com/web?pid=841938
---------------------------------------------------------------------------------------------------------
காந்தியும் தமிழ்ச் சனாதனிகளும் (தொகுதி-1) = Kānti Oru Putir?: Kāntiyum Tamilc Caṇātaṇikaḷum (Tokuti-1) / அ. மார்க்ஸ் = A. Marx
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
182p.; 23 cm.
9789391748289
270gm.
$ 11.00 / pb

காந்தி ஒரு தீவிரமான செயல்பாட்டாளர் மட்டுமல்ல. மிக்க நவீனமான சிந்தனையாளரும் கூட. வரலாறு காணாத வகையில் பெருந்திரளான மக்களைக் களத்தில் இறக்கியவர். காந்தியைப் பகைத்தவர்களும், வெறுத்தவர்களும், கொன்றவர்களும்தான் சனாதனிகள்.. பிரிட்டிஷ்காரரர்களைக் காட்டிலும் சனாதனம் காந்தியையே எதிரியாகக் கண்டது. அவருக்கு எதிராக மதபீடங்கள் பத்திரிக்கைகள் நடத்தின. ஆபாசமாக அவரை ஏசி நூல்கள் வெளியிட்டன. தன்னுடைய கட்சியினர் தேவதாசிமுறையை ஆதரித்தபோது காந்தி அதை எதிர்த்தவர்களுடன் நின்றார். நான் கோமாதாவை வணங்குபவன். ஆனால் என்னுடைய கடவுள் எப்படி இன்னொருவரின் கடவுளாக இருக்க முடியும் எனக் கேட்டார். பதில் சொல்ல இயலாதவர்கள் அவரைக் கொன்றார்கள். காந்தியின் பன்முகப் பரிமாணங்களை வெளிக் கொணரும் இந்நூலின் இந்த ஐந்தாம் பதிப்பு திருத்தி விரிவு செய்யப்பட்டு இரு பெரும் தொகுதிகளாக இப்போது வெளிவருகிறது.
http://www.marymartin.com/web?pid=841892
---------------------------------------------------------------------------------------------------
நலக் கண்ணாடி (வாழ்வியல் கிளினிக்) = Nalak Kaṇṇāṭi (Vālviyal Kiḷiṇik) / விக்ரம் குமார் = Vikram Kumār
சென்னை: தமிழ் திசை பதிப்பகம் = Tamil Ticai Patippakam, Ceṇṇai 2022
112p.; 21cm.
200gm.
$ 6.50 / pb

இந்தச் சூழலில், சமூக அக்கறையுடன், அறிவியலின் ஆபத்துகளையும், பழமையென நாம் புறந்தள்ளிய ஆரோக்கிய பழக்கவழக்கங்களையும் நமக்கு உணர்த்தும் விதமாக இந்தப் புத்தகத்தை சித்த மருத்துவர் வி. விக்ரம்குமார் எழுதியிருக்கிறார். எந்த ஒரு தொழில்நுட்பமும் நம் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டுமே தவிர, நாம் காலங்காலமாகப் பின்பற்றும் ஆரோக்கிய வழிமுறைகளைத் தூக்கியெறிவதற்கான காரணமாக மாறிவிடக்கூடாது என்பதை இந்நூலின் மூலம் ஆசிரியர் உணர்த்தியிருக்கிறார். கிராம வாழ்க்கையின் மேன்மைகள், பயணங்களால் விளையும் நன்மைகள், நிலாச் சோறு அனுபவங்கள், அடிமைப்படுத்தும் செல்போன், இயற்கை உணவு வகைகள்,

மருந்துகளுக்குள் மறைந்திருக்கும் அரசியல், நவீன ஆடைகளின் ஆபத்துகள், குழந்தைகளையும் விட்டுவைக்காத மனஅழுத்தம், எண்ணெய்க் குளியல், நடைப்பயிற்சியின் அவசியம், தூக்கத்தின் முக்கியத்துவம், அதீத தூக்கத்தின் கேடுகள், காற்று மாசு என இந்நூலின் வழியே இன்றைய காலத்தில் நாம் அவசியம் அறிய வேண்டிய உடல்நலம் சார்ந்த தகவல்களைப் பற்றி துறைவாரியாக விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்.
**http://www.marymartin.com/web?pid=839107**
------------------------------------------------------------------------------------------------------------
வடக்குரத வீதி = Vaṭakkurata Vīti / சுகா = Cukā
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
168p.; 22 cm.
9789395272520
300gm.
$ 10.00 / pb

சுகாவின் எழுத்துகளை வாசிக்க கண்களை இடுக்கி, புருவத்தை நெரித்து, க்ரூப் - 1 மாணவனைப் போல் தயாராக வேண்டியதில்லை. வெள்ளிக்கிழமை மாலைகளில் சிலேட்டுப் பையோடு வீடு நோக்கித் துள்ளிக் குதித்தோடும் எளிய மாணவனாக இருந்தால் போதும். புன்னகையும் கண்ணீரும் கலக்கும் வினோத நறுமணங்களால் ஆன திருநெல்வேலியின் தெருக்கள், மனிதர்கள், அவர்களின் பேச்சு வழக்கு, உடல்மொழி எல்லாவற்றையும் நுட்பமும் குறும்புமாகப் பதிவு செய்யும் இவரது எழுத்துக்குள் புகுந்தால் குறுக்குத்துறை தாமிரபரணி ஆற்றில் இறங்கிவிடலாம். திரைப்பட இயக்குநரான சுகா, இயக்குநர் பாலுமகேந்திராவின் மாணவர்களுள் முக்கியமானவர். சுகா எழுதிய இசைக் கட்டுரைகள் மிகவும் நுட்பமானவை எளிமையின் கைகளால் நெஞ்சைப் பற்றிக் கொள்பவை. ‘வடக்குரத வீதி’ புத்தகம் அதன் தலைப்பைப் போலவே, அங்கே இருக்கும் ரத்தமும் சதையுமான நெல்லை மக்களை உங்களுக்கு அறிமுகம் செய்யும். இப்புத்தகத்தின் வாசிப்பு அனுபவத்தை அமரர் கிரேஸி மோகனின் வார்த்தைகளில் சொன்னால் ‘பரமசுகா’. (சுகாவின் ‘உபசாரம்’ மற்றும் ‘வேணுவனவாசம்’ நூலில் உள்ள கட்டுரைகள் இந்தப் புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன).
**http://www.marymartin.com/web?pid=843434**
----------------------------------------------------------------------------------------------
காலத்தை இசைத்த கலைஞன் இளையராஜா 80 = Kālattai Icaitta Kalaiñaṉ Iḷaiyarājā 80 / ஜி. குப்புசாமி = Ji. Kuppucāmi
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
39p.; 18 cm.
9789355231628
150gm.
$ 4.50 / pb

இளையராஜாவிடமிருந்து பீறிடும் இசை வெள்ளம் விளக்க முடியாத ஒரு புதிர். இன்று தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரே மேதை அவர்தான். சுந்தர ராமசாமி (ஆகஸ்ட் 2003, கல்கி நேர்காணல்)
"அவரே கம்போஸ் செய்கிறார்; இசைக்கருவிகளை ஒருங்கமைக்கிறார்; ஆர்கெஸ்ட்ரேஷனைச் செய்கிறார்; நிகழ்ச்சியை நெறியாள்கை செய்கிறார். இதையெல்லாம் உதவியாளர்கள் இல்லாமலும் நிறுத்துக் கடிகாரம் இல்லாமலும் செய்கிறார். ஆச்சரியம்!"
http://www.marymartin.com/web?pid=842807
---------------------------------------------------------------------------------------
ஓடு சாந்தி ஓடு = ōṭu Cānti ōṭu / சாந்தி சௌந்தர்ராஜன் = Cānti Cauntarrājaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
143p.; 22 cm.
9789395272452
250gm.
$ 8.50 / pb

“பிறகு வேறொரு உள்ளறைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அந்த அறையில் ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். எனக்குப் பயமாகவும் அருவருப்பாகவும் இருந்தது. வேறு வழியில்லை. கட்டிலில் ஏறிப் படுக்கச் சொன்னார்கள். கையைத் தூக்கு, காலைத் தூக்கு என்றெல்லாம் சொன்னார்கள். ஒவ்வொருவரும் அருகில் வந்து பரிசோதனை செய்தார்கள். அவர்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். நீண்ட நேரம் நிர்வாணமாக இருந்தேன். உடல் முழுக்கப் பரிசோதிக்கிறார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆங்கில மொழி எனக்குச் சரளமாக வராது. அதனால், அவர்கள் கேட்கும் நிறைய கேள்விகளுக்கு என்னால் சரிவரப் பதிலளிக்க முடியாமல் தவித்தேன்.” * இந்தியாவுக்காக 2006ல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை சாந்தி. ஆனால் பாலியல் பரிசோதனை செய்யப்பட்டு அவரது பதக்கம் பறிக்கப்பட்டது. சாந்தி தன்னை பெண் என்றே உணர்கிறார். தான் பெண் என்பதில் சாந்திக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. உடல் வடிவமும் உடையுமா ஒரு பெண்ணை பெண் என நிர்ணயிக்க முடியும்? இந்தச் சமூகத்தின் பொதுப் புத்தி சார்ந்த கேள்விகளையும் சர்வதேச அளவில் தனக்கு நேர்ந்த அவமானங்களையும் ஒரு சேர எதிர்கொள்கிறார் சாந்தி. தன்னை ஒதுக்கிய இச்சமூகத்தின் முன்பு ஒரு வெற்றிப் பெண்ணாக வலம் வர அவர் எதிர்கொண்ட சவால்கள் என்ன? ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து இந்தியாவுக்காகப் பதக்கம் வென்ற ஓட்டப் பந்தய வீராங்கனையும் பயிற்சியாளருமான சாந்தி சௌந்தர்ராஜனின் சுயசரிதை இது.
http://www.marymartin.com/web?pid=844624
---------------------------------------------------------------------------------------

பேரலையாய் ஒரு மௌன் ஷட்ஜம் = Pēralaiyāy Oru Mauṇ śatjam / லலிதாராம் = Lalitārām
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṇṇai 2022
183p.; ills. 22 cm.
9789391947200
300gm.
$ 10.00 / pb

Autobiography
நான் இணையத்தில் எழுதத் தொடங்கியவன். இணையம் கொடுக்கும் கட்டற்ற சுதந்தரத்தினால் எழுதும் பொருளை என் திருப்திக்கு ஏற்ப எழுதிப் பழகியவன். நான் இணையத்தில் எழுதத் தொடங்கி சில ஆண்டுகள் கழித்து ஒரு நூல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. நான் எழுதி அச்சில் வெளியான முதல் ஆக்கமே நூல்தான். நூல் என்பதால், அதிலும் எனக்கு முழு சுதந்திரம் இருந்தது.
**http://www.marymartin.com/web?pid=842825**
------------------------------------------------------------------------------------------
அறிவியல் கலைஞர்: இராசேசுவரி 1906 = Ariviyal Kalaiñar: Irācēcuvari 1906 / கோ. ரகுபதி = Kō. Rakupati
சென்னை: தடாகம் = Taṭākam, Ceṇṇai 2022
267p.; 22 cm.
9789393361028
400gm.
$ 14.00 / pb

Biography on Science
பௌதிகக் கலைப் பேராசிர்யரான ஈ. இராசேசுவர், இளங்கலை. (3928), முதுகலை (1331) பட்டங்களில் சென்னை மாகாணத்திலேயே முதவிடத்தைப் பிடித்து ஜாதிய ஆணாதிக்கத்தின் பெண்ணுக்குப் பின் யுத்தி' என்ற கட்டுக்கதையை வீழ்த்தி, பெண்ணுக்கு முன் யுத்தி உண்டென்ற உண்மையைப் பறைசாற்றினார் தமிழறிஞர்களான தெ.பொ. மீனாட்சி சுந்தரம். பொ. சிவஞானம். திரு.வி.க. பெ. விசுவநாதம். ஏ.கே.சி. ரசிகமணி ராபி. சேதுபிள்ளை. சுத்தானந்த பாரதியார் சோசோமசுந்தர பாரதியார் கோவைக் கிழார் போன்றோரின் கட்டுரைகள் வெளியான தமிழ்த் தென்றன். இதழில் இராசேசுவரி தமிழில் எழுதிய அறிவியல் கட்டுரைகள் தனித்துவமாய் மிளிர்கின்றன.
**http://www.marymartin.com/web?pid=843599**
------------------------------------------------------------------------------------------
எங்கேயும் எப்போதும்: எஸ்.பி.பி. நினைவலைகள் = Enkēyum Eppōtum: Es.Pi.Pi. Niṇaivalaikaḷ / அரவிந்தன் = Aravintaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
143p.; 18 cm.
9789355231864
200gm.

$ 6.25 / pb

Biography
எல்லாப் பருவங்களுக்கும் எல்லாத் தருணங்களுக்கும் எல்லா உணர்வுகளுக்கும் எல்லா உறவு நிலைகளுக்கும் குரல் கொடுத்த கலைஞனைப் பற்றிய சொற்சித்திரங்கள்.
**http://www.marymartin.com/web?pid=843573**
-------------------------------------------------------------------------------------
பூம்புகார் தந்த சிலம்புத் தென்றல்: புலவர் நா. தியாகராசனார் வரலாறும் சமகால ஆவணங்களும் = Pūmpukār Tanta Cilamput Teṉṟal: Pulavar Nā. Tiyākarācaṉār Varalārum Camakāla āvaṇankaḷum / கு. சக்திவேல்; கோ. சதீஸ் = Ku. Caktivēl; Kō. Catīs
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṉṉai 2022
403p.; ills. 24 cm.
9789391947286
800gm.
$ 30.00 / pb

தமிழ்ப் பண்பாட்டு வரலாறுகளை அலை அலையாகப் பாடும் கிழக்குக் கடற்கரையின் காவியபூமி பூம்புகார். சேரன் தம்பி இதற்காகவே பூம்புகார் போற்றதும் என்று வீங்குநீர் வேலி உலகிற்கு அதன் புகழ்பாடுகிறான். இதன் புகழை இருபதாம் நூற்றாண்டிலும் போற்றிப் பரவுவதற்காகவே தோன்றியவர் சிலம்புத் தென்றல் தியாகராசனார்.
**http://www.marymartin.com/web?pid=842754**
-------------------------------------------------------------------------------------------------------
விட்டல்ராவும் நானும் உரையாடிக்கொண்டிருந்தோம் = Viṭṭalrāvum Nāṉum Uraiyāṭikkoṇṭiruntōm / பாவண்ணன் = Pāvaṇṇaṉ
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṉṉai 2022
250p.; 22 cm.
300gm.
$ 12.50 / pb

2009ஆம் ஆண்டின் இறுதியில் விட்டல்ராவ் பெங்களூருக்கு வந்தார். அவருடைய வீடு தம்புசெட்டிபாள்ய சாலையில் ராகவேந்திர நகரில் இருந்தது. அப்போது நான் அல்சூரில் குடியிருந்தேன். இடைப்பட்ட தொலைவு பன்னிரண்டு கிலோமீட்டர்தான் என்றாலும் இரு இடங்களையும் இணைக்கும் நேரடிச் சாலையோ, நேரடிப் போக்குவரத்தோ இல்லை. இரு பேருந்துகள் மாறிச் சென்று இறங்கி, இரண்டு கிலோமீட்டர் தொலைவு நடக்கவேண்டும். சில சமயங்களில் நண்பர் திருஞானசம்பந்தத்துடன் இணைந்து அவருடைய இரண்டுசக்கர வாகனத்தில் செல்வதும் உண்டு. எப்படியோ, மாதத்துக்கு ஒருமுறையாவது அவரைச் சந்திக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.
**http://www.marymartin.com/web?pid=843567**
---------------------------------------------------------------------------------------------------------

அரசியல் ஆன்மிக எம்.ஜி. ஆர். = Araciyal āṉmika Em. Ji. ār. / ம. வெங்கடேசன் = Ma. Venkaṭēcaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
144p.; ills. 22 cm.
9789395272063
250gm.
$ 8.50 / pb

எம்ஜிஆரைப் பற்றி எத்தனையோ நூல்கள் வெளிவந்துள்ளன, ஆனால், இதுபோன்ற ஒரு நூல் வந்ததில்லை. எம்ஜிஆரின் அரசியலையும் அவரது ஆன்மிக நம்பிக்கையையும் ஒருங்கிணைத்து, ஆதாரபூர்வமாக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. திராவிட இயக்கத்துக்காரர் என்று எம்ஜிஆரை ஏற்றுக்கொள்பவர்களைப் பார்த்து இந்தப் புத்தகம் மறுக்கமுடியாத கேள்விகளை முன்வைக்கிறது. தனது ஆன்மிக நிலைப்பாட்டை என்றுமே எம்.ஜி. ஆர். மறைத்ததில்லை என்பதைத் தெளிவாக விளக்குவதோடு, தன்னால் மிகவும் மதிக்கப்பட்ட ஈவெராவின் நிலைப்பாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத் தயங்கியதே இல்லை அவர் என்பதையும் உறுதிபடச் சொல்கிறது. எம்ஜிஆரின் அரசியல் ஆன்மிகச் செயல்பாடுகளை விளக்கும் இப்புத்தகம், அதற்கு இணையாக, அக்காலக் கட்டத்தின் அரசியல் சித்திரம் ஒன்றையும் சேர்த்துத் தருகிறது. காஞ்சி சங்கராச்சாரியார் போன்ற துறவிகளை ஆதரிப்பதால் தனக்கு வரும் முத்திரைகளைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாதவர் எம்.ஜி. ஆர். தனக்கிருக்கும் ஆன்மிக நம்பிக்கைகளைப் பலமுறை உரக்கச் சொன்னவர் அவர். பல புத்தகங்களைத் தேடிப் படித்து, ஆய்வு செய்து. தன் வாதங்களுக்கு வலுவான திருபணங்களுடன் இந்த நூலை எழுதி இருக்கிறார் ம. வெங்கடேசன்.
**http://www.marymartin.com/web?pid=842753**
----------------------------------------------------------------------------------------------------
பாரதியும் குள்ளச்சாமியும் = Pāratiyum Kuḷḷaccāmiyum / ய. மணிகண்டன் = Ya. Maṇikaṇṭaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
99p.; ills. 23 cm.
9789355232342
200gm.
$ 6.75 / pb

“ஞாயிற்றைச் சங்கிலியா லளக்க லாமோ? ஞானகுரு புகழினைநாம் வகுக்க லாமோ?” ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அறைகூவல் விடுத்த லோகமானிய திலகர், விவேகானந்தப் பெருஞ்சுடரை முன்னெடுத்த நிவேதிதாதேவி ஆகியோர் மட்டுமல்ல, புதுச்சேரித் தெருக்களில் பித்தனைப் போல் திரிந்த ஒரு பரதேசியும் மகாகவி பாரதிக்கு ஞானகுரு. அவர்தான் குள்ளச்சாமி என்னும் மாங்கொட்டைச்சாமி.

பாரதிக்கும் குள்ளச்சாமிக்குமான உறவு ஆழமானது; அற்புத நிகழ்வுகளின் அடுக்குகளைக் கொண்டது. பாரதியின் நேரடி வாழ்வில், கவிதைகளில், உரைநடை எழுத்துகளில், சொற்பொழிவு நிகழ்ச்சியில் குள்ளச்சாமி பெற்றுள்ள இடம் தனித்துக் குறிப்பிடத்தக்கதாகும். இருவருக்குமான தொடர்பு வரலாற்றைத் துலக்கிக் காட்டும் இந்நூலைப் புதிய ஆவணங்களையும் அதிகாரபூர்வமான மூல ஏடுகளின் பதிவுகளையும் கொண்டு உருவாக்கியிருக்கிறார் பாரதி அறிஞர் ய. மணிகண்டன்.
**http://www.marymartin.com/web?pid=841896**
----------------------------------------------------------------------------------------------
பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் (முழுமையான வாழ்க்கைச் சரிதம்) = Pakuttarivup Pakalavaṉ Tantai Periyār (Mulumaiyāṇa Vālkkaic Caritam) / கவிஞர் கருணானந்தம் = Kaviñar Karuṇāṇantam
சென்னை: அமராவதி பதிப்பகம் = Amarāvati Patippakam, Ceṉṉai 2022
600p.; 22cm.
800gm.
$ 30.00 / hb

தந்தை பெரியார் தமிழ் மக்களை தான் பெற்றெடுக்காவிட்டாலும், மக்கள் அவரை அன்போடும் பாசத்தோடும் தந்தை, ஐயா என்று அழைத்தார்கள்.
தந்தை பெரியார் அவர்கள் சமுதாய மக்களுக்கு கூறிய அறிவுரை ஆழமானதும் எல்லா காலத்துக்கும் பொருந்தும் நீதி போதனையாகும்.
**http://www.marymartin.com/web?pid=841966**
-----------------------------------------------------------------------------------------
நீதிநெறி விளக்கம் – மூலமும் உரையும் = Nītineri Viḷakkam - Mūlamum Uraiyum / சி. வை. தாமோதரம்பிள்ளை = Ci. Vai. Tāmōtarampiḷḷai
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai 2022
114p.; 22 cm.
9789391949518
200gm.
$ 6.50 / pb

தமிழ்ப் பதிப்பு முன்னோடி சி.வை. தாமோதரம்பிள்ளை
தமிழர்கள் தமது தொன்மைக்கான சான்றுகளாக எடுத்து முன்வைக்கும் இலக்கியங்களை அச்சுக்குக் கொண்டுவந்து பதிப்பாக வெளியிட்ட பெருமை ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர் ஆகியோரையே சாரும். இவர்களில், சி.வை. தாமோதரம் பிள்ளை ‘பதிப்புத்துறையின் முன்னோடி’ என்று புகழ்ந்துரைக்கப்பட்டார்.
**http://www.marymartin.com/web?pid=843503**
-----------------------------------------------------------------------------------------------
மிருதுவாய்ச் சில அஞ்சலிகள்! = Mirutuvāyc Cila Añcalikaḷ! / மணா = Maṇā
திருப்பத்தூர் மாவட்டம்: பரிதி பதிப்பகம் = Pariti Patippakam, Tiruppattūr Māvaṭṭam 2022

234p.; ills. 22 cm.
9789394187481
350gm.
$ 12.50 / pb

வாழ்க்கை வரலாறு
பிரபலமான பல ஆளுமைகள் மறைந்தபோது அவர்களைப் பற்றி எழுதப்பட்ட அனுபவம் சார்ந்த குறிப்புகளே மணா எழுதியுள்ள இந்த நூல். மரணம் உண்மையில் அதுவரைப் பிடிவாதமாக வைத்திருந்த பல இறுக்கங்களைக் கலைக்கிறது. அப்படி நெருக்கமாக உணர்ந்தவர்களின் மரணம் உருவாக்கிய மனதின் நெகிழ்வை இந்த நூலில் உணர முடியம்.
**http://www.marymartin.com/web?pid=843493**
------------------------------------------------------------------------------------------
சிந்துக்குத் தந்தை = Cintukkut Tantai / அரிமளம்; சு. பத்மநாபன் = Arimaḷam; Cu. Patmanāpaṉ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṉṉai 2022
xiv, 224p.; 22 cm.
9789393358288
380gm.
$ 13.00 / pb

பாரதியின் இசைத் திறனை, பாவேந்தரின் மதிப்பீடுகளால் அளந்து காட்டும் அருமை நூல். சிந்துப்பா குறித்த செய்திகள், பாரதியின் முன்னோடிகள், இசைத் தமிழ் விளக்கங்களை ஆழமாக சான்றுகளோடு தருகிறது. பாரதியின் இசை வாழ்க்கை, பாட்டுத் திறம், இசையமைக்கும் ஆற்றல், சிந்துப் பாடல்கள், சிந்துக்குத் தந்தை உட்பட 12 தலைப்புகள் பரவசம் தருகின்றன. சிந்து பாடல்களுக்கு தானே ராகம், தாளம், பல்லவி, அநுபல்லவி, சரணம் தந்ததை விளக்குகிறது. கும்மி, நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, கிளிக் கண்ணி வகைகளில் பாரதி பாடியதை குறிப்பிடுகிறது. பாரதியின் திறனை பாங்குடன் எடுத்துக்காட்டும் நூல்.
**http://www.marymartin.com/web?pid=842533**
---------------------------------------------------------------------------
சலபதி-50: தொடரும் பயணம் = Calapati-50: Toṭarum Payaṇam / பழ. அதியமான்; ப. சரவணன்-கிருஷ்ண பிரபு = Pala. Atiyamāṉ; Pa. Caravaṇaṉ-Kiruśṇa Pirapu
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
190p.; ills. 22 cm.
9789355231123
300gm.
$ 11.25 / pb

நவீன தமிழ்நாட்டின் சமகால முக்கியச் சமூகவியல் ஆய்வறிஞர் ஆ. இரா. வேங்கடாசலபதிக்கு (1967) 50 வயது நிறைவுற்றதையடுத்து,

அவரது பங்களிப்புகள் குறித்து 2019இல் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப் பெற்ற 18 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். காலச்சுவடு, இந்து லிட் பார் லைஃப், கடவு ஆகிய அமைப்புகள் இணைந்து இரு நாள்கள் நிகழ்த்திய 'விரிவும் ஆழமும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் சமகால அறிஞர்கள், படைப்பாளிகள் என ஏறக்குறைய 60 பேர் பங்களித்தனர்.

வ.உ.சி., புதுமைப்பித்தன், பாரதி, உ.வே.சா., பெரியார் போன்ற தமிழ்ப் பேராளுமைகள் பற்றிய ஆய்வுகள், பதிப்பு முயற்சிகள், இலக்கிய ஆக்கங்கள், நட்புப் பாராட்டல், ஆங்கிலப் படைப்புகள் எனப் பல்வேறு துறைகள் சார்ந்து 2018 வரையிலான சலபதியின் பணிகள் பற்றிய அறிமுகங்களும் மதிப்பீடுகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிறிதும் மிகை தோன்றாப் பாராட்டுகளும், ஆழங்களில் புகுந்து புறப்பட்டு வந்த மதிப்பீடுகளும் கொண்ட, விமர்சகரைப் பற்றிய விமர்சன நூல் இது.
[http://www.marymartin.com/web?pid=842493](http://www.marymartin.com/web?pid=842493)
---------------------------------------------------------------------------
தீவாந்தரம் = Tīvāntaram / அண்டனூர் சுரா = Aṇṭaṇūr Curā
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṉṉai 2022
215p.; 22 cm.
350gm.
$ 11.50 / pb

தீவாந்தரம்' சிறந்ததொரு வரலாற்று நாவல். இதுவொரு கற்பனாவாத வரலாற்றுப் புனைவு அல்ல. அண்மைக்கால உண்மை வரலாற்றை, குறிப்பாக ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலகட்ட வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகளையொட்டி எழுதப்பட்ட நாவல். பாரதத்தின் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளையொட்டி எழுத்தாள ர.சு. நல்லபெருமாள் 'கல்லுக்குள் ஈரம்' நாவல் எழுதியுள்ளார். எழுத்தாளர் மாலனும் 'ஜண கண மண' நாவல் எழுதியுள்ளார். மேலும் பலரும் எழுதியுள்ளார்கள். அவ்வகையில் எழுத்தாளர் அண்டனூர் சுராவின் 'தீவாந்தரம்'நாவலும் பாரதத்தின் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளையொட்டிப் படைக்கப்பட்ட நாவல்களிலொன்று.
[http://www.marymartin.com/web?pid=841935](http://www.marymartin.com/web?pid=841935)
-----------------------------------------------------------------------------------------------
தமிழ்ச் சான்றோர்கள் = Tamilc Cāṉṟōrkaḷ / அ. கா. பெருமாள் = A. Kā. Perumāḷ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
263p.; 22 cm.
9789355231147
400gm.
$ 16.25 / pb

அ.கா. பெருமாள் எழுதிய ‘தமிழறிஞர்கள்’ என்ற நூலின் இரண்டாம் பகுதிதான் ‘தமிழ்ச் சான்றோர்கள்.’ இதில் 35 தமிழறிஞர்கள் பற்றிய செய்திகள் உள்ளன. முந்தைய நூலைப் போலவே தமிழறிஞர்களின்

வாழ்க்கை, அவர்கள் எழுதியவை பற்றிய தகவல்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. அக்காலத் தமிழறிஞர்களிடம் சமஸ்கிருத வெறுப்பில்லை; 1894இல் ஜெர்மனியிலிருந்து ஸ்லேட் வந்தாலும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் 1920வரை மணலில் எழுதிப் பழகினர்; தமிழறிஞர்களில் பலர் நடுத்தரக் குடும்பத்தினர்; அவர்களில் பலர் அச்சுப் புத்தகத்தின் வழி படித்தாலும் ஏட்டைப் படிக்கும் திறனும் பெற்றிருந்தனர் எனப் பல செய்திகளைப் போகிறபோக்கில் நூலாசிரியர் சொல்லிக்கொண்டே போகிறார். கடின உழைப்பில் உருவான நூல் இது.
http://www.marymartin.com/web?pid=841933
---

ஜெயகாந்தனின் பர்ணசாலை = Jeyakāntaṇiṇ Parṇacālai / நவபாரதி = Navapārati
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2022
161p.; 22 cm.
300gm.
$ 7.50 / pb

J.K. யோடு சுமார் 50 ஆண்டுகள் பழகிய அவரிடம் இருந்து பெற்ற அனுபவங்கள் அவரோடு பகிர்ந்து கொண்ட எண்ணங்கள் அவரின் எழுத்துக்களை சிறுகதைகளானாலும் நவல்களானாலும் கட்டுரைகளானாலும் முழுமையாக வாசித்ததன் விளைவாகத் தோன்றிய சிந்தனைகளை தொகுத்து தந்துள்ளார் தோழர் நவபாரதி.
http://www.marymartin.com/web?pid=842516
---

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு: ஒரு வரலாற்றுப் புதையல் = āṇantarankar Nāṭkurippu: Oru Varalārrup Putaiyal / பா. இரவிக்குமார் = Pā. Iravikkumār
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṇṇai 2022
176p.; 22 cm.
9789391947293
320gm.
$ 10.00 / pb

மொழியியல், நாட்டுப்புறவியல், மானுடவியல், பெண்ணியல் நோக்கிலும் பிற கோட்பாட்டு நோக்கிலும் ஆய்வதற்கு ஆனந்தரங்கரின் எழுத்துக்கள் யாவும் வரலாற்றுப் பொக்கிஷங்கள். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் புதிய தகவல்களுடன். கோட்பாட்டுப் பின்னணியில் எழுதப்பட்ட அரிய ஆவணங்கள் அடங்கிய அற்புதமான தொகுப்பு இந்நூல்.
http://www.marymartin.com/web?pid=842503
---

கலைவெளிப் பயணி சிற்பி தனபால் = Kalaiveḷip Payaṇi Cirpi Taṇapāl / கிருஷ்ண பிரபு = Kiruśṇa Pirapu
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
127p.; ills. 23 cm.

9789355230492
200gm.
$ 7.50 / pb

(Articles by Various Author)
நுண்கலைத் துறையில் சென்னைப் பாணியை உருவாக்கியவர்களில் ஒருவர் சிற்பி தனபால். படைப்பாற்றல் மிக்க சிற்பியாகவும் இணையற்ற ஆசிரியராகவும் கலைத் துறைக்குப் பெரும்பங்காற்றியவர்.
ஓவியம் பயின்றவர்; எனினும் தனபால் தனது கலை ஊடகமாக ஏற்றுக்கொண்டது சிற்பத்தைத்தான். திராவிடக் கலை மரபையும் மேற்கத்திய நவீனத்தின் கூறுகளையும் இணைத்து அவர் உருவாக்கிய சிற்ப மரபு முன்னோடித் தன்மை கொண்டது. அவர் வடித்த ஔவையார், இயேசு, பெரியார் சிற்பங்கள் திராவிடக் கலை மரபுக்குப் புதிய திசைகாட்டிகளாக அமைந்தன. சிற்பி என்ற அளவில் அவரது படைப்புச் சாதனைகள் தனித்துவம் கொண்டவை, நிகரற்றவை. சிற்பி தனபாலின் வாழ்வையும் கலைப்பணியையும் அவருடைய பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு இந்நூல் நினைவுகூர்கிறது.
**http://www.marymartin.com/web?pid=841924**
------------------------------------------------------------------------------------------------------------
மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள் = Maṇikkoṭi Cirukatai Mutalvarkaḷ / சி. சு. செல்லப்பா = Ci. Cu. Cellappā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
169p.; 22 cm.
9789391748869
260gm.
$ 10.00 / pb

சிறுகதைக்குப் பரிமாணங்களைச் சேர்த்தவர்கள், சோதனையாளர்கள் என்று தனித்து எடுத்துச் சொல்லும்போது முதல் எட்டுப் பேர்களைத்தான் கணிக்க முடிகிறது. அவர்களது சிறுகதைகள் கிட்டத்தட்ட நூறு ஆகும். இவைதான் மணிக்கொடி களத்தில் சிறுகதைத் துறைக்கு அடித்தளம் போட்டவை என்று திட்டவட்டமாகக் கணிக்க முடிகிறது. இப்படிச் சொல்வதால் மற்றவர்கள் பங்கு இல்லை என்று கருதிவிடக் கூடாது. ஒரு சிறு அளவுக்கு உதவியவை. ஆனால் 'இம்பாக்ட்' என்கிறோமே பாதிப்பு, தாக்கம் விளைவிக்கப்பட்டது இந்த முதல்வர்களால்தான் என்பதுதான் இலக்கிய வரலாற்று ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டிய உண்மையாகும். இந்தச் சின்ன நூலில் நான் தேவையான போதிய அளவுக்கு கணிப்பு செய்து இருப்பதாகக் கூறத் துணிய மாட்டேன். சிறுகதை இலக்கிய வாசகனுக்கு இது அறிமுக முயற்சி அளவுக்குத்தான் செய்திருக்கிறேன். இந்த எட்டுப் பேர்களின் மொத்தப் படைப்புகளான சுமார் எண்ணூறு சிறுகதைகளையும் மொத்த மதிப்பீடு செய்யும்போதுதான் ஒரு 'அவாந்த கார்டே'க்கார 'எக்ஸ்பெரிமெண்டல்' சாதனைகளின் பூரணமான அல்லது அதிகபட்ச அளவீடு நிறைவேறியது ஆகும்.

அத்தகைய மதிப்பு நிர்ணயம் செய்ய முன்வர ஒரு இலக்கிய வாசகனைத் தூண்டிவிட இந்தச் சிறு நூல் உதவக்கூடும் என்று நம்புகிறேன்.
http://www.marymartin.com/web?pid=842509
----------------------------------------------------------------------------------------------------
பதிப்புத்துறை முன்னோடி முல்லை முத்தையா நூற்றாண்டு மலர் = Patipputturai Muṇṇōṭi Mullai Muttaiyā Nūrrāṇṭu Malar / மு. பழநியப்பன்; மு. இராமநாதன், மு. கருப்பையா = Mu. Palaniyappaṇ; Mu. Irāmanātaṇ, Mu. Karuppaiyā
சென்னை: முல்லை பதிப்பகம் = Mullai Patippakam, Ceṇṇai 2022
248p.; ills. 24 cm.
550gm.
$ 30.00 / pb

முல்லைப் பதிப்பக நிறுவனர் முல்லை முத்தையாவின் வாழ்க்கை நிகழ்வுகளை ஆவணப்படுத்தியுள்ள நூற்றாண்டு மலர். பதிப்புத் துறை, எழுத்துத் துறையில் முத்திரை பதித்தவர். 300க்கும் மேற்பட்ட நூல்களைத் தொகுத்தும், மொழிபெயர்த்தும், எழுதியும் உள்ளார். பாரதிதாசன் கவிதைகளை வெளியிடுவதற்காகவே பதிப்பகத்தைத் துவங்கியவர். அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., நெடுஞ்செழியன் போன்ற தலைவர்களுடனும், பாரதிதாசன், தி.ரு.வி.க., மறைமலையடிகள், கொத்தமங்கலம் சுப்பு, புதுமைப்பித்தன், கண்ணதாசன் போன்ற பிரபலமானவர்களிடமும் நெருங்கிப் பழகியவர். இவரது பன்முகத் திறனைப் பாராட்டி, அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எழுதிய கடிதங்கள், வாழ்த்து மடல்கள், கட்டுரைகள் மட்டுமின்றி நாளிதழ்களின் பாராட்டுச் செய்திகளும் மலரில் இடம் பெற்றுள்ளன.
http://www.marymartin.com/web?pid=842566
------------------------------------------------------------------------------------------
மறைக்கப்படும் ஈ.வெ. ரா = Maraikkappaṭum ī. Ve. Rā / ம. வெங்கடேசன் = Ma. Venkaṭēcaṇ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
152p.; 22 cm.
9789395272414
250gm.
$ 9.00 / pb

பெரியார் என்று விதந்தோதப்படும் ஈ.வெ. ராமசாமி அவர்களின் கருத்துகள் அனைத்தும் எவ்விதப் பாகுபாடும் இன்றி மக்கள் முன்னிலையில் முன்வைக்கப்படுவதில்லை. அவர் சொன்னவற்றில் தங்களுக்கு ஏற்ற கருத்துகளை மட்டும் சொல்லி, தங்களுக்கு வசதியான ஒரு தோற்றத்தை ஈடுபடுவதில் பெரியாரியர்கள் ஈடுபடுகிறார்கள். அதில் கணிசமான வெற்றியும் பெற்று விடுகிறார்கள்.

http://www.marymartin.com/web?pid=842740
-----------------------------------------------------------------------------------------------
வ.உ.சி.: வாராது வந்த மாமணி = Va.U.Ci.: Vārātu Vanta Māmaṇi / ஆ. இரா. வேங்கடாசலபதி = ā. Irā. Vēnkaṭācalapati
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
239p.; 22 cm.
9789355231932
350gm.
$ 14.50 / pb

கப்பலோட்டியும் செக்கிழுத்தும் தமிழரின் மனங்களில் தியாகத்தின் திருவுருவாக நீங்காத இடம்பெற்றவர் வ.உ.சி. சுதேசி இயக்கத்தில் ஈடுபட்டு, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கப்பல் கம்பெனி நடத்தி, 1908இல் கைதாகிக் கடுந்தண்டனை பெற்ற வ.உ.சி., 1912இல் விடுதலையான பிறகு 24 ஆண்டுகள் வாழ்ந்தார். வறுமையில் துன்புற்ற நிலையிலும் அவர் ஓய்ந்துவிடவில்லை. விடுதலைப் போராட்டத்தோடு தொழிலாளர் இயக்கம், பிராமணரல்லாதார் இயக்கம், சமயச் சீர்திருத்தம், தமிழ் மறுமலர்ச்சி என்று பல துறைகளிலும் பங்குகொண்டார். ஆனால் வ.உ.சி.யின் தொண்டுக்கும் தியாகத்துக்கும் உரிய அறிந்தேற்பு கிடைக்கவில்லை என்பது தமிழ்ச் சமூகத்தின் ஒருமித்த கருத்து. வ.உ.சி. பற்றி அவர் காலத்தில் வந்த பதிவுகளை ஆவணப்படுத்தி, அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வேண்டும் முயற்சியாக இந்த நூல் அமைகின்றது.
வ.உ.சி.யின் புகழ் ஓங்கியிருந்த காலத்தில் வெளிவந்த அவருடைய வாழ்க்கை வரலாறுகளையும், அவர் மறைந்தபொழுது வெளியான இரங்கலுரைகளையும் பிற ஆவணங்களையும் கொண்டதாக இத்தொகுப்பு அமைகின்றது.
http://www.marymartin.com/web?pid=843615
-----------------------------------------------------------------------------------------------
வ.உ.சி. யின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் = Va.U.Ci.Yiṇ Vālkkai Varalārum Ilakkiyap Paṇikaḷum / அ. சங்கரவள்ளி நாயகம் = A. Cankaravaḷḷi Nāyakam
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṇṇai 2022
314p.; 22 cm.
9789391947125
450gm.
$ 16.50 / pb

வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், பிரபலமாக ‘வ. உ. சி’ என்று அழைக்கப்பட்டார். அவர், 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் இந்தியாவின் மிக முக்கியமான வழக்கறிஞர்களுள் ஒருவரும் கூட. தனது சொந்த மாநிலமான தமிழ்நாட்டில் வலுவான தொழிற்சங்கங்கள் இயங்க தலைமை வகித்தாலும், ஆங்கிலேயர்களிடமிருந்து இந்திய சுதந்திரத்திற்காக போராடினார். தூத்துக்குடி மற்றும் கொழும்பு

இடையே முதல் உள்நாட்டு கப்பல் சேவை அமைத்த மனிதர் என எல்லோராலும் நினைவு கூறப்படுகிறார். அவருக்கு, புரட்சி மனப்பான்மையும், ஆங்கிலேயருக்கு எதிராக தைரியமாக செயல்படும் திறனும் இருந்ததால், அவரது 'பாரிஸ்டர் பட்டம்' பறிக்கப்பட்டது. அவரது துணிச்சலான தன்மையே அவருக்கு 'கப்பலோட்டிய தமிழன்' என்று தமிழ்நாட்டில் பெயரெடுக்க வைத்தது. இதனையே ஆங்கிலத்தில், 'தமிழ் ஹெல்ம்ஸ்மேன்' என்று கூறுகின்றனர். 'கப்பலோட்டிய தமிழன்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் அவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் சுதந்திரத்திற்காக அவஇது பங்களிப்பைப் பற்றி மேலுமறிய தொடர்ந்து படிக்கவும்.
http://www.marymartin.com/web?pid=843614
------------------------------------------------------------------------------------------------------------
நான் கண்ட எழுத்தாளர்கள் = Nāṉ Kaṇṭa Eluttāḷarkaḷ / கு. அழகிரிசாமி; பழ. அதியமான் = Ku. Alakiricāmi; Pala. Atiyamāṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
215p.; ills. 22 cm.
9789355231994
350gm.
$ 13.75 / pb

புதுமைப்பித்தன், வ.ரா., தி.ஜ.ர., டி.எஸ். சொக்கலிங்கம் உள்ளிட்ட நவீன எழுத்தாளர்கள், டி.கே.சி., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு.வி.க., வெ. சாமிநாத சர்மா, வெ.ப. சுப்பிரமணிய முதலியார் போன்ற பழந்தமிழ் அறிஞர்கள் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளைப் பற்றி கு. அழகிரிசாமி எழுதிய நினைவுரைகள் இந்த நூல். இசைக் கலைஞர் காருகுறிச்சி அருணாசலம், பதிப்பாளர் சக்தி வை. கோவிந்தன், மஞ்சேரி ஈஸ்வரன், தொ.மு.சி. ரகுநாதன், துறைவன், ர.பா.மு. கனி ஆகிய எழுத்தாளர்கள் பற்றிய நினைவுக் குறிப்புகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.
http://www.marymartin.com/web?pid=841906
------------------------------------------------------------------------------------------------------------
யாமரிந்த புலவன் (நூறாண்டு கட்டுரைத் திரட்டு) = Yāmarinta Pulavaṉ (Nūrāṇṭu Kaṭṭurait Tiraṭṭu) / கடற்கரய் மத்தவிலாச அங்கதம் = Kaṭarkaray Mattavilāca Ankatam
சென்னை: பதிகம் பதிப்பகம் = Patikam Patippakam, Ceṉṉai 2022
1359p.; 23 cm.
9788195480319
1700gm.
$ 75.00 / hb

Reviews of Subramania Bharathi Works

பாரதியின் நினைவு நூற்றாண்டை ஒட்டி அவரது ஆளுமையை இளம் தலைமுறையினர் அறியும் வகையில் 'யாமறிந்த புலவன்' என்ற நூலை

நான் ஆய்வு செய்து உருவாக்கி உள்ளேன். இந்த நூல் 1918 ஆம் ஆண்டு முதல் 2021 வரை கடந்த நூறு ஆண்டுகள் பாரதி பற்றி பல்வேறு கருத்தியலை முன்வைத்து எழுதப்பட்டுள்ள விமர்சன புத்தகம்.

எனது 13 ஆண்டுக்கால உழைப்பு மொத்தம் 1400 பக்கங்களில் மிகப் பிரமாண்டமாக உருவாகி உள்ளது. பாரதி நண்பர் வ.வெ.சு. ஐயர் தொடங்கி கலைஞர் முதல் பல்வேறு தலைவர்களின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. எனது 13 ஆண்டுக்கால ஆராய்ச்சி இந்தப் புத்தகம். காலத்தால் அழியும் நிலையிலிருந்த பல படைப்புகளை மீட்டுத் தந்துள்ளேன். அதில் உள்ள பல படைப்புகள் 100 ஆண்டுகள் கழித்து முதன்முறையாக நூலாகி உள்ளது.
**http://www.marymartin.com/web?pid=841922**
----------------------------------------------------------------------------------------------
மாறாது என்று எதுவுமில்லை: பெஜவாடா வில்சன் நேர்காணல் = Mārātu Eṉṟu Etuvumillai: Pejavāṭā Vilcaṉ Nērkāṇal / பெருமாள்முருகன் = Perumāḷmurukaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
127p.; 22 cm.
9789355233011
200gm.
$ 8.00 / pb

பெஜவாடா வில்சனிடம் கண்ட விரிவான நேர்காணல் நூல் இது. இதன் முதல் பகுதி ‘காலச்சுவடு’ இதழில் (டிசம்பர் 2017) வெளியாகி மிகுந்த கவனம் பெற்றது. கையால் மலம் அள்ளும் வேலையை ஒழிப்பதற்காகவும் துப்புரவுப் பணியாளர்களுக்காகவும் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டுவருபவர் வில்சன். கையால் மலம் அள்ளும் முறை ஒழிப்பு, துப்புரவுப் பணி ஆகியவை குறித்த பல்வேறு பார்வைகளையும் சட்டப் போராட்டங்களையும் அவர் பேசியுள்ளார். தனது அரசியல், சமூகப் பார்வைகளைப் பேசியுள்ளார். தன் தனிப்பட்ட வாழ்வு குறித்துப் பேசியிருக்கிறார். அவர் பேசியவை நமக்கு அறிவூட்டுகின்றன; புதுவெளிச்சத்தைக் கொடுக்கின்றன; மனசாட்சியை உலுக்குகின்றன. கழிவகற்றும் தொழிலுக்குப் பின்னால் செயல்படும் சாதிய மனோபாவத்தை வெளிப்படையாகவும் நுட்பமாகவும் எடுத்துக் காட்டுகிறார். பல்வேறு கேள்விகளை எழுப்புகிறார். எல்லோரது பொறுப்புணர்வையும் சுட்டிக் காட்டுகிறார். ‘மாறாது என்று எதுவுமில்லை’ என்கிறார் வில்சன். இதை வாசிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் குறைந்தபட்ச மாற்றமாவது உருவாகும் என்பது என் நம்பிக்கை. இதை நூலாக்கம் செய்வதற்கு இந்த நம்பிக்கையே காரணம்.
**http://www.marymartin.com/web?pid=843386**
----------------------------------------------------------------------------------------------
சுகுமாரன் நேர்காணல்கள் = Cukumāraṉ Nērkāṇalkaḷ / சுகுமாரன் = Cukumāraṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022

231p.; 22 cm.
9789355232809
300gm.
$ 14.50 / pb

படைப்பாளனாகக் கவிதையிலும் புனைகதைகளிலும் கட்டுரைகளிலும் சொல்ல இயலாதவற்றையும் சொல்லத் தவறியவற்றையும் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பாகவே நேர்காணல்களைக் காண்கிறேன். முதன்மையாக இலக்கியத்தையும் அதன் உடன் நிகழ்வாகப் பிற துறைகளையும் பற்றிய கருத்துப் பரிமாற்றத்துக்கே நேர்முகங்களில் முயன்றிருக்கிறேன். எனது பார்வைகள், அக்கறைகள், சார்புகள், விருப்பங்கள், மறுப்புகள், விழுமியங்கள், நிலைப்பாடுகள் ஆகியவற்றை இந்த நேர்காணல்கள் வெளிப்படுத்த வேண்டும் என்பது ஆசை. வெளிப்படுத்துகின்றன என்பது நம்பிக்கை.
**http://www.marymartin.com/web?pid=843109**
----------------------------------------------------------------------------------------------------
ஹரித்ரா நதி = Haritrā Nati / ஆர்.வி. எஸ் = ār. Vi.Es
சென்னை: கிழக்கு பதிப்பகம் = Kilakku Patippakam, Ceṉṉai 2022
197p.; 22 cm.
9789393958177
300gm.
$ 11.25 / pb

ஹரித்ரா நதி நாஸ்டால்ஜியா என்ற நனைவிடைத் தோய்தல் எப்போதும் வசீகரமானது. எழுத்தாளரும் வாசகரும் சேர்ந்து அமர்ந்திருக்கும் பள்ளிக்கூட வகுப்பு மர பெஞ்ச் அது. உத்தமதானபுரம் பற்றி எழுதி ‘என் சரித்திரம்’ என்ற தம் வரலாற்றைத் தொடங்கிய தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யரும், தாம் பிறந்த சிவகங்கை பற்றி எழுதிய கவியோகி சுத்தானந்த பாரதியாரும், வலங்கைமான் குறித்து எழுதிய ரைட் ஹானரபில் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரும், யாழ்ப்பாணம் பற்றிக் கட்டுரை வடித்த எஸ். பொன்னுதுரையும் சந்திக்கும் காலம், இடம் கடந்த வெளி இந்த பிள்ளைப் பருவ நினைவுப் பரப்பு. பின்னாட்களில் சுஜாதாவின் ‘ஸ்ரீரங்கத்துத் தேவதை’யில் இந்த ழானர் (எஹுணணூஹு) புத்துயிர் பெற்றது. எவ்வளவு எழுதினாலும், எவ்வளவு படித்தாலும் நினைவுகளை அசைபோட்டு நடக்கும் உலா அலுப்பதே இல்லை. நானும் எழுதியிருக்கிறேன். இப்போது பளிச்சென்று ஒளிரும் நட்சத்திரமாக ஆர்.வி. எஸ், மன்னார்குடி நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்.
**http://www.marymartin.com/web?pid=841903**
------------------------------------------------------------------------------------------

## Cinema / Film Studies

திரைப்படச் சோலை = Tiraippaṭac Cōlai / சிவக்குமார் = Civakkumār

சென்னை: தமிழ் திசை = Tamil Ticai, Ceṇṇai 2022
215p.; ills. 25 cm.
9788195703517
450gm.
$ 17.50 / pb

பன்முகக் கலைஞர் சிவகுமார், தனது வாழ்க்கையின் மிக முக்கியமான தருணங்களை ‘இது ராஜபாட்டை அல்ல’ என்கிற சுயசரிதை நூலாகப் படைத்தார். தமிழின் தலை சிறந்த வழிகாட்டி நூல்களில் ஒன்றாக, தமிழ் சினிமாவின் முக்கிய வரலாற்று நூல்களில் ஒன்றாக விளங்கிவரும் அந்நூலுக்குப் பின்னர், இனி எழுதுவதற்கு அவரிடம் எதுவும் மிச்சமில்லை என்றுதான் வாசகர் உலகமும் திரையுலகமும் எண்ணிக்கொண்டிருந்தன. ஆனால், அது உண்மையல்ல என்பதை எழுத்து, மேடைப்பேச்சு ஆகிய தளங்களில் அவரது தொடர்ச்சியான செயல்பாடுகள் நிரூபித்து வருகின்றன. திரையுலகம் குறித்து அள்ள அள்ளக் குறையாத தன் வாழ்வனுபவத்தின் நினைவுகளை மீட்டியும் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அன்றாடம் எழுதி வந்துள்ள தனது டைரிக் குறிப்புகளிலிருந்தும் சிவகுமார் பேசவோ எழுதவோ தொடங்கினால், அதிலிருந்து வாழ்ந்து மறைந்தவர்கள் உயிரோடு எழுந்து வருவதைக் காண முடியும். வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கோ அவரது எழுத்து பெரும் அங்கீகாரமாக மாறிவிடும். அவ்வளவு நினைவுகளையும் அறத்தின் பக்கம் நின்று அடுத்த தலைமுறைக்கு அச்சுப் பிசகாமல், உணர்வு குன்றாமல் கடத்திவிடுவதில் சிவகுமாருக்கு நிகர் அவர் மட்டும்தான். உண்மையும் வசீகரமும் நிறைந்த எழுத்துக்குச் சொந்தக்காரராக விளங்கும் அவர், இந்து தமிழ் திசையில் கரோனா காலத்தில் படைத்த வெற்றித் தொடர்கள் பல. அவற்றில் ‘திரைப்படச் சோலை’க்காக வாரம் தோறும் வாசகர்கள் காத்திருந்து வாசித்தார்கள். 50 வாரங்கள் அதிசயிக்க வைத்த ‘திரைப்படச் சோலை’ தொடர்தான் இப்போது புத்தக வடிவம் பெற்று மனதை கணக்கச் செய்யும் கனமான நூலாக இப்போது உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=843575**
---------------------------------------------------------------------------------------------
காந்தி காலத் திரைப்படங்கள் = Kānti Kālat Tiraippaṭankaḷ / ச. முத்துவேல் = Ca. Muttuvēl
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022
126p.; ills. 22 cm.
9789393650474
250gm.
$ 8.00 / pb

தமிழ் திரை வரலாற்றில் சில அரிய கண்டுபிடிப்புகளையும், முன்னேற்றங்களையும் இந்த கட்டுரைகள் உள்ளடக்கியுள்ளன. இந்திய சினிமா வரலாற்றிலும் சில மாற்றங்களைக் கோரும் இந்தக் கட்டுரைகள் உயிர்மை, காலச்சுவடு ஆகிய இதழ்களில்

வெளியானவை. தீவிரமான ஆர்வமும், தேடலுமே இக்கட்டுரைகளை சாத்தியப்படுத்தியுள்ளது. அரிய, புதிய தகவல்களுக்காகவும், சான்றாவணங்களுக்காகவும் ஒரு குறிப்பு: நூலாக பாதுகாக்கப்பட வேண்டிய நூ ல் இது, காளிதாஸ், ஹரிச்சந்திரா, காலவ மஹரிஷி ஆகிய தமிழ் பேசும்படங்களைப் பற்றிய புதிய, விரிவான கண்டுபிடிப்புகளை கொண்ட கட்டுரைகள் தனித்துவமானவை. ஆய்வாளர்கள், வரலாற்றாளர்கள் மட்டுமல்லாமல் திரைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தாக்கங்களையும் அலசுவதால் அனைவரின் வாசிப்புக்கும் உரிய நூலாகிறது.
**http://www.marymartin.com/web?pid=843578**
------------------------------------------------------------------------------------------
மனசில் பதிஞ்ச திரைச் சுவடுகள் = Maṇacil Patiñca Tiraic Cuvaṭukaḷ / மு. இராமசுவாமி = Mu. Irāmacuvāmi
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
382p.; ills. 25 cm.
9788123442297
850gm.
$ 32.50 / hb

ஒரு திரைப்படத்தை எப்படியெல்லாம் அலசமுடியும் என்பதற்கு இந்த விமரிசனங்கள் உதவுமாயின், அதுவே இந்த நூலின் பயனாயிருக்கும். பெரும்பாலு அதுவே இந்த நூலின் பயனாயிருக்கும். பெரும்பாலும் கதையின் அமைப்பைக் கொண்டு செலுத்துகிற, அதற்குள் புதைந்திருக்கும் படிமக் குறியீடுகளை, சமூக, அழகியல் தளங்களை, விமரிசனம் என்ற பெயரில் சமூக மேற்தளத்திற்கு எடுத்துக் கொண்டுவருவது. மட்டுமே இக்கட்டுரைகளின் நோக்கமாகும்.
**http://www.marymartin.com/web?pid=843581**
------------------------------------------------------------------------------------------

## Education

கற்பித்தல் என்னும் கலை = Karpittal Eṇṇum Kalai / சரஸ்வதி ஸ்ரீநிவாஸன் = Carasvati Srīnivāsaṇ
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Ceṇṇai 2022
256p.; 22 cm.
9788195630417
350gm.
$ 10.50 / pb
**http://www.marymartin.com/web?pid=842815**
------------------------------------------------------------------------------------
தமிழில் பிழையின்றி எழுதலாம்! = Tamilil Pilaiyiṇri Elutalām! / நா. கோபாலகிருஷ்ணன் = Nā. Kōpālakiruśṇaṇ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
111p.; 22 cm.

9789395272346
200gm.
$ 7.00 / pb

* தமிழில் எழுதும்போது பிழையில்லாமல் எழுத நினைக்கிறீர்களா?
* எளிமையான புத்தகம் ஒன்று இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கிறீர்களா?
* ஒரு நண்பனைப் போல அருகே இருந்து பொறுமையாக, இனிமையாகச் சொல்லிக் கொடுத்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கிறீர்களா?
* மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சேர்த்து ஒரே புத்தகமாக இருந்தால் நல்லது என்று நினைக்கிறீர்களா?
நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் புத்தகம் இதுதான்.

நா. கோபாலகிருஷ்ணன் ஒரு நண்பனைப் போலச் சொல்லித் தருகிறார். தமிழில் பிழையின்றி எழுத இந்தப் புத்தகம் உங்களுக்கு வழிகாட்டும்.

அடிப்படை இலக்கணத்தைச் சொல்லி, அதன்பின்னர் பிழையின்றி எழுதச் சொல்லித் தருகிறார் இந்த நூலின் ஆசிரியர். அதனால் படித்தது மறக்கவே மறக்காது என்று உறுதியாகச் சொல்லலாம்.
**http://www.marymartin.com/web?pid=843165**
-----------------------------------------------------------------------------------------
தமிழ் பயிற்றுமொழி: கனவும் நனவும் = Tamil Payirrumoli: Kaṇavum Naṇavum / சு. நரேந்திரன் = Cu. Narēntiraṇ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
304p.; 22 cm.
9788123443058
400gm.
$ 17.00 / pb

தாய்மொழியில் ஒருவது கல்வியும் வழிபாடும் அமையுமானல் அவரது வாழ்க்கைத் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் தாய்மொழிக்கல்வி என்பது மாணவர்களுக்கு அவாகளின் அடிப்படைக் கல்வியான தொடக்கப் பள்ளிக் கல்வியில் இருந்து வழங்கப்பட வேண்டும். அவ்வகையில் நமது தாய்மொழியான தமிழ்வழிக் கல்வியின் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.
**http://www.marymartin.com/web?pid=841937**
----------------------------------------------------------------------------------------------------
மயிர்தான் பிரச்சினையா? (கல்விசார் கட்டுரைகள்) = Mayirtāṇ Piracciṇaiyā? (Kalvicār Kaṭṭuraikaḷ) / பெருமாள்முருகன் = Perumāḷmurukaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil, 2022

167p.; 22 cm.
9789355232991
250gm.
$ 10.00 / pb

நம் கல்விமுறையில் நிலவும் நடைமுறைப் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதிய கட்டுரைகள் இவை. கல்வி இன்று சேவையாக இல்லை; தொழிலாக இருக்கிறது. கல்வி பற்றிய புனித பிம்பங்கள் உதிர்ந்துவிட்டன. இச்சூழலில் கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளை வெளியுலகப் பார்வைக்கு வைக்கும் நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. மாணவர்களை நோக்கியதாகப் பாடத்திட்டம், கற்பித்தல் முறை, ஆசிரிய அணுகுமுறை, அரசுத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்தும் இருக்க வேண்டும் என்னும் பார்வையை அடிப்படையாகக் கொண்ட இவை வெளியானபோது பல்வேறு எதிர்வினைகளைப் பெற்றவை.
**http://www.marymartin.com/web?pid=841888**
------------------------------------------------------------------------------------------

## Ecology / Environment

மைலாஞ்சியும் மதிவதனியும் = Mailāñciyum Mativataṇiyum / ஆட்டனத்தி = āṭṭaṇatti
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṇṇai 2022
115p.; 21cm.
9788123442198
200gm.
$ 6.00 / pb

மலைகள், காடுகள், குகைகள், ஆறுகள், கிராமங்கள் எதுவாக இருந்தாலும் இத்தொகுப்புக் கதைகளில் உயிரோட்டமாக விளங்குவது மனிதாபிமானம். நேர்மையான அலுவலர். பிரச்சினைகள் இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. அவற்றை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். யதார்த்த பூர்வமாகச் சிறுகதைகளைப் படைத்த ஆட்டனத்தி அவர்கள், நல்லதொரு படைப்பாளி என்பதில் ஐயம் ஏதும் இல்லை.
**http://www.marymartin.com/web?pid=841989**
------------------------------------------------------------------------------------------------

## Economics

சேற்றில் மனிதர்கள் = Cērril Maṇitarkaḷ / ராஜம் கிருஷ்ணன் = Rājam Kiruśṇaṇ
சென்னை: ஸ்ரீசெண்பா பதிப்பகம் = Srīceṇpā Patippakam, Ceṇṇai 2023
278p.; 22 cm.
350gm.

$ 14.00 / pb

ஒரு நாட்டின் முதுகெலும்பே அந்நாட்டின் விவசாயம் தான் கடவுள் என்ற முதலாளியின் ஒரே தொழிலாளி விவசாயி. சங்க இலக்கியங்களில் “வரப்புயர நீருயர, நீருயர நெல்லுயர, நெல்லுயரக் குடியுயர, என்று உழவின் மேன்மையைப் பற்றி ஔவைப்பிராட்டியும் 'சுழன்று மேர்ப்பின்ன துலகம்' என்றும் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும் வள்ளுவர் இத்தொழிலின் புகழை இசைக்கிறார்கள். அப்படிப்பட்ட உழவுத்தொழில் புரியும் நம் விவசாயிகளின் நிலை தற்ப்போது என்ன..
**http://www.marymartin.com/web?pid=843496**
--------------------------------------------------------------------------------------------

## Cooking

இயற்கையின் குழந்தை மனிதன்: வீட்டுச் சமையல் பொருட்கள் பற்றிய விளக்கங்கள் (Part 1) = Iyarkaiyiṇ Kulantai Maṇitaṇ: Vīṭṭuc Camaiyal Poruṭkaḷ Parriya Viḷakkankaḷ (Part 1) / போப்பு = Pōppu
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2022
172p.; 22cm.
280gm.
$ 9.00 / pb

உணவு பற்றிய ஒரு புத்தகத்தில் உணவை மையமாகக்கொண்டு மரபு, சுற்றுச்சூழல், பொதுவுடமை, உலக அரசியல் மற்றும் உள்ளூர் அரசியல் எல்லாவற்றைப் பற்றியும் ஒரு பரந்த பார்வையை முன்வைக்கிறார். காலச்சக்கரத்தில் பின்னோக்கிச் சென்றது போல் சுண்ணாம்புக் காளவாய் தெருவும் எண்ணெய் மணக்கும் செக்கடியும் அதில் சுழலும் மாட்டின் மணிச் சத்தமும் இலுப்பை மர நிழலும் குளுகுளு பதநீரும் இன்னும் இன்னும் நாம் இழந்தவை எல்லாம் நினைத்து பெரும் ஏக்கமே ஏற்பட்டு விடுகிறது. மனிதன் இயற்கையின் குழந்தை என்கிற வகையில் இயற்கையின் நலம்தான் மனிதனின் நலம், இயற்கையோடு இயைந்து வாழ்வதே நம் முன் இருக்கும் ஒரே தீர்வு என்பதை நம் மரபுசார்ந்த உணவுப்பழக்கங்கள் வாயிலாக முன்வைக்கிறது இப்புத்தகம்.
**http://www.marymartin.com/web?pid=841967**
-----------------------------------------------------------------------------------------------
இயற்கையின் குழந்தை மனிதன்: பழங்கள் பற்றிய விளக்கங்கள் (Part 2) = Iyarkaiyiṇ Kulantai Maṇitaṇ: Palankaḷ Parriya Viḷakkankaḷ (Part 2) / போப்பு = Pōppu
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2022
173p.; 22 cm.
300gm.
$ 9.00 / pb

தலையில் செதில் செதிலாக பொடுகு உதிருமென்றால் அது தலையில் அழுக்கு சேர்ந்ததன் விளைவல்ல. பெருங்குடலில் வறட்சியும், வெப்பமும் மிகுந்து விடுவதன் வெளிப்பாடே ஆகும். எனவே பொடுகினைப் போக்க என்ன சாம்பு போடலாம் என்று விளம்பரத்தையும், கூகுலையும் தேடுவதை விடுத்து பெருங்குடல் வறட்சியைப் போக்க என்ன உண்பது என்று அதற்குரிய வழியைத் தேட வேண்டும் என்கிறது இதில் உள்ள ஒரு கட்டுரை. மகளிரில் சீரான உதிரப்போக்கு உடையோர் அரிதாகிக் கொண்டே வருவது குறித்து நூல் விவாதிக்கும் இடங்கள், அதைக் களையும் வழிமுறைகள், விரதத்தின் சமூகப் பயன்பாடு மற்றும் அதைக் கையாள்வது குறித்த எச்சரிக்கைகள் என சொற்ப வார்த்தைகளின் தெளிவாகச் சொல்லும் பல கட்டுரைகள் இருக்கின்றன. இப்படியான விஷயங்களைச் சொல்வதற்கு தமிழை இவ்வளவு இலகுவாகப் பயன்படுத்த முடியுமா என்பதே ஆச்சர்யமாக இருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=841968**

---

## Health & Medicine

உணவே மருந்து = Uṇavē Maruntu / உஷா நரயணன் = Uśā Narayaṇaṉ
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṉ Patippakam, Ceṉṉai 2022
231p.; 22cm.
9788195630462
300gm.
$ 9.50 / pb

நாம் தினசரி பயன்படுத்தும் உணவுப்பொருட்களே நமக்கு வரும் நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன என்பதைப் பற்றியும், அவற்றில் அடங்கியுள்ள மருத்துவக் குணங்கள் ஊட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் த்துக்களைப் பற்றிய விழிப்புணர்வை தகுதி வாய்ந்த ஒரு ஊட்டச்சத்து நிபுணரின் ஆலோசனையுடன் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் உதித்ததுதான் "உணவே மருந்து" என்னும் இந்த நூலின் நோக்கம்.
**http://www.marymartin.com/web?pid=841976**

---

அப்பென்டிசைடிஸ் முதல் மூலம் வரை மருத்துவம் = Appeṉṭicaiṭis Mutal Mūlam Varai Maruttuvam / ந. ஜூனியர் சுந்தரேஷ் = Na. Jūṉiyar Cuntarēś
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṉṉai 2022
94p.; 21cm.
9788123442792
150gm.
$ 5.50 / pb

டாக்டர் ந. ஜூனியர் சுந்தரேஷ், எம். எஸ்., பி. எச்.டி., எப்.ஆர்.சி.எஸ். (கிளாஸ்கோ)

* அறுவை சிகிச்சைப் பேராசிரியர், இராஈஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, சிதம்பாம்.
ஈ இரைப்பை உள்நோக்கி, ரோபாடிக் அறுவை. துனை அனுவை சிறப்பு வருத்துவர்

* முனைவர் பட்டம் – துனை அனுவை சிகிச்சை குறித்த ஆய்வு 2013உ தளை அறுவை இரைப்பை உள்நோக்கி – பிரான்ஸ், ஜெர்மனியில் பயிற்சி, 2008
தமிழ்நாடு ட எம்.ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், கழகம், பெங்களுரு, பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் தேர்வு ஆய்வுக்குழு உறுப்பினர் * பள்ளாட்டு மருத்துவ இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள்: 05. பள்ளட்டு கருத்தரங்குகளில் படித்தளித்த கட்டுரைகள்: 312 தேசிய அளவில் துகருத்தரங்குகளில் படித்தளித்த கட்டுரைகள்: 15 பண்ணட்டு இப் மாநாடுகளில் மருத்துவ ஆராய்ச்சி குறித்து ஆய்வுகளில் கலந்து கொண்டது. 34

மருத்துவ ஆய்வு – கலந்து கொண்ட தேசியக் கருத்தரங்குகள்: -5
மருத்துவ தேசிய கருத்தாங்கு நடத்தியது. 18
ஆசிரியர். செரிமான அறுவை மருத்துவம், பாடநூல் தமிழில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு
மருத்துவத் தமிழில் வெளியந்த கட்டுரைகள்26
சிதம்பரம் அரிமா சங்கம் – மருந்துவக் கையேடு ஆசிரியர்:10
5 நோயாளிகளைச் சோதனை செய்து இலபா பருந்து முகாங்கள் நடத்தியது – 150
* பொதுமக்களுக்கான மருத்துவச் சொற்பொழிவு –51.
**http://www.marymartin.com/web?pid=835418**
----------------------------------------------------------------------------------------------------------
வளம் தரும் நெல்லி = Vaḷam Tarum Nelli / கே. எஸ். சண்முகம் = Kē. Es. Caṇmukam
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், = Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṇṇai 2022
205p.; 22cm.
9788123443898
250gm.
$ 13.00 / pb

சீர்மிகு நெல்லிப் பயிரை சிறப்பாகச் சாகுபடி செய்வதற்கு உதவும் வகையில் ‘வளம் தரும் நெல்லி எனும் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த முழுநூலில், நெல்லிப் பயிரை வெற்றிகரமாக சாகுபடி செய்வதற்கான அதிநவீன அறிவியல் தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்முறை தொழில்நுட்பங்கள் யாவும் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. குறிப்பாக புதிய நெல்லி ரகங்கள். மண் மேலாண்மை.

பாசன மேலாண்மை, உர மேலாண்மை, சொட்டுநீர் பாசனம். ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு. அறுவடை முறைகள், அறுவடை பின்சார் முறைகள். மதிப்புக் கூட்டுதல் ஆகியவை பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.
நெல்லி, வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. குறைந்த நீர்த் தேவை கொண்டது. வளங்குறைந்த வறண்ட நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்றது. இதை மானாவாரிப் பயிராகவும், பாசனப் பயிராகவும் பயிரிடலாம். நெல்லி. சாகுபடி சிரமம் குறைந்தது. செலவு குறைந்தது. நெல்லி சாகுபடிக்கு அரசு மானியம் அளிக்கப்படுகிறது. இது சிறு, குறு விவசாயிகளுக்கு சாலச் சிறந்தது. முதல் மூன்று ஆண்டுகள் நெல்லிப் பயிரை முறையாகப் பராமரித்துவிட்டால் போதும். அதற்குப் பிறகு அது தானாகவே தன்னைப் பராமரித்துக்கொள்ளும். மூன்றாம் ஆண்டு முடிவில் காய்ப்புக்கு வந்துவிடும். ஐம்பது ஆண்டுகள் வரை காய்த்துக்கொண்டிருக்கும். நெல்லி நல்லதொரு பணப்பயிர்.
இயற்கை வேளாண்மை முறையில் விளைவிக்கப்படும் நெல்லிக் காய்களுக்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்புகள் உள்ளன. அவைகளுக்கு கூடுதல் விலை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது.
**http://www.marymartin.com/web?pid=841969**
---------------------------------------------------------------------------------------------------

வாய்ப்புண் முதல் மலச்சிக்கல் வரை மருத்துவம் = Vāyppuṇ Mutal Malaccikkal Varai Maruttuvam / ந. ஜூனியர் சுந்தரேஷ் = Na. Jūṇiyar Cuntarēṣ்
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்= Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṉṉai 2022
105p.; 22cm.
9788123442815
180gm.
$ 6.50 / pb

டாக்டர் ந. ஜூனியர் சுந்தரேஷ்.
எம். எஸ்., பி. எச்.டி, எப்.ஆர்.சி.எஸ். (கிளாஸ்கோ)

அறுவை சிகிச்சைப் பேராசிரியர், இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி சிதம்பரம்.
இரைப்பை உள்நோக்கி, ரோபாடிக் அறுவை, துனை அனுவை சிறப்பு மருத்துவர்
* முனைவர் பட்டம் – துனை அறுவை சிகிச்சை குறித்த ஆய்வு – 2013 துனை அனுவை இரைப்பை உள்நோக்கி பிரான்ஸ், ஜெர்மனியில் பயிற்சி, 2008
* தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெங்களூரு பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் தேர்வு ஆய்வுக்குழு உறுப்பினர்
* பள்ளாட்டு மருந்துவ இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள்: 65

* பன்னாட்டு மருத்துவ கருத்தரங்குகளில் படித்தளித்த கட்டுரைகள்:112-
* தேசிய அளவில் மருத்துவ கருத்தரங்குகளில் படித்தளிந்த கட்டுரைகள்: 15
பன்னாட்டு மருத்துவ மாநாடுகளில் மருத்துவ ஆராய்ச்சி குறித்து ஆய்வுகளில் கலந்து கொண்டது 34
* மருத்துவ ஆய்வு – கலந்து கொண்ட தேசியக் கருத்தரங்குகள்56
மருத்துவ தேசிய கருத்தரங்கு நடத்தியது 18
ஆசிரியர், செரிமான அறுவை மருத்துவம், பாடநூல் தமிழில் தஞ்சை தமிழ்ப் கலைக்கழகம் வெளியீடு
மருத்துவத் தமிழில் வெளிவந்த கட்டுரைகள்: 20
சிதம்பரம் அரிமா சங்கம் – மருத்துவக் கையேடு ஆசிரியர்: 10
நோயாளிகளைச் சோதனை செய்து இலவச மருந்துவ முகாம்கள் நடத்திய 150 பொதுமக்களுக்கான மருத்துவச் சொற்பொழியு – 51
பட்டங்கள் & விருதுகள்
**http://www.marymartin.com/web?pid=841970**
--------------------------------------------------------------------------------------------
பித்தப்பைக் கல் முதல் கணைய வீக்கம் வரை மருத்துவம் = Pittappaik Kal Mutal Kaṇaiya Vīkkam Varai Maruttuvam
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்= Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṇṇai 2022
92p.; 21cm.
9788123442822
150gm.
$ 5.50 / pb

வாய் முதல் ஆசன உணவுப்பாதை வரையில் ஏற்படும் நோய்கள் குறித்து எளிய முறையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுதப்பட்ட நூல் இது.
மனிதர்கள் வாழ்வில் சந்திக்கும் உணவு மண்டலத்தின் மிக முக்கிய நோய்கள் குறித்து தெளிவாக, விளக்கமாக எழுதியுள்ளார். இந்நூல் மருத்துவரின் தமிழ் வளமையையும், அவரது துறை சார்த்த அறிவையும் பறைசாற்றுகிறது. இந்நூல் அறிவியல் உலகின் அவசியத் தேவை எனில் மிகையாகாது.
**http://www.marymartin.com/web?pid=841971**
------------------------------------------------------------------------------------------------------
நெஞ்செறிவு முதல் வயிற்றுப்புண் வரை மருத்துவம் = Neñcerivu Mutal Vayirruppuṇ Varai Maruttuvam / ந. ஜூனியர் சுந்தரேஷ் = Na. Jūṇiyar Cuntarēś
2022
108p.; 21cm.
9788123442808
180gm.
$ 6.50 / pb

டாக்டர் ந. ஜூனியர் சுந்தரேஷ்,

எம். எஸ்., பி.எச்.டி., எப்.ஆர்.சி.எஸ். (கிளாஸ்கோ)
* அறுவை சிகிச்சைப் பேராசிரியர், இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, சிதம்பரம்,
* இரைப்பை உள்நோக்கி, ரோபாடிக் அறுவை, துளை அறுவை சிறப்பு மருத்துவ
* முனைவர் பட்டம் – துளை அறுவை சிகிச்சை குறித்த ஆய்வு – 2013
துனை அறுவை இரைப்பை உள்நோக்கி பிரான்ஸ்,
ஜெர்மனியில் பயிற்சி 2000
* தமிழ்நாடு டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெங்களுரு பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் தேர்வு ஆய்வுக்குழு உறுப்பினர்
http://www.marymartin.com/web?pid=841977
---------------------------------------------------------------------------------------------
உணவு உடல்நலம் அறிவியல்: அ முதல் ஃ வரை = Uṇavu Uṭalnalam Ariviyal: A Mutal ஃ Varai / யோகாம்பாள் திருநாவுக்கரசு = Yōkāmpāḷ Tirunāvukkaracu
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
188p.; 22cm.
9789395272506
300gm.
$ 11.00 / pb

எது நல்ல உணவு? உணவின் கூறுகள் யாவை? நாம் உண்ணும் உணவு, எவ்வகையில் உடலின் அடிப்படை இயக்கங்களில் மாற்றங்களைத் தோற்றுவிக்கிறது? குப்பை உணவுகள் எவ்விதம் நம் வாழ்வை நரகமாக்குகின்றன? வாழ்வியல் நோய்களை எவ்விதம் அணுகுவது? உணவு முறை மாற்றத்தின் மூலம் நோய்களை எப்படி எதிர்கொள்வது? இவை போன்ற கேள்விகளுக்கு ஊட்டச்சத்தியல் ஆலோசகர் ஒருவரின் பார்வையில் இந்நூல் விடையளிக்கிறது. உடல்நலத்தில் நாட்டம் கொண்ட ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம் இது. யோகாம்பாள் திருநாவுக்கரசு அடிப்படையில் ஒரு பொறியாளர். ஆனால், உணவு & ஊட்டச்சத்தியல் துறையின் மீது கொண்ட ஆர்வத்தால், அத்துறையில் பட்டம் பெற்று, ஊட்டச்சத்தியல் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். உடற்பருமன் மற்றும் நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக, பிரத்தியேகமான உணவுப் பொருட்களை விற்பனை செய்து வரும் Paleobay என்ற நிறுவனத்தையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறார்
http://www.marymartin.com/web?pid=841978
--------------------------------------------------------------------------------------------
ஜவ்வாது மலையில் பழங்குடி மருத்துவம் (மரபு மருத்துவத்தின் மூலவேர்) = Javvātu Malaiyil Palankuṭi Maruttuvam (Marapu Maruttuvattiṉ Mūlavēr) / ரே. கோவிந்தராஜ் = Rē. Kōvintarāj
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai 2022
100p.; 22cm.
9789391949006

200gm.
$ 7.50 / pb

உடல்நலம்-மருத்துவம்
உண்மையில் மருத்துவம் உடல்சார்ந்தது மட்டுமல்ல; பண்பாட்டையும் சார்ந்துள்ளது. பழங்குடி/இனக்குழு மருத்துவம் என்பது உடல், மனம், சுற்றுச்சூழல் ஆகிய அனைத்தையும் சமநிலையில் பேணுதலாகும். தமிழகத் தொல்குடிகள் பாரம்பரியமாகப் பின்பற்றும் மருத்துவம் இதன் அடிப்படையிலானது. முக்கியமாக மூலிகைகள் பற்றிய அறிவு அலாதியானது.
**http://www.marymartin.com/web?pid=841979**
------------------------------------------------------------------------------------------

## History

காந்தி படுகொலை - பின்னணியும் வழக்கும் = Kānti Paṭukolai Piṉṉaṇiyum Valakkum / ஆர். ராதாகிருஷ்ணன் மாரியப்பன் = ār. Rātākiruśṇaṉ Māriyappaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
206p.; 22cm.
9789395272223
300gm.
$ 11.50 / pb

மகாத்மா காந்தியின் படுகொலை பற்றிய முக்கியமான நூல். பல்வேறு தரவுகளைப் படித்து, ஒப்பிட்டு, எவ்விதச் சார்பும் இன்றி, உள்ளது உள்ளபடிச் சொல்லும் புத்தகம். காந்திஜியின் படுகொலை உலகையே உலுக்கியது. அப்போதுதான் சுதந்திரம் பெற்றிருந்த இந்தியாவின் அரசியல் எதிர்காலம் இந்தப் படுகொலையை ஒட்டியே மாற்றியமைக்கப்பட்டது. இந்தப் படுகொலை நிகழ்ந்தபோது இந்தியாவில் நிலவிய அரசியல் சூழல் என்ன, ஏன் கோட்சே காந்தியைக் கொன்றார், அதன் பின்னணி என்ன, எப்படி எந்தச் சூழலில் மகாத்மாவின் உயிரைப் பறிக்கும் அராஜகமான முடிவுக்கு இந்தக் கூட்டத்தினர் வந்து சேர்ந்தார்கள், வழக்கு எப்படி நடைபெற்றது, வழக்கின் தீர்ப்பு என்ன என்பதையெல்லாம் துல்லியமாக விளக்குகிறது இந்த நூல். இந்தியாவில் அப்போது கிடைத்த குஜிலி இலக்கியத்தில் இருக்கும் மனவோட்டத்தைக் கூட இந்தப் புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார் நூலாசிரியர் ஆர். ராதாகிருஷ்ணன். இந்தியாவில் 1947ல் நிலவிய அசாதாரணமான அரசியல் சூழலைப் புரிந்துகொள்ள உதவும் அருமையான புத்தகம்.
**http://www.marymartin.com/web?pid=841894**
------------------------------------------------------------------------------------------------
தூத்துக்குடி மாவட்டத்தில் அறியப்படாத தியாகிகள் = Tūttukkuṭi Māvaṭṭattil Ariyappaṭāta Tiyākikaḷ / முத்தாலங்குறிச்சி காமராசு = Muttālankuricci Kāmarācu

தூத்துக்குடி: மாவட்ட நிர்வாகம் = Māvaṭṭa Nirvākam, Tūttukkuṭi, 2022
584p.; ills. 22 cm.
900gm.
$ 27.50 / hb

சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று வெளி உலகம் அறியாத தியாகிகள் குறித்து தொகுத்து எழுதப்பட்டுள்ள நூல். தூத்துக்குடி மாவட்ட பகுதியில் நடந்த போராட்ட வரலாற்றுச் சுவடுகளை கண் முன் நிறுத்துகிறது.
மாவட்டத்தைப் பற்றிய அறிமுகத்துடன் துவங்குகிறது. அங்கு நடந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை தொகுத்து சம்பவங்களுடன் விவரிக்கிறது. அறியப் பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் என, 12 பேரையும், அறியப்படாத வீரர்கள் என பலரையும் அறிமுகம் செய் கிறது. உரிய ஆதாரங்களை திரட்டி பதிவு செய்துள்ளது.
**http://www.marymartin.com/web?pid=841927**
-----------------------------------------------------------------------------------------------
போக்குவரத்து உருவாக்கமும் ஜாதிகளின் உருமாற்றமும் = Pōkkuvarattu Uruvākkamum Jātikaḷiṉ Urumārramum / கோ. ரகுபதி = Kō. Rakupati
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
279p.; 22 cm.
9788196058975
400gm.
$ 17.50 / pb

நின்றும் நகர்ந்தும் நீராவியாலும் எண்ணெயாலும் இயங்கும் எந்திரங்களைக் கண்டுபிடித்த பிரித்தானியர் இவை ஓடுவதற்கான நில, நீர் வழி இருப்புப் பாதையையும் சாலையையும் பண்ணையாட்களின் உடலுழைப்பாலும் மக்களின் வரியாலும் உருவாக்கினார்கள். பிரித்தானிய இந்தியாவின் மதராஸ் மாகாணத்தை சென்னை, - தூத்துக்குடி, நாகப்பட்டினம் துறைமுகங்கள் வழியாக இங்கிலாந்துடன் இணைத்தார்கள். திராவிட மொழிகள் பேசும் கிராமங்களை Great Southern Trunk Road வழியாக மெட்ராஸோடு இணைத்தார்கள். இந்த நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள் கிராமந்தோறும் கட்டப்பட்ட சமத்துவமற்ற ஜாதிய அரசியல் பொருளாதாரக் கண்ணிகளை அறுத்து எறிந்தன. உற்பத்திக் கருவிகளான பண்ணையாட்களைக் கொத்துக் கொத்தாய் உலகெங்கும் கொண்டுசென்றதாலும் பிரித்தானியரின் நவீன அதிகாரத்தை ஆக்கிரமிக்க உழைக்காத ஒட்டுண்ணிகள் ஓடோடியதாலும் ஜாதிகள் உருமாறின. இந்த மாற்றங்கள் அனைத்தையும் இந்நூல் அலசி ஆராய்கிறது.
**http://www.marymartin.com/web?pid=841895**
-----------------------------------------------------------------------------------------------
மதராஸ்: மண்ணும்-கதைகளும் = MATARĀS: MAṆṆUM KATAIKAḶUM / விநாயக முருகன் = VINĀYAKA MURUKAṈ

சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022
142p.; ills. 22 cm.
9789393650566
250gm.
$ 9.00 / pb

நான் சென்னைக்கு நிரந்தரமாக வசிக்கவந்தது ஒருஆகஸ்ட்மாதத்தில். இருபத்தைந்து வருடங்கள் ஓடிவிட்டன. சென்னையின் முகம் முழுக்க மாறிவிட்டது. இருந்தாலும் சென்னைக்கென்று ஓர் ஆன்மா உள்ளது. அது ஒருபோதும் மாறுவதில்லை. இந்த நகரம் முழுக்க முழுக்க உழைப்பாளர்களின் நகரம். எத்தனை இயற்கை பேரிடர்கள் அசைத்தாலும் இந்நகரின் உழைப்பாளர்கள் நகரை மீட்டெடுத்து மீண்டும் இயங்க வைத்து விடுகிறார்கள். ஜாதி, இனம், மொழி பார்க்காமல் வந்தேறிகளை கவுரவம் செய்து அதேநேரம் பலரை காவுகொண்டதும் இதே நகரம். சென்னையின் சிறப்பே அதன் தொன்மையும், நவீனமும் ஒரு சேர பார்க்கமுடிவதே. நூற்றாண்டு கண்ட பிரிட்டிஷ் கட்டடக்கலையையும், நவீன ஐடி நிறுவனங்களையும் ஒரே பகுதியில் பார்க்கமுடியும். சென்னைக்கு என்னால் எதுவும் திருப்பிக்கொடுக்க முடியாது. சென்னையை பற்றி நான்கு நாவல்கள் பதினைந்துசிறுகதைகள், சில கட்டுரைகள்எழுதியுள்ளேன். எப்போதும் சென்னையை எழுதிப் பார்க்கவே விரும்புகிறேன்.
**http://www.marymartin.com/web?pid=841889**
---------------------------------------------------------------------------------------------------
தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு = Tamil Akarātiyiyal Vaḷarcci Varalāru / வ. ஜெயதேவன் = Va. Jeyatēvaṇ
சென்னை: சாரதா பதிப்பகம் = Cāratā Patippakam, Ceṇṇai 2022
309p; 22cm.
9789388625715
450gm.
$ 16.00 / pb
**http://www.marymartin.com/web?pid=841932**
-------------------------------------------------------------------------------------------------
கரிகாலன்: ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பேரரசன் - தொகுதி-1 = Karikālaṇ: Oppārum Mikkārum Illāp Pēraracaṇ - Tokuti-1/ சி. வெற்றிவேல் = Ci. Verrivēl
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṇṇai 2022
614p.; 22 cm.
800gm.
$ 32.50 / hb

தனக்கு ஒப்பாரும் இல்லை; மிக்காரும் இல்லை' எனப் பெரும் புகழ் படைத்த சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தானின் வீர வரலாறு.

வளவன் தாயின் வயிற்றில் இருந்தபோது தந்தையையும், பிறந்த பிறகு தாயையும் இழந்தவன் வளந்தபோது தன் பகைவர்களிடம் நாட்டையும்

இழந்தவன். அதற்குப் பிறகு தன் மாமன் இரும்பிடர்த் தலையருடன் சேர்ந்து போராடி சேரர், பாண்டியர் மற்றும் பதினொரு வேளிர்களை எதிர்த்துத் தோற்கடித்து, தனக்குரிய சோழஉரிமையை மீட்டு சோழ தேசத்தின் பெருவேந்தனாக முடி சூடியவன். காவிரிக்கு அணை எழுப்பி, இமயத்தில் புலிக்கொடி பொறித்து, பெரும் புகழ் பெற்றவன்.

வளவன் தன் இளம் வயதில் சந்தித்த போராட்டங்கள், தனக்குரிய அரியணைக்காக அவன் நிகழ்த்திய போர்களே கரிகாலன் புதினம்.
http://www.marymartin.com/web?pid=843611
------------------------------------------------------------------------------------------
மனக்கோயில் மன்னன் பாகம்-1 = Maṇakkōyil Maṇṇaṇ Pākam-1 / வைகறையான் = Vaikaraiyāṇ
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṇṇai 2022
vii, 613p.; 22 cm.
650gm.
$ 30.00 / pb

பல்லவ வரலாற்றின் ஒரு பகுதியை 'மனக்கோயில் மன்னன்' என்னும் நூலாக வழங்குறது. ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் வெவ்வேறு விதமான வாழ்வியல் சிந்தனைகளை வாசகர்கள் முன் வைக்கிறார். படிப்பவர்களுக்கு வழிகாட்டும் சிந்தனைகள் அவை.
http://www.marymartin.com/web?pid=843583
-----------------------------------------------------------------------------------------------
தமிழின் மகுடத்தில் கிறித்துவ உரைநடை மணிகள் = Tamiliṇ Makuṭattil Kirittuva Urainaṭai Maṇikaḷ / வே. தமிழ் தாசன்
சென்னை: யாழ்டெல் பதிப்பகம் = Yālṭel Patippakam, Ceṇṇai 2023
102p.; 22 cm.
240gm.
$ 6.25 / pb

அயல் நாடுகளில் இருந்து தமிழகம் வந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு தொண்டாற்றிய அறிஞர்களின் சேவை பற்றிய தொகுப்பு நூல். தமிழ் மொழியை அச்சு ஊடகத்தின் வழியாக பரப்பிய ஐரோப்பிய பாதிரியார்கள் பற்றிய குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.
http://www.marymartin.com/web?pid=841931
----------------------------------------------------------------------------------------------------
தமிழ்க் கூலி = Tamilk Kūli / இந்திரஜித் = Intirajit
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022
128p.; 22 cm.
9789393650566
250gm.
$ 8.00 / pb

இரண்டாம் உலகப் போர் தென்கிழக்காசியாவில் வசித்த தமிழர்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. 80 ஆயிரம் தமிழர்கள் செத்துப் போனார்கள். மேலும் ஆயிரக் கணக்கானவர்கள்

குடும்பங்களைப் பறிகொடுத்து அநாதைகளாக அலைந்து திரிந்தார்கள். அந்தக் கதையைச் சொல்கிறது தமிழ்க் கூலி, யார் தமிழ்க் கூலி? தமிழ்க் கூலி என்பவன் ஒரு மடையன் என்று சில மடையர்கள் நினைக்கிறார்கள். அது சரிதானா? தமிழ்க் கூலியின் எதிரி யார்? வெள்ளையனா? ஜப்பானியனா? காட்டிக் கொடுத்த மற்றவனா? சில இடங்களில் ஒரு கதையாக, சில இடங்களில் ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியத்தில் புதைகிறது இருநூறு ஆண்டு வெளிநாட்டுத் தமிழ் வாழ்க்கையின் ஒரு கீற்று. தமிழ்க் கூலியின் சராசரி வயது 18. தொப்பை இருக்காது. ஒல்லியாக இருப்பான். அவன் புத்திசாலி. அவனை உங்களுக்குக் கூலியாக அறிமுகப்படுத்துவது எது? அது இப்போதும் இங்குதான் இருக்கிறதா?
**http://www.marymartin.com/web?pid=843591**

---

அறிவியல் கதைகள் = Ariviyal Kataikaḷ / என். சொக்கன் = Eṇ. Cokkaṇ
சென்னை: கமர்கட் பிரசுரம் = Kamarkaṭ Piracuram, Ceṇṇai 2022
131p.; 22 cm.
9788194973928
250gm.
$ 8.00 / pb

அறிவியல் என்பது பெருங்கடல். சொல்லப்போனால், பல பெருங்கடல்களின் தொகுப்புதான் அது. அந்தக் கடல்களில் நுழைந்து, மகிழ்ச்சியாக நீச்சலடித்து, அலைகளின்மீது பெருமிதத்துடன் பயணம் செய்த பல வல்லுனர்களை இந்தப் புத்தகத்தில் நீங்கள் சந்திக்கலாம். அதே நேரம், 'அடடா, அறிவியலா?' என்று அஞ்சி ஒதுங்கவேண்டியதில்லை. பல அறிவியல் கண்டுபிடிப்புகளையும் அறிவியலாளர்களுடைய வாழ்க்கையில் நடந்த உண்மை நிகழ்வுகளையும் எளிமையான மொழியில் சுவையாகச் சொல்லும் கதைகள் இவை. ரசித்துப் படிக்கலாம், பக்கத்துக்குப் பக்கம் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்!
'கோகுலம்' மாத இதழில் வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்ற தொடரின் நூல் வடிவம் இது, அறிவியலின்மீது மாணவர்களுக்குப் பேரார்வத்தை உண்டாக்கும் சுவையான தொகுப்பு!
**http://www.marymartin.com/web?pid=843602**

---

வண்ணச் சீரடி (மங்கலதேவி கண்ணகிக் கோட்டம் மீட்டெடுப்பு போராட்ட வரலாறு) = Vaṇṇac Cīraṭi (Mankalatēvi Kaṇṇakik Kōṭṭam Mīṭṭeṭuppu Pōrāṭṭa Varalāru) / மு. ராஜேந்திரன், இஆப = Mu. Rājēntiraṉ, IāPa
வந்தவாசி: அகநி வெளியீடு = Akani Veḷiyīṭu, Vantavāci 2022
352p.; ills. 22 cm.
9789382810995
650gm.
$ 22.50 / hb

சிலப்பதிகார காப்பிய நாயகி கண்ணகிக்கு நடக்கும் ஒரே திருவிழா சித்திரை பௌர்ணமி திருவிழா. மங்கலதேவி கண்ணகிக் கோட்டம் இருக்கும் விண்ணேற்றிப் பாறையில் இரு மாநில எல்லைப் பிரச்சினையில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடைப்பது குறித்து, இந்து தமிழ் திசையில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளேன். நாற்பதாண்டுகளுக்கும் மேலாக நடக்கும் மங்கலதேவி கண்ணகிக் கோட்டம் பராமரிப்பு குறித்து டாக்டர் மு. ராஜேந்திரன், இஆப 'வண்ணச் சீரடி' என்றொரு நூல் எழுதியிருக்கிறார்.
[http://www.marymartin.com/web?pid=843564](http://www.marymartin.com/web?pid=843564)
-----------------------------------------------------------------------------------------------

மர்ம சந்நியாசி = Marma Canniyāci / எஸ். பி. சொக்கலிங்கம் = Es. Pi. Cokkalinkam
சென்னை: கிழக்கு பதிப்பகம் = Kilakku Patippakam, Ceṇṇai 2022
128p.; 22cm.
9789390958399
200gm.
$ 7.50 / pb

ஒரு சமஸ்தானத்து இளவரசர் மாளிகையில் இறந்து விடுகிறார். சில வருடங்கள் கழித்து அந்த ஊருக்கு சந்நியாசி வருகிறார். வந்ததோடு நில்லாமல், நான்தான் இறந்துபோனதாகச் சொல்லப்படும் இளவரசர் என்கிறார் அவர். ஊரே பரபரப்பாகிறது. ராஜ வம்சத்து விவகாரம் நீதிமன்றத்துக்குச் செல்கிறது. சந்நியாசியை நம்பலாமா? ஆம் எனில் இறந்தவர் யார்? யாருக்கு இறுதிச்சடங்குகள் செய்யப்பட்டன? மர்மசந்நியாசி தான் இளவரசர் என்றால் இத்தனை வருடங்கள் அவர் எங்கு போயிருந்தார்? ஏன் அரண்மனைக்கு வரவில்லை? ஒருவேளை வாரிசு இல்லாத சமஸ்தானத்தைக் கைப்பற்ற பிரிட்டிஷ் இந்திய அரசு போட்ட திட்டமா இது?
விசித்திரமான, விறுவிறுப்பான, எண்ணற்ற ஊசிமுனை திருப்பங்களைக் கொண்ட இந்த மர்ம வழக்கை கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் நூலாசிரியர் சொக்கலிங்கம். கற்பனையை விஞ்சும் உண்மை வரலாறு இந்நூல்.
[http://www.marymartin.com/web?pid=841890](http://www.marymartin.com/web?pid=841890)
---------------------------------------------------------------------------------------------------
லால் பகதூர் சாஸ்திரியின் மர்ம மரணம் (மறைக்கப்பட்ட சரித்திரம்) = Lāl Pakatūr Cāstiriyiṉ Marma Maraṇam (Maraikkappaṭṭa Carittiram) / சக்திவேல் ராஜகுமார் = Caktivēl Rājakumār
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
136p.; 22 cm.
9789395272445
200gm.
$ 8.00 / pb

இந்தியாவின் பிரதமர் ஒருவர் வெளிநாட்டில் மர்மமான முறையில் மரணமடைகிறார். அவர் கொல்லப்பட்டார் என்ற பலமான சந்தேகம் எழுகிறது. ஆனால் இன்று வரை உண்மை என்ன என்பது வெளியாகவில்லை.

இந்தியா அல்லாமல் வேறொரு நாட்டின் பிரதமர் இப்படி வெளிநாட்டில் கொல்லப்பட்டிருந்தால் அந்த நாடு என்னவெல்லாம் செய்திருக்கும்? ஆனால் ஏன் அன்றைய இந்திய அரசு இது குறித்து அக்கறை எடுக்கவில்லை? இந்த அலட்சியத்துக்குப் பின்னால் இருப்பது என்ன? இது வெறும் அலட்சியம் மட்டும்தானா அல்லது வேறேதும் உள்நோக்கம் உண்டா? சாஸ்திரியின் கட்சியான காங்கிரஸின் மௌனத்துக்கு என்ன காரணம்? தன் கட்சியின் பிரதமர் இப்படி மர்மமான முறையில் இறந்திருக்கும்போது அதை இந்திரா காந்தி எப்படிக் கையாண்டார்? இவை அனைத்தையும் அலசுகிறது இந்த நூல்.

லால் பகதூர் சாஸ்திரியின் மரணத்தின்போது இந்தியாவில் நிலவிய அரசியல் சூழலையும், யாரெல்லாம் அந்த மரணத்துக்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்கிற அன்றைய யூகங்களையும் விவரிக்கிறது இந்தப் புத்தகம். புகழ்பெற்ற தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின்போது நடந்தது என்ன என்பதைப் பல ஆதாரங்களுடன் எழுதி இருக்கிறார் ஆசிரியர் சக்திவேல் ராஜகுமார்.
**http://www.marymartin.com/web?pid=841893**
--------------------------------------------------------------------------------------------
இந்திய சுதேச சமஸ்தானங்கள் ஒருங்கிணைப்பு = Intiya Cutēca Camastāṇankaḷ Orunkiṇaippu / இலந்தை சு. ராமசாமி = Ilantai Cu. Rāmacāmi
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
236p.; 22cm.
9789395272391
350gm.
$ 13.50 / pb

இந்திய சுதேச சமஸ்தானங்கள் ஒருங்கிணைப்பு, இலந்தை சு இராமசாமி, ரூ 270, முன்னட்டை ஓவியம்: ஜீவா இந்தியா சுதந்திரம் பெற்றபோது அது பல சுதேச சமஸ்தானங்களாகப் பிரிந்து கிடந்தது. எத்தனை கெடு விதித்தும் பல சமஸ்தானங்கள் இந்தியாவின் கீழ் இணையாமல் போக்குக் காட்டி வந்தன. அனைத்து சமஸ்தானங்களையும் ஒருங்கிணைத்து இந்திய தேசத்தின் கீழ் கொண்டு வரவேண்டிய மாபெரும் பொறுப்பு நேருவின் அரசாங்கத்துக்கு இருந்தது. இந்த மாபெரும் வேலைக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள் வல்லபபாய் படேலும் வி.பி. மேனனும். பெரிய அரண்மனை, ஏவல் செய்ய வேலைக்காரர்கள், அந்தப்புரம் முழுக்க ஆசை நாயகிகள், அவர்களுடனான காமக் களியாட்டம், ஆடம்பர வாழ்க்கை - இவற்றை மகாராஜாக்கள் விட்டுத் தர தயாராக

இருக்கவில்லை. படேலின் கண்டிப்பில் பலர் உடனே இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டாலும், சிலர் முரண்டு பிடித்தனர். பல்வேறு சலுகைகள் கொடுத்து அவர்களைச் சம்மதிக்க வைக்க வேண்டி இருந்தது. அப்படியும் ஒத்துக்கொள்ளாதவர்களை இராணுவ ரீதியாக சம்மதிக்க வைக்க வேண்டி வந்தது. இந்தியா ஒரு பரந்துவிரிந்த தேசம். பல்வேறு கலாசாரம், மொழி, நிலப் பாகுபாடுகள் நிறைந்த தேசம். இப்படிப்பட்ட தேசத்தில், அதுவும் சுதந்திரம் பெற்ற ஆரம்ப வருடங்களிலேயே இவற்றைச் செய்வது எத்தனை பெரிய சவால்? உண்மையில் சுதந்திர இந்தியாவின் முதல் மாபெரும் சாதனையாக இந்த சமஸ்தானங்களின் இணைப்பைச் சொல்லலாம். இலந்தை சு இராமசாமி திறம்பட இந்த நூலை எழுதி இருக்கிறார். பல்வேறு சம்பவங்களை ஆதாரத்துடன் இந்த நூலில் பதிவு செய்திருக்கிறார்.
http://www.marymartin.com/web?pid=841923
------------------------------------------------------------------------------------------
திருச்சிராப்பள்ளி: ஊறும் வரலாறு (திருச்சியில் காலூன்றி தமிழ்நாட்டைத் தழுவிய வரலாறு) = Tiruccirāppaḷḷi: ūrum Varalāru (Tirucciyil Kālūṇri Tamilnāṭṭait Taluviya Varalāru) / நந்தலாலா = Nantalālā
சென்னை: விகடன் பிரசுரம் = Vikaṭaṇ Piracuram, Ceṇṇai 2022
295p.; 24cm.
9789394265073
550gm.
$ 23.50 / pb

தமிழ்நாட்டின் மையப் பகுதியான திருச்சிக்கு எத்தனையோ பெருமைகள் உண்டு. அகண்ட காவிரியாக சலசலத்து வந்து, கரிகால் பெருவளத்தான் கட்டிய கல்லணையைத் தழுவி, விளைநிலங்களை பசுமையாக்கிப் பாய்ந்தோடும் காவிரி ஆறு கரை பாவி நடக்கும் மாநகர் திருச்சி. துப்பாக்கித் தொழிற்சாலை, பாரத மிகுமின் நிறுவனம் என தொழிற்சாலைகளும் நிரம்பிய மாநகரம் திருச்சி. திருச்சியைச் சுற்றி அமைந்துள்ள புகழ்பெற்ற ஆன்மிக ஸ்தலங்கலான □ரங்கமும் சமயபுரமும் புகழும் நெடிய வரலாறும் கொண்ட கோயில்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழக அரசியலில் முக்கியத் திருப்பங்களை ஏற்படுத்திய அரசியல் இயக்கங்களின் செயல்பாட்டுக் களமாகவும் திருச்சி திகழ்ந்தது. தமிழக அரசியல் களத்தில் பெரும் மாற்றம் ஏற்படுத்தியது மொழிப்போர். அந்த முதல் மொழிப் போராட்டத்துக்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்தது திருச்சி மண். இப்படிப் பல பெருமைகளை தனக்குள் தாங்கிக் கொண்டிருக்கும் திருச்சியைப் பற்றி வரலாற்றுத் தரவுகளோடு விகடன் இணைய இதழில், ஊறும் வரலாறு எனும் தலைப்பில் வெளியான தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நூல்தான் இது. திருச்சியில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகள், கல்லணையின் வரலாற்றுப் பெருமை, அந்த மாவட்டத்தை பூர்விகமாகக்கொண்ட பிரபல எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள், திருச்சியின் கல்விக் கூடங்கள்.. என திருச்சி பற்றிய அனைத்துத் தகவல்களையும் சுவைபடத் தருகிறது இந்த நூல். இந்த

நகருக்கு இத்தனை பெருமைகளா என வியக்க வைக்கப்போகும் திருச்சியின் வரலாறை அறியச் செல்லுங்கள்.
http://www.marymartin.com/web?pid=841900
-----------------------------------------------------------------------------------------------
பத்மநாபா படுகொலை = Patmanāpā Paṭukolai / ஜெ. ராம்கி = Je. Rāmki
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
136p.; 22 cm.
9789395272230
200gm.
$ 8.00 / pb

ஆயுதமேந்திய குழுவொன்று வீடு புகுந்து பட்டப்பகலில் 14 பேரைச் சுட்டுக்கொன்ற சம்பவம், தமிழ்நாட்டிற்குப் புதிது. அதுவரை தமிழர்கள் ஏ.கே 47 துப்பாக்கியைத் திரைப்படங்களில் மட்டுமே கண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் துப்பாக்கிக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியது பத்மநாபாவின் படுகொலை. இது சகோதர யுத்தம் மட்டுமல்ல. கள்ளத்தோணியில் வந்திறங்கி, கச்சிதமாகத் திட்டமிட்டுச் செய்யப்பட்ட படுகொலை. கோடம்பாக்கத்தின் ஜக்காரியா காலனியை ரத்தச் சகதியாக்கிவிட்டு கொலைகாரர்கள் தப்பிச் சென்றது, தமிழகக் காவல்துறைக்குக் கிடைத்த கரும்புள்ளி. இந்தக் கொலையாளிகளைத் தேடிப் பிடித்திருந்தால், ராஜிவ் காந்தி படுகொலையை ஒருவேளை தடுத்திருக்கலாம். 38 வயதில் பரிதாபமாகக் கொல்லப்பட்டார் பத்மநாபா. ஆயுதமேந்தித்தான் பத்மநாபாவும் போராடினார் என்றாலும், அவரது கரங்களில் ரத்தக்கறை இருந்திருக்கவில்லை. இலங்கையிலும் இந்தியாவிலும் எந்தவொரு சாதாரண வழக்கிலும் கூட அவர் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. தாழ்த்தப்பட்டோர், மலையகத் தமிழர்கள், தமிழ் முஸ்லீம்கள் என அனைத்துத் தமிழ் மக்களின் ஆதரவும் பத்மநாபாவின் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்திற்கு அன்று இருந்தது. தொலைநோக்குச் சிந்தனையாளர். சர்வதேச அரசியல் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டவர். ‘தமிழ் மண்ணுக்காக மக்களை நேசிக்கவில்லை, மக்களுக்காகத்தான் மண்ணை நேசிக்கிறேன்’ என்றவரை இனத்துரோகி என்றார்கள். ‘தனி ஈழம் சாத்தியமில்லை’ என்னும் யதார்த்தத்தை உணர்ந்து கொண்ட ஒரே போராளி பத்மநாபா. அவர் இருந்திருந்தால், தனித்துவம் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் உயிர்ப்போடு இருந்திருக்கக் கூடும். உள்நாட்டுப்போர் தவிர்க்கப்பட்டிருக்கலாம். லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள். இத்தனை சாத்தியங்களையும் இல்லாமல் ஆக்கியது, ஜூன் 19, 1990ல் கோடம்பாக்கத்தில் வெடித்த ஏ. கே 47 துப்பாக்கி.
http://www.marymartin.com/web?pid=841897
-----------------------------------------------------------------------------------------------

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முப்பெரும் ஆளுமைகள் = Intiyak Kamyūṇisṭ Iyakkattiṉ Mupperum āḷumaikaḷ / கே. சுப்பிரமணியன் = Kē. Cuppiramaṇiyaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci 2022
248p.; 22cm.
9789390811649
340gm.
$ 14.00 / pb

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நமது மூத்த தலைமுறைத் தோழர்கள் நெருப்பாற்றில் எதிர் நீச்சலடித்தவர்கள். அன்னியராட்சியின் அடக்குமுறையைத் துணிச்சலுடன் சந்தித்து பல்லாண்டுகள் சிறையில் இருந்தவர்கள். சொத்து சுகங்களை இழந்து பொதுவுடைமை இயக்கத்துக்காக தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணம் செய்தவர்கள்! அவர்களால் பயிற்சியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பல தலைவர்கள், கம்யூனிஸ்ட் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார்கள். இந்த புத்தகத்தில் முதல் மூன்று பொதுச்செயலாளர்களைப் பற்றி படிக்கும்போது நாம் எவ்வளவு புகழ் மிக்க பரம்பரையின் வாரிசுகளாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் இருக்கிறோம் என்று தலை நிமிர்ந்து பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்!
**http://www.marymartin.com/web?pid=841926**
------------------------------------------------------------------------------------------
தோழர் கே. பாலதண்டாயுதம் வாழ்க்கை வரலாறு (1918-1973) = Tōlar kē. Pālataṇṭāyutam vālkkai varalāru (1918-1973) / பொன்னீலன் பெ. கணபதி சுப்பிரமணியன் = Poṇṇīlaṇ Pe. Kaṇapati Cuppiramaṇiyaṇ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (p) Liṭ, Ceṇṇai 2022
797p.; 22cm.
9788123442860
1000gm.
$ 60.00 / hb
**http://www.marymartin.com/web?pid=841929**
------------------------------------------------------------------------------------------
தமிழர் நடன வரலாறு = Tamilar Naṭaṇa Varalāru / சே. இரகுராமன் = Cē. Irakurāmaṇ
சென்னை: க்ரியேடிவ் வொர்க்ஷாப் = Kriyēṭiv Vorkśāp, Ceṇṇai, 2020
268p.; 22cm.
9788194368083
450gm.
$ 15.00 / pb
**http://www.marymartin.com/web?pid=841934**
------------------------------------------------------------------------------------------
பஞ்சம், படுகொலை, பேரழிவு: கம்யூனிஸம் = Pañcam, Paṭukolai, Pēralivu: Kamyūṇisam / அரவிந்தன் நீலகண்டன் = Aravintaṇ Nīlakaṇṭaṇ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022

256p.; 22cm.
9789395272339
350gm.
$ 15.00

கம்யூனிஸம் உலகுக்குக் கொடுத்த கொடை பஞ்சம், படுகொலை, பேரழிவு. கம்யூனிஸத்தின் பெயரைச் சொல்லி உலகெங்கும் கொன்று குவிக்கப்பட்ட அப்பாவி மக்களின் எண்ணிக்கை பல கோடி. உலகில் தாம் சென்ற இடங்களில் எல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் படுகொலைகளையும் பேரழிவுகளையும் ஈவு இரக்கமின்றி ஏற்படுத்தினார்கள் என்பதை ஆதாரத்தோடு நிறுவுகிறது இந்நூல். • லெனின், ஸ்டாலின், மாவோ என்று தொடர்ச்சியாக கம்யூனிஸத் தலைவர்கள் எல்லோருமே எப்படி ரத்தம் தோய்ந்த வரலாற்றை எழுதினார்கள்? • எப்படி சக தோழர்களையே வேட்டையாடினார்கள்? • புக்காரினும் டிராட்ஸ்கியும் என்ன ஆனார்கள்? • சே குவேரா உண்மையிலேயே இளைஞர்களின் ரோல் மாடல்தானா? • ஸ்டாலின், லெனினை எப்படி எதிர்கொண்டார்? • ரஷ்யா உண்மையிலேயே கனவு பூமிதானா? • வதைமுகாம்கள், கூட்டுப்படுகொலைகள் என்பதெல்லாம் ஹிட்லர் காலத்துக்கு முன்பே ரஷ்யாவில் உண்டா? வரலாற்றின் மிக முக்கியமான இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கிறது இந்தப் புத்தகம். • கம்யூனிஸம் இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? • நேருவின் கம்யூனிஸப் பாசம் இந்தியாவுக்குத் தந்த பரிசு என்ன? • தாஷ்கண்ட்டில் லால் பகதூர் சாஸ்திரிக்கு என்ன ஆனது? • கம்யூனிஸக் கட்சிகள் இந்தியாவில் ஆடிய ஆட்டங்கள் என்ன? இவற்றையும் பதிவு செய்திருக்கிறது இந்நூல். வெறும் வாய்ப்பந்தல் போடாமல், சிவப்புப் பயங்கரத்தைப் பற்றிய ஒவ்வொரு குறிப்பையும் அதற்கான ஆதாரத்துடன் எழுதியுள்ளார் அரவிந்தன் நீலகண்டன்.
**http://www.marymartin.com/web?pid=841943**
----------------------------------------------------------------------------------------------------
கறி விருந்தும் கவுளி வெற்றிலையும்: சாதியினாற் சுட்ட வடு = Kari Viruntum Kavuḷi Verrilaiyum: Cātiyiṉār Cuṭṭa Vaṭu / திருக்குமரன் கணேசன் = Tirukkumaraṉ Kaṇēcaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
135p.; 21cm.
9789355231048
200gm.
$ 9.00 / pb

நவீன இந்திய இலக்கிய வரலாற்றில் தாக்கம் ஏற்படுத்திய வடிவமாகத் தலித் தன்வரலாற்று நூல்களைக் கூறலாம். விளிம்புநிலை வாழ்வு என்பதாக மட்டும் நின்றுவிடாமல் வரலாறு, புனைவு என்பவை குறித்த பார்வையையும் அவை விஸ்தரித்திருக்கின்றன. நீண்டகாலம் கழித்துத் தமிழ் தலித் தன்வரலாற்று வரிசையில் கச்சிதமான வருகையாக திருக்குமரனின் இந்நூல் அமைந்திருக்கிறது.

சாதியமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நடந்திருக்கும் சமகாலச் சூழலில் அதன் இருப்பு எத்தகைய வடிவங்களில் தங்கிக் கிடக்கிறது என்பதை 2000த்திற்குப் பிறகு வாழ நேர்ந்த தலித் இளைஞர் ஒருவரின் சுய அனுபவத்தின் வழியே நுட்பமாகக் காட்டுகிறது இந்நூல். தலித்துகள்மீது முன்புபோலச் சாதியை எளிதாகப் பிரயோகித்துவிட முடியாத அளவிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கும் நிலையில் சாதி எவ்வாறு வெவ்வேறு வடிவங்களில் இயங்கத் தொடங்கியிருக்கிறது என்பதையும் இந்நூல் விரித்திருக்கிறது.
தஞ்சை வட்டாரப் பின்னணியிலிருந்து தலித் வாழ்வின் வலி மிகுந்த அனுபவங்களைச் சித்திரமாக்கியிருக்கிறது இந்தத் தன்வரலாறு. தலித் வாழ்க்கை என்றால் இழிவைச் சுமப்பது அல்லது கிண்டல் செய்து கடப்பது என்றிருந்த நிலையில் எதிர்ப்பை முன்வைக்கும் அனுபவத்தையும் பகிர்ந்துகொள்வது இந்நூலின் தனித்துவம். தலித் வாழ்வின் வலிகளை மட்டுமின்றிக் காதல், தோழமை முதலான வண்ணங்களையும் கொண்ட நூல் இது.
**http://www.marymartin.com/web?pid=841945**

---

அந்தக் காலப் பக்கங்கள் – பாகம் 3 = Antak Kālap Pakkankaḷ – Pākam 3 / அரவிந்த் சுவாமிநாதன் = Aravint Cuvāminātaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
158p.; 22cm.
9789395272179
250gm.
$ 9.50 / pb

அந்தக் காலச் செய்திகளின் கருவூலமாக விளங்கும் 'அந்தக் காலப் பக்கங்கள்' புத்தகத்தின் 3ம் பாகம். நம் பழங்கால வரலாற்றைச் சுவைபடச் சொல்லும் நூல். எத்தனையோ பழமையான புத்தகங்களில் இருந்து செய்திகளைச் சேகரித்து, அவற்றைத் தொகுத்து நூலாக்கி இருக்கிறார் ஆசிரியர். ஆச்சரியப்பட வைக்கும் தகவல்கள், மலைக்க வைக்கும் செய்திகள், அந்தக் காலத்திலேயே இப்படியா என்று யோசிக்க வைக்கும் விளம்பரங்கள் என்று தகவல்கள் பக்கத்துக்குப் பக்கம் கொட்டிக் கிடக்கின்றன.
**http://www.marymartin.com/web?pid=841948**

---

அந்தக் காலப் பக்கங்கள் – பாகம் 1 = Antak Kālap Pakkankaḷ – Pākam 1 / அரவிந்த் சுவாமிநாதன் = Aravint Cuvāminātaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
157p.; 22cm.
9189395278070
250gm.
$ 10.00 / pb

அந்தக் கால விளம்பரங்கள், அந்தக் காலத் திரைப்படங்கள், அந்தக் காலச் சமையல், அந்தக் காலப் புத்தகங்கள், அந்தக் காலப் பத்திரிகைகள், அந்தக் காலத்து எழுத்தாளர்கள். மறக்க முடியாத ஓர் அனுபவத்துக்கு உங்களை அழைத்துச் செல்கிறார் அரவிந்த் சுவாமிநாதன். தயாராகுங்கள். எங்கு தேடியும் கிடைக்காத தகவல்களும் புகைப்படங்களும் கொட்டிக் கிடக்கும் அரிய நூல் இது.
**http://www.marymartin.com/web?pid=841946**
----------------------------------------------------------------------------------------------------
அந்தக் காலப் பக்கங்கள் – பாகம் 2 = Antak Kālap Pakkankaḷ – Pākam 2 /
அரவிந்த் சுவாமிநாதன் = Aravint Cuvāminātaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai
134p.; 22cm.
9789395272087
200gm.
$ 8.00 / pb

அந்தக் காலப் பக்கங்கள்' நூலின் முதல் பாகம் பெரிய வரவேற்பைப் பெற்றதை அடுத்து, அதன் இரண்டாவது பாகமாக இந்நூல் வெளியாகிறது. அந்தக் காலத்துத் தகவல் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது. எங்கு தேடினாலும் கிடைக்காத தகவல்களை, மிகவும் சுவாரசியமான நடையில், எளிமையாகத் தருகிறார் அரவிந்த் சுவாமிநாதன். இத்தனை தகவல்களை இவர் எப்படிச் சேகரித்து வைத்திருக்கிறார், அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம் போல எப்படி இவருக்கு மட்டும் இத்தனை தகவல்கள் கிடைக்கின்றன என்ற மலைப்பை ஏற்படுத்தும் நூல் இது.
**http://www.marymartin.com/web?pid=841947**
----------------------------------------------------------------------------------------------------
மகளிருக்குள் ஒரு மணிமகுடம் = Makaḷirukkuḷ Oru Maṇimakuṭam /
சங்கமித்திரை பாட்டழகன் = Cankamittirai Pāṭṭalakaṉ
சென்னை: வசந்தா பதிப்பகம் = Vacantā Patippakam, Ceṉṉai 2022
144p.; 22cm.
250gm.
$ 10.00 / pb

பெண் வரலாறு எழுதுதல் ஒரு சமூகத்தில் எந்த அளவு, உரிய இடத்தைப் பெறும் என்பது கேள்விக்குறிதான். அதைவிட பெண்ணினத்தின் உயர்வில் ஒரு நாட்டின் உயர்வு அடங்கி இருக்கிறது என்று வெறும் வாய்ச்சவடால் பேசுவது எளிதானது. மரபு சார்ந்த விதிகளை மீறி ஆணுக்குச் சமமாகச் சமூகத்தில் போராடித் தன்னை தக்க வைத்துக் கொள்வது பெரும் சிக்கலாகவும், பெரும் கனவாகவும் இருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=841949**
----------------------------------------------------------------------------------------------------

கால்டுவெல் முதல் கலைஞர் வரை: செம்மொழி போராட்ட வரலாறு = Kālṭuvel Mutal Kalaiñar Vari: Cemmoli Pōrāṭṭa Varalāru / ஜெ. முத்துச்செல்வன் = Je. Muttuccelvaṇ
சென்னை: தமிழியல் ஆய்வு மையம் = Tamiliyal āyvu Maiyam, Ceṇṇai 2022
217p.; 22cm.
9789394743168
320gm.
$ 15.00 / pb

உலகின் முதல் மொழி, உலகச் செம்மொழிகள், செம்மொழிப் போராட்டங்கள், உலகத் தமிழ் மாநாடுகள், செம்மொழி விருதாளர்கள், செவ்வியல் நூல்கள் என மிகப்பெரிய தரவுத்தளத்தை நூல்வடிவில் உருவாக்கியுள்ளார். இந்நூல், தமிழ் மொழியின் தனித்தன்மையைத் தெரிந்துகொள்ள, உலகச் செம்மொழிகள் குறித்து அறிந்துகொள்ள, செம்மொழி அறிவிப்பு வரலாற்றைப் புரிந்துகொள்ள உதவும் தரவுநூலாகும்.
http://www.marymartin.com/web?pid=841952
--------------------------------------------------------------------------------------------
காலத்தை வென்ற மாவீரர்கள் = Kālattai Veṇra Māvīrarkaḷ / ஆ. சிவசுப்பிரமணியன் = ā. Civacuppiramaṇiyaṇ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2023
256p.; 22 cm.
9788123444116
350gm.
$ 16.25 / pb

பதினான்கு ஆங்கில நூல்களையும் ஒரு தமிழ் நூலையும் அறிமுகம் செய்யும் பதினைந்து கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.
நாட்டார் வழக்காற்றியல், சமயம், மானுடவியல், சமூகவியல், அரசியல் ஆகிய ஐந்து அறிவுத் துறைகள் சார்ந்த நூல்களாக இவை அமைந்துள்ளது.
இந்நூல்களைக் குறித்து ஆழமாகவும் தெளிவாகவும் அறிமுகம் செய்துள்ளதுடன் இந்நூல்களைப் படித்தறிய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.
http://www.marymartin.com/web?pid=843040
--------------------------------------------------------------------------------------------
சேர சோழ பாண்டிய பல்லவர் காலக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் = Cēra Cōla Pāṇṭiya Pallavar Kālak Kalveṭṭukaḷum Ceppēṭukaḷum / எஸ். கிருஷ்ணன் = Es. Kiruśṇaṇ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
143p.; 22 cm.
9789395272322
300gm.

$ 8.50 / pb

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நமது வரலாற்றுக் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள். கல்வெட்டுகள் பெரும்பாலும் நிலக்கொடைகளையும் தானங்களையும் கோவில் திருப்பணிகளையும் குறிப்பிடுவதாக இருந்தாலும், அவற்றில் அக்காலச் சமுதாயம், பொருளாதாரம், நீதி முறைகள், அரசர்களின் வம்சாவளி, அவர்கள் மேற்கொண்ட போர்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களும் காணப்படுகின்றன. இவை, அக்காலத்தைப் பற்றிய ஒரு சுவையான சித்திரத்தை அளிக்கின்றன.
**http://www.marymartin.com/web?pid=841940**
----------------------------------------------------------------------------------------------------

## Linguistics

வன்னிப் பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு ஆய்வுத்தொகுதி (Proceeding of the Vanni Regional Conference Seminar of Tamil Studies) முல்லைத்தீவு வைகாசி 1983 = Vaṇṇip Pirāntiyat Tamilārāycci Makānāṭṭu āyvuttokuti (Proceeding of the Vanni Regional Conference Seminar of Tamil Studies) Mullaittīvu Vaikāci 1983 / சி. பத்மநாதன் = Ci. Patmanātaṉ
இந்தியா: அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை = Aṇaittulakat Tamilārāycci Maṉra Ilankaik Kiḷai, Intiyā 2022
364p.; 25 cm.
9786246314002
750gm.
$ 25.00 / pb

இத்தொகுதியில் அடங்கியுள்ள கட்டுரைகள் அனைத்தும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை 1983 ஆண்டில் நடத்திய வன்னிப் பிராந்திய மாநாட்டிலே படித்து ஆராயப்பட்டவை. அதில் இலங்கையிலுள்ள கல்விமான்களே பங்குபற்றினார்கள்.
**http://www.marymartin.com/web?pid=843439**
----------------------------------------------------------------------------------------------------
தமிழ் - சமஸ்கிருத நிகண்டு உறவு = Tamil - Camaskiruta Nikaṇṭu Uravu / ச. பால்ராஜ் = Ca. Pālrāj
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
207p.; 22 cm.
9789355232953
300gm.
$ 13.75 / pb

நிகண்டு என்றால் சொற்களின் தொகுதி, கூட்டம் என்று பொருள். வேதத்திலுள்ள பொருள் விளங்கா அரிதான சொற்களுக்குப் பொருள்

விளக்கம் கூறவே சமஸ்கிருதத்தில் நிகண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழில் பொருள் விளங்காத சொற்களுக்கு மட்டும் பொருள் கூறிவந்த அம்மரபு பிற்காலத்தில் அனைத்துச் சொற்களுக்கும் பொருள் கூறும் தனி வகையாக வளர்ந்தது. இரு மொழிகளின் நிகண்டுகளையும் ஒப்பிடுகிறது இந்த நூல். தமிழ், சமஸ்கிருத மொழிகளின் தொன்மையான நிகண்டு வரலாற்றை அறியவும் அவற்றின் பொருட்புலத் தொடர்பை அறியவும் அவற்றின் வழித் தற்கால அகராதியியலின் வளர்ச்சியைத் திட்டமிடவும் இந்த ஒப்பீடு பலனளிக்கும்.
**http://www.marymartin.com/web?pid=843582**
-------------------------------------------------------------------------------------------------
தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் = Tamilc Cevvilakkiyankaḷ: Avai Tōṇriya Cūlalum Camaskirutattil Avarriṇ Cāyalum / ஜார்ஜ் எல். ஹார்ட் = Jārj El. Hārṭ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
368p.; 22 cm.
9788123443126
500gm.
$ 23.00 / pb

சங்க இலக்கிய மொழி வெளிப்படுத்தும் இலக்கியத் தன்மைகளைப் பற்றியும் அந்த இலக்கியம் சார்ந்த பண்பாட்டின் வாழ்வு முறைகள், நம்பிக்கைகள், அரசியல் அமைப்புகள் பற்றியும் பேசும் ஜார்ஜ் ஹார்ட்டின் இந்த நூல் தமிழ் இலக்கிய ஆய்வில் முக்கியமான நூல், அரை நாற்றாண்டுக்குப் பிறகு தமிழாக்கம் பெறும் இந்த நூல் இன்னும் ஒரு நூற்றாண்டுக்குத் தமிழ் இலக்கிய ஆய்வு செல்வதற்கான பாதையைப் பழைய தரவுகளை மீள்பார்வை செய்தும் புதிய தரவுகளைச் சீர்தூக்கியும் துவக்கி வைக்கிறது எனலாம்.
**http://www.marymartin.com/web?pid=842547**
----------------------------------------------------------------------------------------------------

## Literature

அன்புடன்... = Aṇpuṭaṇ... / புவனகிரி கல்யாண் = Puvaṇakiri Kalyāṇ
புவனகிரி, தமிழ்நாடு: விஜய் பதிப்பகம் = Vijay Patippakam, Puvaṇakiri, Tamilnāṭu 2022
192p.; 22 cm.
300gm.
$ 10.00 / pb
**http://www.marymartin.com/web?pid=842813**

Novel
-------------------------------------------------------------------------------------------------

ஆனந்த கிருஷ்ணன் (துப்பறியும் நாவல்) = āṇanta Kiruśṇaṇ (Tuppariyum Nāval) / கே. ஆர். ரங்கராஜூ = Kē. ār. Rankarājū
சென்னை: ஶ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2022
vi, 194p.; 22 cm.
300gm.
$ 10.00 / pb
http://www.marymartin.com/web?pid=842817

Detective Novel
------------------------------------------------------------------------------------------
அடைக்கும் தாழ் = Aṭaikkum Tāl / சல்மா = Calmā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
215p.; 22 cm.
9789355232229
300gm.
$ 13.75 / pb

பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே இயல்பாகத் தோன்றும் ஈர்ப்பு உயிர்களின் ஆதாரமான உணர்வு. வாழ்வின் அமுதம். சாதியும் மதமும் இந்த அமுதத்தை விஷமாக்கி வருகின்றன. மதங்களுக்கிடையிலான விரோதம் மத எல்லைகளைக் கடந்த காதலையும் தீண்டி அதனைக் கருகச் செய்கின்றது. மதம் தாண்டிய காதலை இறைமைக்கு எதிராகக் காணும் பிற்போக்குத்தனமும் அத்தகைய காதலைப் போர் வியூகமாகக் காணும் மதவாதமும் சந்திக்கும் புள்ளியில் வெடித்துச் சிதறுகின்றன இளம் மனங்களின் களங்கமற்ற காதல்கள். அன்பைத் தாழிட்டு அடைக்க முடியாது என்கிறார் வள்ளுவர். பேதங்களில் ஊறிய மானுட மனம் சாதி, மத, வர்க்க எல்லைகளைக் கடந்த காதல்களுக்கு அந்தப் பெருமையை வழங்க மறுக்கிறது. காதலும் அரசியலாக மாறிச் சந்தி சிரிக்கும் காலகட்டத்தின் காதல்களை அடையாளம் காட்டுகிறது சல்மாவின் நாவல்.
http://www.marymartin.com/web?pid=842795
---------------------------------------------------------------------------------------------
அடுத்த கட்டம் (தமிழின் முதல் பிஸினஸ் நாவல்!) = Aṭutta Kaṭṭam (Tamiliṇ Mutal Pisiṇas Nāval!) / என். சொக்கன் = Eṇ. Cokkaṇ
Chennai: ZDP Specifics (An Imprint of Zero Degree Publishing), 2022
140p.; 22 cm.
9788195673582
200gm.
$ 8.50 / pb

உங்களுக்குக் கதை படிக்கப் பிடிக்குமா? புதிய விஷயங்கள், வெற்றி உத்திகளைக் கற்றுக்கொள்ளப் பிடிக்குமா? இந்த இரண்டும் ஒரே புத்தகத்தில் சேர்ந்து கிடைத்தால் எப்படியிருக்கும்! 'அடுத்த கட்டம்', தமிழின் முதல் பிஸினஸ் நாவல். திறமையுள்ள, கற்றுக்கொள்ள ஆவலுடன் இருக்கிற இளைஞர் ஒருவருடைய கதையைச் சொல்லி

அதன்மூலம் நமக்குப் பல்வேறு விஷயங்களைச் சொல்லித்தருகிற புதுமையான படைப்பு. கதைபோலப் படிக்கலாம், பயனுள்ள உத்திகளைச் சுவையாகக் கற்றுக்கொள்ளலாம். குங்குமம் இதழில் தொடராக வெளியாகி ஆயிரக்கணக்கான வாசகர்களுடைய பாராட்டைப் பெற்ற 'அடுத்த கட்டம்' பிஸினஸ் நாவல் உங்களுடைய வாழ்க்கையிலும் அடுத்த முன்னேற்றத்தைக் கொண்டுவரும்.
**http://www.marymartin.com/web?pid=842799**
------------------------------------------------------------------------------------------
ஆட்டுக்குட்டியும் அற்புத விளக்கும் = āṭṭukkuṭṭiyum Arputa Viḷakkum / பிரியா விஜயராகவன் = Piriyā Vijayarākavaṉ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai 2022
271p.; 22 cm.
9789391949143
400gm.
$ 15.00 / pb

உறவுசார் சிக்கல்களுக்குள் நுழைந்து வராதவர்கள் யாருமே இல்லை. இந்த காலகட்டத்தில், எல்லா உறவுகளும் இழுபறிக்குள் நிற்கும்போது, வேலை நிமித்தம் வெளிநாட்டில் குடிபெயர்ந்து வாழும் தாய் மகனுக்குள் நிகழும் நிகழ்வுகளின் தொகுப்பு இது.
**http://www.marymartin.com/web?pid=842793**
------------------------------------------------------------------------------------------
அனல் பார்வை அறி = Aṉal Pārvai Ari / ஷேஹா ஸகி = śēhā Saki
கரூர்: எம். எஸ். பப்ளிகேஷன்ஸ் = Em. Es. Papḷikēśaṉs, Karūr 2022
298p.; 20 cm.
300gm.
$ 13.50 / pb

காதல் சாகரத்தில் ஆய்வுப்பயணிகள் இவர்கள்.. காதலெனும் தேடலில் கரையை கண்டு, இருகரம் கோர்த்து, விழிகள் சேர்த்து, இதழ் இணைத்து.... அனல் அவளை குளிர்வித்த பனியானவன், காதலுக்காக காதலையே கொல்ல துணிந்த விந்தை என்னவோ! பொன் வேந்தனவனின் இதயச்சிறையில் 11 இவள் ஆயுள் கைதியாக! அருவியை கொள்ளையிட்டு காதலையே தன்னை காதலிக்க வைத்த இவன் காதலின் காதலனாக! அனல் பார்வை அறி!
**http://www.marymartin.com/web?pid=842791**
--------------------------------------------------------------------------------------
தூமகேது = Tūmakētu / புவனா சந்திரசேகரன் = Puvaṉā Cantiracēkaraṉ
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṉṉai 2023
360p.; 20 cm.
350gm.
$ 18.00 / pb
**http://www.marymartin.com/web?pid=842790**

குடும்ப நாவல்
-------------------------------------------------------------------------------

துளி எண்ணெய் = Tuḷi Eṇṇey / அகிலாண்ட பாரதி = Akilāṇṭa Pārati
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṉṉai 2023
232p.; 20 cm.
250gm.
$ 11.00 / pb
**http://www.marymartin.com/web?pid=842789**

குடும்ப நாவல்
--------------------------------------------------------------------------------
அச்சுதம் கேசவம் = Accutam Kēcavam / இரா. முருகன் = Irā. Murukaṉ
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
469p.; 22 cm.
9789393882639
550gm.
$ 28.50 / pb

தெருவில் சிறு பையன்களும், முட்டாக்கை எடுத்து விட்டபடி ஒரு கிழவியும், நாலைந்து நடு வயசுப் பெண்களும் ஆட ஆரம்பித்திருந்தார்கள். சீராகக் கைதட்டு ஒலித்துக் கொண்டிருந்த தெரு நடுவில் வைத்தாஸும் ஆட ஆரம்பித்தான். மேலே படிந்து சிதறும் ஆலங்கட்டிகளை விலக்காமல் ஆடினான் அவன். அவன் ஆடுவதால் அவனாக இருக்கிறான். இந்த கணத்துக்காக தெய்வங்களுக்கும் அசுரர்களுக்கும் நன்றி.
**http://www.marymartin.com/web?pid=843595**
----------------------------------------------------------------------------------------------------
ஆழினி = āliṇi / சொ. நே. அறிவுமதி = Co. Nē. Arivumati
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṇi Patippakam, Ceṉṉai 2022
363p.; 22 cm.
9789392224386
550gm.
$ 20.00 / pb

ஆழினி நாவல் கற்பனையும் சாகசமும் மாயாஜாலமும் நகைச்சுவையும் கேலிச்சித்திரபாணியும் யதார்த்தமும் கலந்த கலவை என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. நகைச்சுவையைப் பல அணுகுமுறைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர்.
**http://www.marymartin.com/web?pid=843596**
----------------------------------------------------------------------------------------------------
கமலம் (1898 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் மொழிபெயர்ப்பின் செவ்வியல் மறுபதிப்பு) = Kamalam (1898 ām āṇṭu Veḷivanta Tamil Molipeyarppiṉ Cevviyal Marupatippu)843596 / கிருபாபாய் சத்தியநாதன்; ஆர். ராஜகோபாலன் = Kirupāpāy Cattiyanātaṉ; ār. Rājakōpālaṉ
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṉṉai 2022
236p.; 22 cm.
9789391947019
400gm.

$ 14.50 /pb

உதகையில் முதலில் தோடர்களின் வாழ்க்கை பற்றிய ஆங்கிலக் கட்டுரைகளைத் தொடர்ந்து பல கட்டுரைகளை அன்றைய இதழ்களில் வெளியிட்டார். சமூக வாழ்க்கையிலும் பெண்கள் கல்வியிலும் முக்கியமாக முஸ்லிம் பெண்கள் கல்வியிலும் மேம்பாடு செய்ய பாடுபட்டார்.
**[http://www.marymartin.com/web?pid=843000](http://www.marymartin.com/web?pid=843000)**
------------------------------------------------------------------------------------------------
அன்புடை நெஞ்சம்: அன்றுமுதல் இன்றுவரை தமிழ்க் கவிதைகளில் காதலின் மழைப்பொழிவு! = Aṉpuṭai Neñcam: Aṉrumutal Iṉruvarai Tamilk Kavitaikaḷil Kātaliṉ Malaippolivu! / என். சொக்கன் = Eṇ. Cokkaṇ
Chennai: ZDP Specifies (An Imprint of Zero Degree Publishing), 2022
216p.; 22 cm.
9788195673568
300gm.
$13.00 / pb

அகப்பாடல்கள் தமிழின் பெருமை. இரண்டு தனிநபர்களுக்கிடையேயுள்ள அன்பைக் காட்டுகின்ற இந்தப் பாடல்கள் அந்தந்தக் காலகட்டத்தின் வாழ்க்கை முறையையும் அழகாகப் பதிவுசெய்வதால், எப்போது, எங்கிருந்து வாசித்தாலும் அந்தக் காதலர்களுக்குச் சற்றே நெருங்கிவிடுவதுபோலவும், அவர்களிடமிருந்து நாசூக்காக விலகிநின்று அந்த அன்பை ரசிப்பதுபோலவும் தோன்றும். நமது அன்புக்குரியவர்களை நினைக்கவைக்கும்.
சங்க இலக்கியத்தில் தொடங்கிய இந்த மரபை, அதன்பிறகு பல கவிஞர்கள், இன்றைய திரைப்பாடலாசிரியர்கள் வரை முன்னெடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதற்காக இவர்கள் எல்லாரும் ஒரே தரத்தில் எழுதுகிறார்கள் என்பது அர்த்தமில்லை.
**[http://www.marymartin.com/web?pid=843597](http://www.marymartin.com/web?pid=843597)**
------------------------------------------------------------------------------------------------
மனாசே ராஜா வழங்கும் நான் தான் ஔரங்ஸேப் = Maṇāce̅ Rājā Valankum Nāṇ Tāṇ Auranse̅p / சாரு நிவேதிதா = Cāru Nivētitā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
917p.; 22cm.
9789391748906
1050gm.
$ 57.50 / pb

இந்த பூமியின் காலம் அட்சரேகைகளாலும் தீர்க்கரேகைகளாலும் அளக்கப்படுகிறது என்றால் வரலாறு என்பது ரத்தத்தின் மீதும் முத்தத்தின் மீதும் புனையப்பட்ட கதைகளால் உருவானது. புகழப்பட்ட அரசர்கள்தான் தெய்வங்கள் ஆக்கப்பட்டார்கள். எதிர்த் திசையில் இகழப்பட்டவர்கள் அசுரர்கள் ஆகிறார்கள். அப்படி பாடப் புத்தகங்கள்

வழி கிட்டத்தட்ட ஓர் அசுரனாக கட்டமைக்கப்பட்ட பிம்பம்தான் ஔரங்ஸேப். ஒரே மொழி, ஒரே மதம், மற்ற மதங்கள் யாவும் கீழானவை என்று அதிகார பீடம் அவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் வாழிடங்களையும் இடித்து அரச கோட்டைகள் கட்டுகின்ற ஒரு இருண்ட காலத்தில், அரக்கனாக பிம்பம் எழுப்பப்பட்ட ஓர் அரசனின் வாழ்வை வரலாற்றின் கல்லறைகளில் இருந்து தார்மீக அறத்துடன் சரியான தரவுகளின் மூலம் நாவலாக எழுதியிருக்கிறார் சாரு நிவேதிதா.
பொதுவாக வரலாற்றுப் புனைவுகள் அலங்காரமான சொற்கள், மிகை வர்ணனைகள், நீளமான வாக்கியங்கள் கொண்டு எழுதப்படும். ஆனால், பாரமற்ற வாக்கியங்கள், எளிய சொற்றொடர்கள் மூலம் நேர்மையான பார்வையுடன் மிக அணுக்கமான சொல்லல் முறை வழியே ஒரு எதிர் அரசியல் பேசும் படைப்பைத் தந்திருக்கிறார் சாரு நிவேதிதா. காலத்திற்கு எதிராக ஒரு சீரிய கலைஞனின் பிரக்ஞை இப்படித்தான் வேலை செய்யும்.
**[http://www.marymartin.com/web?pid=841902](http://www.marymartin.com/web?pid=841902)**
----------------------------------------------------------------------------------------------------
ஒளிவிலகல் = Oḷivilakal / யுவன் சந்திரசேகர் = Yuvaṉ Cantiracēkar
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
283p.; 22cm.
9789395511162
350gm.
$ 17.00 / pb

பொதுவான தளத்தில், யுவன் சந்திரசேகர் கதைகளுக்கு இரண்டுவித அடையாளங்கள் உள்ளன. ஒரு கதைக்குள் பல கதைகளை சுருட்டி விரிக்கும் பண்பு. அதனால் படித்துக்கொண்டே போகும்போது கடிகாரத்தின் சுருண்டு இறுகிய வில் மெதுவாக நெகிழ்ந்து கொடுப்பதுபோல, கதை மெல்ல நெகிழ்ந்து விரிந்துகொண்டே போகும். மேலும் ஒருவித மாயத்தன்மை அல்லது அசாதாரணம் கொண்ட கதைக்களங்கள் மற்றும் கதைக்குள் கதையை - ரம்மியில் ஜோக்கர் போல - மாற்றி மாற்றி செருகிவைத்திருப்பதால், நேர்கோட்டில் கதை நகராதது மட்டுமின்றி, வாசித்தபின் பிறருக்கு சொல்வதும் எளிதல்ல. ஒரு இசைக்கோர்வையைப்போல நம்மளவில் அதை அனுபவிப்பது ஒன்றே சாத்தியம். அதுவே சரியானதும்கூட. - ரமேஷ் கல்யாண்
**[http://www.marymartin.com/web?pid=841983](http://www.marymartin.com/web?pid=841983)**
----------------------------------------------------------------------------------------------------
அபிமானவல்லி = Apimāṇavalli / கல்கி ராஜேந்திரன் = Kalki Rājēntiraṉ
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṉṉai 2022
240p.; 22cm.
300gm.
$ 10.00 / pb

இத் தொடர்களைப் படித்து, கல்கி இதழில் 1983-84-இல் ஆறுமாதங்கள் நூலாசிரியர் எழுதிய தொடர் கதை இது.

சோழ மன்னன் ஆதித்தன் தனது பிரதிநிதி விக்கியண்ணனை சேர நாட்டுக்கு அனுப்புகிறார். அங்கிருந்து பெரும் யானைப் படைகளை தஞ்சைக்கு அழைத்து வரும் பொறுப்பு விக்கியண்ணனுக்கு. முன்னதாக, திருப்புறம்பயத்தில் கோயில் சிற்பப் பணியில் தனது தந்தையுடன் இருந்த யுவதி அபிமானவல்லியைச் சந்தித்து அவள் மீது காதல் கொள்கிறான் விக்கியண்ணன். பல்கலைச்செல்வியான அபிமானவல்லி, தஞ்சையின் ராஜநர்த்தகியாகி தனி மாளிகையில் குடிவைக்கப்படுகிறாள்.

சேர நாட்டுப் பயணம் வெற்றிகரமாக நிறைவடைந்த நிலையில், தஞ்சையில் அபிமானவல்லியை மாளிகையில் விக்கியண்ணன் சந்திப்பதில் இருந்து விறுவிறுப்படைகிறது கதை. அந்த மாளிகையில் செய்யாத கொலைக் குற்றத்துக்கு பொறுப்பேற்று விக்கியண்ணன் சிறைக்குச் செல்வதும், அதன்பின்னர் மன்னன் ஆதித்தனின் அன்பை அபிமானவல்லி பெறுவதும் என சிக்கல்கள் விழத் தொடங்குகின்றன.

பல்லவ மன்னன் அபராஜிதன் சார்பாக வேவு பார்க்க வந்தவள்தான் அபிமானவல்லி என்பதும், தனது சாமர்த்தியத்தால் ஒற்றர் தலைவன் சாத்தனைக் கொன்று, அந்தப் பழியை விக்கியண்ணன் மீது போட்டதும் என கதையின் இறுதியில் சிக்கல்களை அவிழ்க்கும் விதம் அபாரம்.
**http://www.marymartin.com/web?pid=839166**

---

ஆளப்பிறந்தவன் - பாகம் 1 (செம்பியன் வீழ்ச்சி) = Aḷappirantavaṉ - Pākam 1 (Cempiyaṉ Vīlcci) / எஸ். விஜய்குமார் = Es. Vijaykumār
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
335p.; 22cm.
9789395272384
450gm.
$ 22.50 / pb

சோழர்களின் புலிக் கொடி அதி உயரத்தில் பறந்து கொண்டிருந்த காலம். அல்லது அதி உயரத்தில் இருந்து வீழத் தொடங்கி இருந்த காலம். மூன்றாம் குலோத்துங்கச் சோழன் அரியணையில் இருந்தான். பாண்டிய மன்னன் ஜடாவர்மனைத் தோற்கடித்ததோடு, தனக்குக் கப்பம் கட்டும் சிற்றரசனாக ஆக்கியிருந்தான். சுந்தர பாண்டியன் மீண்டெழுந்து ஆட்சியைப் பிடிக்கிறான். சூடுபிடிக்கிறது அரசியல் களம்.
அடிபட்ட வேங்கைகள் பழி வாங்குவதற்கு ஏற்ற தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தன. வெல்லும் வம்சம் பக்கம் அணி திரள வழக்கம்போல் தயாராகிக் கொண்டிருந்தனர் குறு நில மன்னர்கள். மாறி மாறி போரிட்டுக் கொள்ளும் சோழ பாண்டியர் நீங்கலாக இன்னொரு ராஜ வம்சமும் இழந்தவற்றை மீட்டெடுக்கக் காத்திருந்தது. அவர்களுடைய குலம் சிதைந்து சின்னாபின்னமாகி இருந்தது.

அவர்களது அரண்மனைகள், அவர்கள் கட்டிய கோவில்கள், வெட்டிய குளங்கள், செதுக்கிய சிலைகள், உருவாக்கிய பாதைகள் எல்லாம் எல்லாம் மண்மூடிப் போயிருந்தன.
காடும் முழுமையாக அழிந்த பின்னும் ஒரே ஒரு விதை மட்டும் உயிர்ப்புடன் இருந்தது. உரிய காலத்தில் மண் இளகிக் கொடுத்தது. அந்த விதையின் மேல் வெளிச்சம் பட்டது. மழைத்துளி விழுந்தது. அந்த ஒற்றை விதை இன்னொரு காட்டை உயிர் பெறச் செய்ய மெல்லக் கண் மலர்ந்தது. செம்பியனின் வீழ்ச்சியும், கோப்பெருஞ் சிங்கனின் எழுச்சியும் ஒரே காலத்தில் நடக்கத் தொடங்கின.
**http://www.marymartin.com/web?pid=841963**
----------------------------------------------------------------------------------------------------
ஆதிமந்தியின் காதல்: கரிகாலன் காலத்து காதல் கதை = Atimantiyiṉ Kātal: Karikālaṉ Kālattu Kātal Katai / ஸ்ரீமதி = Srīmati
சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṉṉai 2022
408p.; 22cm.
9789392406973
500gm.
$ 22.50 / pb

சங்ககால பெண்பாற் புலவர்களில் ஒருவரும் சோழ மாமன்னன் கரிகாலரின் மகளுமான ஆதிமந்தியின் வாழ்க்கை வரலாறே இந்த 'ஆதிமந்தியின் காதல்' புதினம். ஆதி தமிழினத்தின் வாழ்வியலையும், புலமையையும், அறிவையும் அழகாய் எடுத்தியம்பும் புதினம் 'ஆதிமந்தியின் காதல்'.
**http://www.marymartin.com/web?pid=841964**
----------------------------------------------------------------------------------------------------
கனல் காரிகை - பாகம் 1&2 = Kaṉal Kārikai - Pākam 1&2 / இராகவன் ஆனந்த் = Irākavaṉ Aṉant
சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṉṉai 2022
2 Vols. 22 cm.
9789395523196
1000gm.
$ 40.00 / pb

என்னுடைய முதல் புதினமான ‘கனல் காரிகை ‘ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன், அவர் மனைவி பெருங்கோப்பெண்டு மற்றும் ஒல்லையூர் தலைவன் பெருஞ்சாத்தன் ஆகியோரை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தை மையமாகக் கொண்டு அதன் உண்மைத் தன்மை மாறாமல் கற்பனை கலந்து எழுதிய இப்புதினம். சங்க கால மக்களின் நற்குணங்களை விவரிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் பின்பற்றிய பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், கைம்பெண்களின் வாழ்க்கை முறையையும் தெளிவாக எடுத்தியம்புகிறது.
**http://www.marymartin.com/web?pid=841965**
----------------------------------------------------------------------------------------------------

சகுனா (1898 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் மொழிபெயர்ப்பின் செவ்வியல் மறுபதிப்பு) = Cakuṇā (1898 ām āṇṭu Veḷivanta Tamil Molipeyarppiṉ Cevviyal Marupatippu) / கிருபாபாய் சத்தியநாதன் = Kirupāpāy Cattiyanātaṉ
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṉṉai 2022
255p.; 22 cm.
9789391947101
450gm.
$ 15.00 / pb

சகுணா என்னும் இப்புதினம் ஒருவகையில் ஒருவகையில் சுயசரிதைக் கதையாக வெளிப்பட்டிருக்கிறது. இக்கதையின் இரண்டு பகுதிகளாக சகுணாவின் தாயார் மதமாற்றத்திற்கு முன் இந்துப் பெண்ணாக வாழ்ந்ததும், பின் மதம் மாறிய கிறிஸ்த்துவப் பெண்ணாக சகுணாவின் கதையும் பேசப்படுகின்றன.
http://www.marymartin.com/web?pid=842527
----------------------------------------------------------------------------------------------------
அந்தரம் = Antaram / தொ. பத்தினாதன் = To. Pattiṇātaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
208P.; 22 cm.
9788196058920
300gm.
$ 12.50 / pb

அலைவுறுதல். பத்திநாதனின் நாவலை அதன் சாரம் சார்ந்து இந்த ஒற்றைப் புள்ளியில் குவிமையப்படுத்தலாம். இந்த அலைவுறுதல் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கான பொருண்மையான அலைவுறுதலாகவும், அகதிகள் முகாமுக்குள் அன்றாட வாழ்க்கைப் பாட்டிற்கு நடக்கும் பொருள்சார்ந்த அலைவுறுதலாகவும் மாறுபட்ட தோற்றம் கொண்டு நாவலில் விரிகிறது.
http://www.marymartin.com/web?pid=842797
-------------------------------------------------------------------------------------
விஸ்வரூபம் = Visvarūpam / இரா. முருகன் = Irā. Murukaṉ
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
957p.; 22 cm.
9789393882189
850gm.
$ 57.50 / pb

நேற்று விடிகாலை காசர்கோட்டில் இருந்து கிளம்பி அங்கங்கே கொஞ்சம் நின்று இந்தக் காளைவண்டி நகர்ந்தபடி இருக்கிறது. பூர்வீகர்கள் எப்போதும் போல் வண்டிக்கு முன்னால் ஆவி ரூபமாக நகர்ந்து வழிநடத்திப் போய்க்கொண்டிருக்கிறார்கள். மகாதேவனுடைய அம்மா விசாலாட்சியும் பிரம்புக் கூடையில் இரண்டு எலும்பாக மாத்திரம் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாள். கொல்லூரில் அவளுக்கு ஒரு பிரார்த்தனை பாக்கி இருக்கிறது.

http://www.marymartin.com/web?pid=843570
--------------------------------------------------------------------------------------
புகை நடுவில் = Pukai Naṭuvil / கிருத்திகா = Kiruttikā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
295p.; 22 cm.
9789391748647
400gm.
$ 17.50 / pb

நம் சமுதாயத்தில் இப்போது குமையும் புரட்சிகளை, ஒரு திரையாக வைத்துக்கொண்டு இக்கதாசிரியர், சில நூதன பாத்திரங்களை சிருஷ்டித்திருக்கிறார். நம்முடைய நிலைமையை நமக்கு நிலைக் கண்ணாடிபோல் விளக்கிக்காட்ட, மென்மையான மனோபாவங்கள் படைத்த இப்பாத்திரங்களே தகுந்த கருவிகளாகின்றன. டில்லி சமூக வாழ்க்கை இதில் ரஸமாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. கதையின் நடை எளிதாகவும் சுவையுடனும் பொருந்தி இருக்கிறது. இதில் தோன்றும் கூரிய ஏளனமும், ஹாஸ்யமும் அநுதாபத்துடன் அமைந்திருக்கின்றன. சந்திராவதியின் உள்ளத் துடிப்பு, அன்புக்காக அவள் கொள்ளும் பசி, விதர்பனின் பற்றில்லாமை, பிறகு கடைசியில் அவர்கள் ஒருவரைக்கொருவர் புரிந்துகொள்வது, இப்படி வாழ்க்கை மலரை நமக்கு வெகுவாகப் பிரித்துக் காட்டுகிறார் ஆசிரியர்: சத்தியனின் உயர்தர தியாகத்தைக் கேட்டு நம் உணர்ச்சி உன்னதமான நிலையை அடைகிறது. விதர்பனுடைய வேதாந்தம் நம் மனதை எட்டாத உயரத்திற்கு எடுத்துச் செல்லுகிறது. தூண்டிவிடப்பட்ட, நாம் சமூகத்தின் இதர இன்னல்களை நன்கு ஆராயத் தொடங்குகிறோம். 'கிருத்திகா' மேலே என்ன செய்தால் நாம் சுகமாக வாழலாமென்பதைப் பற்றி ஒரு பெரிய ப்ரச்சனையைக் கிளப்பிவிடுகிறார்.
http://www.marymartin.com/web?pid=843587
--------------------------------------------------------------------------------------
நந்தினி எனும் நான்..! = Nantiṉi Eṉum Nāṉ..! / உளிமகிழ் ராஜ்கமல் = Uḷimakil Rājkamal
சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṉṉai 2022
298p.; 22 cm.
9789395523288
450gm.
$ 16.00 / pb

நந்தினி என்னும் பெயரைக் கேட்டவுடன் அனைவருக்கும் நினைவில் நிற்பது "பொன்னியின் செல்வன்" எனும் வரலாற்று நாவல்தான். அந்த அளவிற்கு அக் கற்பனைப் பாத்திரத்திற்கு உயிரூட்டித் தன் நாவலில் உலவ விட்டிருக்கிறார் வரலாற்று நாவலின் பிதாமகனாரான கல்கி அவர்கள்.
http://www.marymartin.com/web?pid=843235
--------------------------------------------------------------------------------------
பொன்னி வளவன் = Poṉṉi Vaḷavaṉ / உளிமகிழ் ராஜ்கமல் = Uḷimakil Rājkamal

சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṉṉai 2022
296p.; 22 cm.
9789395523226
450gm.
$ 16.00 / pb

சோழநாடு சீரும் சிறப்பும் மிக்கதாக உயர்ந்தமைக்குச் சோழ நாட்டின் அரசர்கள் மட்டுமே காரணம் அல்ல; அந்நாட்டின் தளபதிகளும், உபதளபதிகளும், வீரர்களும் எனப் பலர் உண்டு என்பதை எடுத்துரைக்கிறது 'பொன்னி வளவன்' என்னும் வரலாற்று நாவல்.
[http://www.marymartin.com/web?pid=843589](http://www.marymartin.com/web?pid=843589)
------------------------------------------------------------------------------------------
புதிய கோணங்கி = Putiya Kōṇanki / கிருத்திகா = Kiruttikā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
186p.; 22 cm.
9789391748388
250gm.
$ 11.00 / pb

Novel

கிருத்திகாவின் ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்திய வடிவம் அவரது நாவல்கள். 1950 - 1970 இடைப்பட்ட இருபதாண்டுகளில் அவரது படைப்புணர்வு வெளிப்பாட்டின் ஊடகமாக நாவல் இருந்துள்ளது. இக்காலகட்டம் புதிய நாடாக உருப்பெற்ற இந்தியாவிற்கு முக்கியமானதாக இருந்தது. விடுதலை பெற்ற புதிய இந்திய உருவாக்கத்தின் மையமாக இருந்த தில்லி அதிகாரவட்டத்திற்கு மிக அருகில் வாழும் வாய்ப்பும் கிருத்திகாவிற்கு இருந்தது. அப்பின்னணியையே தனது நாவல்களின் மையச்சரடாக கிருத்திகா வரித்துக்கொண்டது ஒருவிதத்தில் ஆச்சரியமானது இல்லை; ஆனால் சற்று நிதானமாகத் தமிழ் இலக்கியச் சூழலில் நிலவிய விடுதலைப் போராட்டம், புதிய இந்தியா உருவாக்கம் குறித்த சித்தரிப்புகளைச் சிந்திக்கும்போது, அவரது முயற்சி அசாத்தியமான துணிச்சலைக் காட்டுகிறது என்றே கூறவேண்டும். - அ. மங்கை
[http://www.marymartin.com/web?pid=843590](http://www.marymartin.com/web?pid=843590)
------------------------------------------------------------------------------------
விஜயராகவன் துப்பறியும் நாவல் = Vijayarākavaṉ Tuppariyum Nāval / ஜே. ஆர். ரங்கராஜு = Jē.ār. Rankarājū
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṉṉai 2022
240p.; 22 cm.
350gm.
$ 12.50 / pb

இந்த நாவல்களின் பலம் சரளமான நடை ஒன்றே. புத்தகங்கள் போரடிக்காமல் காப்பாற்றுவது அந்த நடைதான். ஆனால் உரசடைிளவைல எயடரந-க்காகத்தான் படிக்க வேண்டி இருக்கிறது.

இவரது நாவல்களின் முக்கியத்துவம் அன்று படிப்பை வளர்ப்பதில் உதவி செய்திருக்கும் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை.
**http://www.marymartin.com/web?pid=843588**
-----------------------------------------------------------------------------------------------------
சீன பல்லவன் (பாகம் 3 & 4) = Cīṇa Pallavaṉ (Pākam 3 & 4) / உதயணன் = Utayaṇaṉ
சீதை பதிப்பகம், சென்னை (கௌரா புத்தக மையம்) = Cītai Patippakam, Ceṉṉai (Kaurā Puttaka Maiyam), 2022
2 vols. 22 cm.
9789392406065
1350gm.
$ 61.00 / pb

இராஜசிம்மன் என்னும் பட்டப்பெயர் கொண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் 'சீனபல்லவன்' என்று சிறப்பிக்கப்பட்டதன் காரணத்தை முன்வைத்து எழுந்ததே 'சீனபல்லவன்' எனும் இந்நாவல். சீன தேசம் தெற்கு, வடக்கு, மத்திய சீனா எனும் மூன்று பிரிவுகளாக இருந்தாலும், உண்மையில் பலவிதமாகப் பிரிந்திருந்தது.
**http://www.marymartin.com/web?pid=843642**
-----------------------------------------------------------------------------------------------------------------
வெண்விழி ஆதிரை = Veṇvili ātirai / வில்லரசன் = Villaracaṉ
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṉṉai 2022
151p.; 22 cm.
250gm.
$ 7.50 / pb

Historical Novel

சோழ மன்னர்கள் என்றதும் பலருக்கும் நினைவில் எழுவது முதலாம் இராஜராஜ சோழரும் அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழரும் தான். ஆனால் இருவரையும் தவிர்த்து பல சோழ மன்னர்கள் வெற்றி புரவிகள் பூட்டிய புகழ் தேர்களில் வலம் வரத் தக்க தகுதியுடைய மிகுந்த செயல்கள் புரிந்துள்ளனர். அவர்களைப் பற்றிய ஒரு வரலாற்று நாவல் எழுத வேண்டும் என்கிற ஆவல் என்னுள் இருந்துகொண்டே இருந்தது.
**http://www.marymartin.com/web?pid=843592**
---------------------------------------------------------------------------------------------
உறையும் தருணங்கள் = Uraiyum Taruṇankaḷ / பூர்ணிமா கார்த்திக் (பூகா) = Pūrṇimā Kārttik (pūkā)
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
184p.; 20 cm.
200gm.
$ 9.00 / pb
**http://www.marymartin.com/web?pid=843636**

**Novel**
-----------------------------------------------------------------------------

விழியோடு விளையாடு... = Viliyōṭu Viḷaiyāṭu... / ரியா மூர்த்தி = Riyā Mūrtti
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
184p.; 20 cm.
200gm.
$ 9.00 / pb

Novel
தற்கால தரணியில், தனக்கென தனிப் பெயரைச் சம்பாதித்து இருக்கும் தாய்லாந்துதேசத்தில் கதை துவங்குகிறது. ஆர்கே என்றொரு அபாயகரமானவன், இளம் பெண்களை கடத்தும் கூட்டத்திடமிருந்து நாயகியை விலைக்கு வாங்கிப் போகிறான். நாயகியால் அவனிடமிருந்து தப்பிக்க முடியுமா? திடீர் திடீரென்று குணம் மாறும் அவனின் உண்மையான நோக்கம்தான் என்ன? வாருங்கள் அறிந்து கொள்வோம்.
[http://www.marymartin.com/web?pid=843635](http://www.marymartin.com/web?pid=843635)
-------------------------------------------------------------------------------------
இதயத்தின் ஓசை தான் காதல் = Itayattiṉ ōcai Tāṉ Kātal / ஷாந்தினிதாஸ் = śāntiṇitās
கரூர்: எம். எஸ். பப்ளிகேஷன்ஸ் = Em.Es. Papḷikēśaṇs, Karūr 2022
254p.; 20 cm.
300gm.
$ 11.50 / pb

Novel

முத்தமிடும் முத்துக்களின் ஓசையின் பின்னே சென்ற தன்னிதயத்தின் நாளங்களை கடிவாளமிட்டு காதலுக்கும் கர்வத்திற்கும் நடுவே இறுக்கமும் தயக்கமுமாய் அவன்! தாரத்தின் தகுதி இதுவென அவன் வரையறுக்க, அவன் அகமோ உன் இதயத்தின் இயக்க வொலி அவள் கொலுசொலி என.... அகந்தை துறந்து அவளடி பற்றி அகம்புக, அவன் இருள் உலகம் ஒளி பெற, அவன் இதயத்திலோ மென்னிசையாய் இன்னிசையாய் ஜல் ஜல் ஓசை!
[http://www.marymartin.com/web?pid=843633](http://www.marymartin.com/web?pid=843633)
-------------------------------------------------------------------------------------
செவ்வந்தி = Cevvanti / ரோசி கஜன் = Rōci Kajaṇ
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
304p.; 20 cm.
300gm.
$ 15.00 / pb

Novel

இதுவரை நான் எழுதிய நாவல்கள் அனைத்தும் இலகுவான அல்லது காத்திரமான கருவைக் கொண்டவையாக, என்னைச் சுற்றியுள்ள, நான் அறிந்த கேள்விப்பட்ட கதை மாந்தர்களையும் சந்தர்ப்பங்களையும் கொண்டு எழுதப்பட்டவையாக இருப்பினும், அங்கே, என் விருப்பும்

கற்பனையும், ஏன் என் வாசகர்களின் விருப்பும் ஓரளவேனும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பதை மறுக்கவே முடியாது.
**http://www.marymartin.com/web?pid=843630**
--------------------------------------------------------------------------------
யாரோ யாரோடி! = Yārō Yārōṭi! / ஸ்ரீலட்சுமி = SrīLaṭcumi
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
256p.; 21 cm.
250gm.
$ 12.50 / pb
**http://www.marymartin.com/web?pid=843634**

**Novel**
--------------------------------------------------------------------------------
சதிராடும் நயனங்கள் (கதை சங்கமம்-அறிவியல்/திகில் பிரிவில் மூன்றாம் பரிசு வென்ற கதை = Catirāṭum Nayaṇankaḷ (Katai Cankamam-Ariviyal/Tikil Pirivil Mūṇrām Paricu Veṇra Katai / பூர்ணிமா கார்த்திக் (பூகா) = Pūrṇimā Kārttik (pūkā)
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2022
360p.; 20 cm.
350gm.
$ 18.00 / pb

குடும்ப நாவல்

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையுமாய் பாரதி காணும் முன்பே, இப்பாரதம் கண்ட புதுமைப் பெண்ணாய் தஞ்சை பெரிவுடையார் கோவிலைச் சுற்றியுள்ள வீதியில், அதிகாைலை வேளையில் வீறு நடை போட்டுக் கொண்டிருந்தாள் நற்றிணை.
**http://www.marymartin.com/web?pid=843624**
--------------------------------------------------------------------------------
தீக்குள் விரலை வைத்தாள் = Tīkkuḷ Viralai Vaittāḷ / அனன்யா = Aṇaṇyā
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
312p.; 20 cm.
200gm.
$ 15.50 / pb

குடும்ப நாவல்

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்கிறது ஒரு பழமொழி. "ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமமான எதிர்வினை உண்டு" என்கிறது நியூட்டனின் விதி. அதுவே இந்த கதையின் சாராம்சம்.
**http://www.marymartin.com/web?pid=843631**
--------------------------------------------------------------------------------
ஓவியமோ அற்புதமோ = ōviyamō Arputamō / ராஜலட்சுமி நாராயணசாமி = Rājalaṭcumi Nārāyaṇacāmi
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023

360p.; 20 cm.
350gm.
$ 18.00 /pb
**http://www.marymartin.com/web?pid=843629**

குடும்ப நாவல்

---------------------------------------------------------------------------------------

ஆனந்த ராகம் = āṇanta Rākam / அன்னபூரணி தண்டபாணி = Aṇṇapūraṇi Taṇṭapāṇi
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
400p.; 20 cm.
350gm.
$ 20.00 / pb

Novel
ஆனந்தமாகக் கண்களை மூடி இனிமையான ஒரு ராகத்தைக் கேட்டு அனுபவித்திருக்கிறீர்களா? இந்தக் கதையை, மெல்லிய இசையைக் காற்றில் தவழ விட்ட படி கேட்டுக் கொண்டே படித்து முடித்து அதற்குப் பின்னர் மனதில் அசை போட்டால் அதே இனிமையான அனுபவம் கிடைக்கும்.
**http://www.marymartin.com/web?pid=843623**

---------------------------------------------------------------------------------------

வசுதேவ குடும்பகம்: கதை சங்கமம்-காதல்/குடும்பம் பிரிவில் முதல் பரிசு வென்ற கதை = Vacutēva Kuṭumpakam: Katai Cankamam-Kātal/Kuṭumpam Pirivil Mutal Paricu Veṇra Katai / புவனா சந்திரசேகரன் = Puvaṇā Cantiracēkaraṇ
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2022
376p.; 20 cm.
350gm.
$ 18.50 / pb

குடும்ப நாவல்

வசுதேவ குடும்பகம் என்று மகா உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த வார்த்தை பிரயோகம், வள்ளுவரின், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கருத்தோடு ஒத்துப் போகிறது. உலகம் ஒரே குடும்பம் என்பது இதன் பொருளாகும்.
**http://www.marymartin.com/web?pid=843628**

---------------------------------------------------------------------------------------

ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும்: கதை சங்கமம்-காதல்/குடும்பம் பிரிவில் மூன்றாம் பரிசு வென்ற கதை = īṇra Polutiṇum Perituvakkum: Katai Cankamam-Kātal/Kuṭumpam Pirivil Mūṇrām Paricu Veṇra Katai / இசை சுரேஷ் = Icai Curēś
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṇṇai 2023
112p.; 22 cm.
150gm.
$ 5.50 / pb

குடும்ப நாவல்

இந்தத் தலைமுறையில் குழந்தை பிறந்த தருணத்தில் மகிழ்ந்ததை விட அந்தக் குழந்தை வளரும் ஒவ்வொரு பருவத்திலும் அம்மாவும் குழந்தையும் மகிழ்வாக அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையோடு எழுத நினைத்து இந்தத் தலைப்பை யோசித்தேன்.
http://www.marymartin.com/web?pid=843641
----------------------------------------------------------------------------------------------------
பரமபதம்: சூழ்ச்சியின் இறுதிப் பகடை = Paramapatam: Cūlcciyiṉ Irutip Pakaṭai / நா. பார்வதி = Nā. Pārvati
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṉi Patippakam, Ceṉṉai 2022
537p.; 22 cm.
9789392224188
670gm.
$ 30.00 / pb

Novel
அமிர்தம் இன்றி பிழைத்தோம்
அமிர்தம் இன்றி வாழ்கிறோம்
அமிர்தத்திற்காக நம்மவர்களை இழந்தோம்
நாம் இழந்ததை மீட்டெடுப்போம்
அண்ட சராசரத்தையும் நம் வசப்படுத்துவோம்
http://www.marymartin.com/web?pid=843584
------------------------------------------------------------------------------------------
ரத்ன விலாஸ் பாகம்-1 = Ratṉa Vilās Pākam-1 / பொற்கொடி = Porkoṭi
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṉati Patippakam, Ceṉṉai 2023
304p.; 22 cm.
350gm.
$ 15.00 / pb

இளைய தலைமுறை சீரழிந்து போய்க் கொண்டிருக்கிறது என்று விட்டு நகர்வதில் எனக்கு உடன்பாடில்லை. அவர்களை நல்வழிப்படுத்தும் முக்கியமான கடமை மூத்த தலைமுறையினருக்கு இருக்கிறது. பண்பாட்டைப் புகட்ட, நேர்மை எனும் நீர் ஊற்றி, இளைய தலைமுறைக்கு கதைகள் மூலம் கடத்த வேண்டும் என்பதே நூலின் குறிக்கோள்.
http://www.marymartin.com/web?pid=843487
------------------------------------------------------------------------------------------------
தேவ ரகசியம் = Tēva Rakaciyam / காலச்சக்கரம் நரசிம்மா = Kālaccakkaram Naracimmā
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṉati Patippakam, Ceṉṉai 2022
420p.; 22 cm.
500gm.
$ 17.50 / pb

Social Novel
நாவல்கள் பல வகை. அவற்றில் மக்கள் அதிகம் விரும்பிப் படிப்பது 'திரில்லர்' எனப்படும் துப்றியும் நாவல்கள்தாம். அதில் அரசியல் மர்மமும் கலந்திருந்தால், சர்க்கரைப் பாகில் தேன் கலந்ததுபோல், அதன் சுவை இரு மடங்கு ஆகிவிடும். அத்தகைய பரபரப்பு நாவல் வகைப்பட்ட 'தேவ இரகசியம்' என்கிற இந்த நாவல் வாசகர்களை ஆகிவிடும். அத்தகைய பரபரப்பு நாவல் வகைப்பட்ட 'தேவ இரகசியம்' என்கிற இந்த நாவல் வாசகர்களைமுழுமையாகவும் கடைசிப் பக்கம் வரையிலும் எழுந்திருக்க விடாமல் பிடித்துக்கொள்ளும் என்னும் நம்பிக்கை, இதை விருப்பத்துடன் வெளியிடும் வானதி பதிப்பகத்திற்கு உள்ளது.
[http://www.marymartin.com/web?pid=843586](http://www.marymartin.com/web?pid=843586)
------------------------------------------------------------------------------------------------
பொன்கூண்டு (பஞ்சரசுகி) = Poṇkūṇṭu (Pañcaracuki) / கிருத்திகா = Kiruttikā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
176p.; 22 cm.
9789391748449
250gm.
$ 10.50 / pb

Novel

கிருத்திகாவின் ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்திய வடிவம் அவரது நாவல்கள். 1950 - 1970 இடைப்பட்ட இருபதாண்டுகளில் அவரது படைப்புணர்வு வெளிப்பாட்டின் ஊடகமாக நாவல் இருந்துள்ளது. இக்காலகட்டம் புதிய நாடாக உருப்பெற்ற இந்தியாவிற்கு முக்கியமானதாக இருந்தது. விடுதலை பெற்ற புதிய இந்திய உருவாக்கத்தின் மையமாக இருந்த தில்லி அதிகாரவட்டத்திற்கு மிக அருகில் வாழும் வாய்ப்பும் கிருத்திகாவிற்கு இருந்தது. அப்பின்னணியையே தனது நாவல்களின் மையச்சரடாக கிருத்திகா வரித்துக்கொண்டது ஒருவிதத்தில் ஆச்சரியமானது இல்லை; ஆனால் சற்று நிதானமாகத் தமிழ் இலக்கியச் சூழலில் நிலவிய விடுதலைப் போராட்டம், புதிய இந்தியா உருவாக்கம் குறித்த சித்தரிப்புகளைச் சிந்திக்கும்போது, அவரது முயற்சி அசாத்தியமான துணிச்சலைக் காட்டுகிறது என்றே கூறவேண்டும்.
[http://www.marymartin.com/web?pid=843492](http://www.marymartin.com/web?pid=843492)
------------------------------------------------------------------------------------------------
எழுபத்தி மூன்றாவது கூட்டத்தினர் = Elupatti Mūṇrāvatu Kūṭṭattiṇar / ஃபிர்தவ்ஸ் ராஜகுமாரன் = Pirtavs Rājakumāraṇ
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
266p.; 22 cm.
9789393882172
350gm.
$ 16.00 / pb

Novel
90களுக்குப் பிந்தைய தமிழக இஸ்லாமிய வரலாற்றில்- கலாச்சாரத்தில் - வாழ்க்கையில் இஸ்லாமிய இயக்கங்களின் வரவு மிக முக்கியமானது. தாய் சபையான முஸ்லிம் லீக் தன் இருப்பை தக்க வைத்துக்கொள்ள தவறியதின் விளைவாகவே அது தேக்கமடைந்தது. மேலும் 1992 டிசம்பர் 6 அன்று பாபர் மசூதி தகர்க்கப்பட்ட நிகழ்வு முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை என்கிற ஒரு அச்சத்தை நாடு முழுக்கவும் ஏற்படுத்தியிருந்த நிலையில் இது தமிழகத்தில் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் மிகவும் கொந்தளிப்பையும் பாதிப்பையும் ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து இயக்கங்களின் வரவும் அதன் பிறகான குழப்பங்களும் தமிழ் நாட்டில் இஸ்லாமியர்களிடையே பெரும் பிரச்சனையானது. அதைப் பற்றி பேசும் ஒரு சிறு அலசலே இந்த '73வது கூட்டத்தினர்' நாவல். 'சுவர்க்கம் போகும் கூட்டம் எது?' இந்த நாவலின் மையப்புள்ளி இதுதான்.
http://www.marymartin.com/web?pid=843494
---------------------------------------------------------------------------------------------
காஞ்சித் தாரகை = Kāñcit Tārakai / அனுஷா வெங்கடேஷ் = Aṇuśā Venkaṭēś
சென்னை: கிழக்கு பதிப்பகம் = Kilakku Patippakam, Ceṇṇai 2022
380p.; 22 cm.
9789390958184
500gm.
$ 20.00 / pb

Historical Fiction

சிவகாமியின் சபதம் புதினத்தின் தொடர்ச்சியாக 'காஞ்சித் தாரகை' உருவாகியுள்ளது. சிவகாமியின் சபதம் முடிந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னான கதைக் களமாக விரிகிறது காஞ்சித் தாரகை. சிவகாமியின் சபதம் கதையில் நம்மை ஆட்கொண்ட கதாபாத்திரங்களில் நரசிம்மரும், சிறுத்தொண்டரும், சிவகாமியும், ஆயனச் சிற்பியும் இந்தப் புதினத்திலும் வருகிறார்கள். வாசகர்கள் சிவகாமியின் சபதத்தை படித்தபோது அடைந்த மகிழ்ச்சியை இந்த காஞ்சித் தாரகையிலும் அடைவார்கள் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.
http://www.marymartin.com/web?pid=842738
-----------------------------------------------------------------------------------------
சிலாவம் = Cilāvam / சு. தமிழ்ச்செல்வி = Cu. Tamilccelvi
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
324p.; ills. 22 cm.
9788123442020
460gm.
$ 16.25 / pb

Historical Fiction

முத்துக்குளித் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வியலைப் பேசும் அரிய எழுத்துச்சிப்பி இது. முத்துக்குளிப்போரின் பாடுகள், அவர்களின் நம்பிக்கைகள், கொண்டாட்டங்கள், வைத்தியமுறைகள், சடங்குகள், விழாக்கள், வாய்மொழிக் கதைகள் என வாசகரின் கைப்பிடித்துச் சென்று கடல் மேலும், கடலாழத்திலும் நீர்மையோடட்டு உலகச் செய்யும் பாங்கான இந்த நாவல் நெய்தல் இலக்கியத்தின் வரவு.
[http://www.marymartin.com/web?pid=842541](http://www.marymartin.com/web?pid=842541)
----------------------------------------------------------------------------------------
கனவுகளைத் தொடர்ந்து = Kaṇavukaḷait Toṭarntu / இந்திரா பார்த்தசாரதி = Intirā Pārttacārati
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
151p.; 22 cm.
9789355232649
250gm.
$ 9.50 / pb

Novel

சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்தியாவின் சமூக- அரசியல் களங்களில் நிலவிய விழுமியங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு பெருமளவில் மாறியது குறித்து இந்திய மொழிகளில் பல்வேறு படைப்புகள் வந்திருக்கின்றன. கலைந்துபோன மகோன்னதக் கனவுகள் குறித்த கவலையைத் தன் படைப்புகளில் கையாண்டிருக்கும் இந்திரா பார்த்தசாரதி, சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்திய யதார்த்தத்தை இந்த நாவலின் மையப் பொருளாக ஆக்கியிருக்கிறார்நகர்ப்புறம் சார்ந்த படித்த, நடுத்தர மக்களின் வாழ்வை அதன் உளவியல் கூறுகளுடன் சித்தரிப்பதில் வல்லவரான இந்திரா பார்த்தசாரதி, ஓர் இளைஞனின் வாழ்வினூடே இந்தியாவின் மாறிவரும் சமூக- அரசியல் சூழலைப் பதிவு செய்கிறார். சரளமான நடையில் சுவையான வாசிப்பனுபவத்தைத் தரக்கூடிய இந்த நாவல் கூர்மையான விமர்சனப் பார்வையை அடியோட்டமாகக் கொண்டது.
[http://www.marymartin.com/web?pid=843622](http://www.marymartin.com/web?pid=843622)
------------------------------------------------------------------------------------
குந்தியின் கதை (நாவல் வடிவில்) = Kuntiyiṇ Katai (Nāval Vaṭivil) / கன்யூட்ராஜ் = Kaṇyūṭrāj
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2023
652p.; 22 cm.
9788123444079
800gm.
$ 49.25 / pb

Novel

காவியக் குந்தியை, அவளைச் சுற்றி பின்னப்பட்டிருக்கும் மீமானுடக் கதைகளிலிருந்து சற்று விடுவித்து, அவைகள் இல்லாமலும் இக்காலத்தின் பார்வையிலும் காலூன்றி நிற்க முடியும் என்ற நம்பிக்கையில் காவியத்தின் உண்மைக் கதாநாயகியான குந்தி என்ற மேன்மைத் தாய் இங்கே ஒரு நாவல் வடிவிலே பவனிவருகன்றாள்.
**http://www.marymartin.com/web?pid=843612**
--------------------------------------------------------------------------------------------
நிழல் நதி = Nilal Nati / களந்தை பீர்முகம்மது = Kaḷantai Pīrmukammatu
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
303p.; 22 cm.
9788196058982
400gm.
$ 18.75 / pb

Novel

முதல் காதலி அல்லது காதலன் என்பது எழுதித் தீராத கருப்பொருள். நினைவேக்கங்களின் தவிர்க்க முடியாத அதிர்வுகளில் முதல் காதலுக்குத் தனி இடம் உண்டு. சலிக்காத உணர்வாய் நினைவுகளில் நீடித்திருக்கும் இந்தச் சலனத்தின் புதியதொரு பரிமாணத்தைக் காட்டுகிறது 'நிழல் நதி'. காலத்தின் ஓட்டத்தில் மறையாத தடங்களை உருவாக்கும் காதலின் வலியைப் பேசுகிறது இந்த நாவல். கருவறுக்கப்பட்ட காதலின் ஏக்கம் எவ்வளவு ஆழமான காயத்தை ஏற்படுத்தும் என்பதையும் அது ஒருவரது ஆளுமையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் நிழல் நதியின் ஓட்டம் உணர்த்துகிறது. பிடிவாதத்தின் வலிமையையும் வாழ்க்கையையே மாற்றிவிடக்கூடிய அதன் வீரியத்தையும் காட்டித் தருகிறது. கண்ணுக்குத் தெரியாத நதியாய் ஒவ்வொரு மனத்திலும் ஓடிக்கொண்டிருக்கும் உணர்வுப் பிரவாகத்தைக் காட்டும் இந்த நாவல் ஒரு காலகட்டத்தின், ஒரு நிலப்பரப்பின் வாழ்வையும் தீட்டிச் செல்கிறது. தாமிரபரணியில் சங்கமிக்கும் உப்பாற்றின் கரைகளில் இயங்கும் வாழ்வும் மானுட அனுபவங்களும் அந்த நதியின் மீது நிழல்களாய்ப் படர்கின்றன.
**http://www.marymartin.com/web?pid=843269**
--------------------------------------------------------------------------------------------------------
நெடுநேரம் = Neṭunēram / பெருமாள்முருகன் = Perumāḷmurukaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
343p.; 22 cm.
9789355232434
450gm.
$ 19.50 / pb

Novel

பொதுமுடக்கம் என்னும் தற்காலிக நிகழ்வைப் பின்புலமாகக் கொண்ட இந்த நாவல் மனித வாழ்வின் நிரந்தரமான சில பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறது. நாவலில் இரண்டு பயணங்கள் வருகின்றன. ஒன்று சாலைகளினூடே மேற்கொள்ளும் புறப் பயணம். இன்னொன்று வாழ்வினூடே மேற்கொள்ளும் அகப் பயணம். நாவலின் கதையாடலில் இரண்டும் ஒன்றையொன்று பாதித்தபடி இணைகோடுகளாகப் பயணிக்கின்றன. காதல் பற்றிய விழுமியங்களை யதார்த்த வாழ்வின் தவிர்க்க முடியாத இயல்புகளின் பின்புலத்தில் வைத்துப் பரிசீலிக்கிறது இந்த நாவல். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே எழும் இயல்பான ஈர்ப்புக்கு நடுவே நுழைய யத்தனிக்கும் பல்வேறு கூறுகளின் பின்னணியில் காதலின் இயல்பையும் அதன் உருமாற்றங்களையும் அதனால் ஏற்படும் வலிகளையும் இந்த நாவல் மிக நெருக்கமாக அணுகிப் பார்க்கிறது. விழுமியங்களால் கட்டுப்படுத்திவிட முடியாத காதலின் வலிமையை உணர்த்துகிறது. வாழ்வுக்காக விழுமியங்களா, விழுமியங்களுக்காக வாழ்க்கையா என்னும் காலாவதியாகாத கேள்வியை அழுத்தமாக எழுப்புகிறது. இன்றைய தலைமுறை இளைஞனின் கோணத்தில் விரியும் நாவல், நேற்றைய தலைமுறைகளின் பார்வைகளையும் உரிய முறையில் உள்ளடக்கியிருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=843282**
----------------------------------------------------------------------------------------------------
கடிகார கோபுரம் = Kaṭikāra Kōpuram / தாரமங்கலம் வளவன் = Tāramankalam Vaḷavaṇ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
240p.; 22 cm.
9789393358240
350gm.
$ 13.50 / pb

Novel

திரைப்படக் கல்லூரியில் படித்து முடித்து வெளியே வரும் மாணவர்கள் தாங்கள் சொந்தமாக படம் எடுக்க கதையும், பணமும் தேடுகிறார்கள். அவர்களுக்கு கதை கிடைத்ததா, பணம்கிடைத்ததா. அது தான் இந்த நாவல். இது மும்பையில் நடக்கும் கதை. தாரமங்கலம் வளவன் ஒரு பொறியாளர். தனது பணியின் பொருட்டு இந்தியாவின் பல பாகங்களில் பணியாற்றியவர். இது வரை இரண்டு சிறுகதை தொகுப்புகளும், இரண்டு நாவல்களும் இவர் எழுதி உள்ளார். இவைகள் அனைத்தும் காவ்யா பதிப்பகத்தால் பதிப்பிக்கப் பட்டுள்ளது. அமேசான் கிண்டிலிலும் கிடைக்கும். கடிகார கோபுரம், இவரது மூன்றாவது நாவல். இவரது படைப்புகள் கணையாழி, கல்கி, தினமலர், பாக்யா, அக்னி மலர்கள், காவ்யா தமிழ் போன்ற அச்சு இதழ்களில் வந்துள்ளது. தனது கதைகள் அனைத்தும் என்கிறார் தாரமங்கலம் வளவன். சாமான்ய மக்களைப் பற்றியது
**http://www.marymartin.com/web?pid=843613**

----------------------------------------------------------------------------------------------------
உஷா சுப்ரமணியன் குறுநாவல்கள் = Uśā Cupramaṇiyaṉ Kurunāvalkaḷ / உஷா சுப்ரமணியன் = Uśā Cupramaṇiyaṉ
சென்னை: பிறகு பிரசுரம் = Piraku Piracuram, Ceṉṉai 2022
288p.; 22 cm.
9788194973829
400gm.
$ 17.50 / pb

Short Stories

எல்லாருமே 'எனக்கு ஆங்கிலத்தில் எழுதித்தான் பழக்கம் ஸார்!' என்று சொல்லிக் கொண்டுதான் எழுத ஆரம்பிப்பார்கள்.
உஷாசுப்ரமணியனும் அதற்கு விலக்கல்ல. ஆனந்த விகடனில், அதிபர் பாலனின் மனைவியார் மூலம் எனக்கு அறிமுகமானவர் உஷா. 'அவர் நன்றாக எழுதுவார்' என்ற நம்பிக்கையுடன் நானும் அவரை 'விகடனி'ல் அறிமுகம் செய்து வைத்தேன். முதல் சிறுகதையே மிகவும் நன்றாக இருந்தது. அப்புறம்தான் தெரிந்துகொண்டேன் - அவர் முறைப்படி 'ஜர்னலிஸம்' படித்துப் பட்டம் பெற்றவர் என்று! உஷாவின் எழுத்துகளில் ஒரு தனியான துணிச்சல் இருக்கும். கருத்துகளைத் தைரியமாக எடுத்துச் சொல்லத் தயங்க மாட்டார். புதுமைப் பெண்ணாக வாழவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு நிறைய உண்டு. அது அவருடைய பேச்சிலும் வெளிப்படும்.
http://www.marymartin.com/web?pid=843619
------------------------------------------------------------------------------------------
ராஜாம்பாள் (துப்பறியும் நாவல்) = Rājāmpāḷ (Tuppariyum Nāval) / கே. ஆர். ரங்கராஜு = Kē. ār. Rankarājū
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṉṉai 2022
208p.; 22 cm.
300gm.
$ 10.50 / pb

Detective Fiction

இந்த நாவல்களின் பலம் சரளமான நடை ஒன்றே. புத்தகங்கள் போரடிக்காமல் காப்பாற்றுவது அந்த நடைதான். ஆனால் curiosity value-க்காகத்தான் படிக்க வேண்டி இருக்கிறது. இவரது நாவல்களின் முக்கியத்துவம் அன்று படிப்பை வளர்ப்பதில் உதவி செய்திருக்கும் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை.
http://www.marymartin.com/web?pid=843621
---------------------------------------------------------------------------------------------
நடேச பிள்ளையின் நாட்குறிப்புகள் = Naṭēca Piḷḷaiyiṉ Nāṭkurippukaḷ / சுதாகர் கஸ்தூரி = Cutākar Kastūri
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
159p.; 22 cm.

9788195752492
250gm.
$ 10.00 / pb
Novel

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின்போது திருநெல்வேலி பகுதியில் நடக்கும் ஒரு கொலை, ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்குகிறது. ஏனென்றால் கொல்லப்பட்டவர் பிரிட்டிஷ் போலிஸ் அதிகாரி. யார் கொன்றது? வரலாற்றின் முடிச்சுகளைச் சுவாரஸ்யமாகக் கற்பனை மூலம் புனைவாக்கி இருக்கிறார் சுதாகர் கஸ்தூரி. நாவல்களில் நிஜ பாத்திரங்களையும் அவர்களுக்கு இணையாகக் கற்பனைப் பாத்திரங்களையும் ஒருசேர உலவவிடுவது கத்தி மேல் நடக்கும் ஒரு செயல். வ.உ. சிதம்பரம் பிள்ளையும், சுப்ரமண்ய சிவாவும், மாடசாமி பிள்ளையும் வந்து போகும் நாவலில், பிரிட்டிஷ் அதிகாரி ஆண்டர்சன்னும் ஆனியும் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் நிகர்செய்யும் பாத்திரமாக முத்துராசா. யார் இந்த முத்துராசா? ஏன் சமகாலத்தில் அவரைப் பற்றிப் பேசுகிறார்கள்? ஆனிக்கும் ஆண்டர்சன்னுக்கும் என்ன ஆனது? திரில்லரின் வேகத்தில் வரலாற்றின் சில பக்கங்களையும் புரிந்துகொள்ளலாம், வாருங்கள். உங்களுக்காகவே தன் நாட்குறிப்புகளை எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார் நடேச பிள்ளை.
**http://www.marymartin.com/web?pid=843620**
----------------------------------------------------------------------------------------------
மருமகன் = Marumakaṉ / வி. தெந்திரியாக்கோவ் = Vi. Tentiriyākkōv
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṉṉai 2022
184p.; 22 cm.
250gm.
$ 9.00 / pb
**http://www.marymartin.com/web?pid=843610**

**Novel**
----------------------------------------------------------------------------------------------
நான் லலிதா பேசுகிறேன் = Nāṉ Lalitā Pēcukirēṉ / சுரேஷ்குமார இந்திரஜித் = Curēśkumāra Intirajit
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
142p.; ills. 22 cm.
9789355231543
250gm.
$ 9.50 / pb

Novel
இந்தியச் சமூக அமைப்பில் குழந்தைகளின் வாழ்க்கைப் போக்கை நெடுங்காலமாகப் பாதித்த குழந்தைத் திருமண முறையினால் சிறு பிராயத்திலேயே விதவையான லலிதா என்ற பெண்ணின் வாழ்க்கையை இந்த நாவல் விவரிக்கிறது. தன்னிலைக் கூற்றாக

அமைந்த இப்படைப்பு சில முக்கிய வரலாற்றுப் பாத்திரங்களின் ஆளுமைச் சித்திரத்தையும் வரலாற்று நிகழ்வுகளையும் பதிவு செய்கிறது. மருத்துவராக உருவாகும் லலிதாவின் அகவுலகச் சிக்கல்களையும் பழமையான மனங்களை நோக்கிய விமர்சனங்களையும் இந்த நாவலில் சுரேஷ்குமார இந்திரஜித் சித்தரித்துள்ளார்.
http://www.marymartin.com/web?pid=843609
------------------------------------------------------------------------------------------------
சந்திரகாந்தா (துப்பறியும் நாவல்) = Cantirakāntā (Tuppariyum Nāval) / கே. ஆர். ரங்கராஜு = Kē.ār. Rankarājū
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṉṉai 2022
208p.; 22 cm.
300gm.
$ 10.50 / pb

Detective Fiction

ஜே. ஆர். ரங்கராஜு (1875-1959) வின் முழுப் பெயர்: ஜெகதாபி ரகுபதி ரங்கராஜு. இவர் ஒரு தமிழ்ப் புதின எழுத்தாளர். தமிழ் புதின எழுத்தின் முன்னோடிகளில் ஒருவர். பல புகழ்பெற்ற துப்பறியும் புதினங்களை எழுதியுள்ளார்.

தமிழ்நாடு, பாளையங்கோட்டையில் 1875 இல் பிறந்தார். 1908 முதல் புதினங்கள் எழுதத் தொடங்கினார். திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தன், இவர் உருவாக்கிய புகழ்பெற்ற துப்பறிவாளர் பாத்திரம். சவுக்கடி சந்திரகாந்தா எனும் புரட்சிப்பெண் பாத்திரத்தையும் உருவாக்கினார். இவரது புதினங்களில் கோயில்களில் நடக்கும் முறைகேடுகள், பெண் விடுதலை போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துகள் காணக் கிடைக்கின்றன.
http://www.marymartin.com/web?pid=843607
-----------------------------------------------------------------------------------------
பக்கார்ட்டி = Pakkārṭi / அரிசங்கர் = Aricankar
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṉṉai 2022
128p.; 22 cm.
9789393650184
250gm.
$ 8.00 / pb

Short Novel | குறுநாவல்

“எதுனா சரக்கு வெச்சிக்கிற” என்றார். பக்கார்டி தனது பையினுள் கையை விட்டுப் பாதி நிரம்பியிருந்தக் குவாட்டர் பாட்டிலை எடுத்து நீட்டினார். அதை எக்கி வாங்கிக்கொண்டவர் அதை அப்படியே வாயில் சரித்துக்கொண்டு விழுங்கித் தலையை ஒரு ஆட்டு ஆட்டினார். இரண்டு முறை நன்றாக இருமிவிட்டு தொண்டையை செருமிக்கொண்டார்.

திரும்ப பாட்டிலைக் கொடுத்தார். அதை வாங்கிப் பத்திரப்படுத்திகொண்டார் பக்கார்டி. இருவரும் சிறிது நேரம் அப்படியே அமைதியாக இருந்தனர். ஏதோ சத்தம் கேட்டு நாய்கள் எழுந்து ஓடின. அவர் மெல்ல அழ ஆரம்பித்தார். பிறகு, அவரே கண்களைத் துடைத்துகொண்டு, “செரி யேசு, நீ தூங்கு. நான் போறேன்” என்று சொல்லிவிட்டு வண்டியைத் திருப்பிக்கொண்டு இடத்தைவிட்டு நகர்ந்தார். பக்கார்டி என்கிற யேசுதாஸ் என்கிற யேசு தனது பையைத் தலைக்கு வைத்துகொண்டு படுத்து வானத்தைப் பார்த்தார். தூரத்திலிருந்த ஒரு நட்சத்திரம் இவரை நோக்கி இறங்கி வந்துகொண்டிருந்தது.
**http://www.marymartin.com/web?pid=843608**
------------------------------------------------------------------------------------------
கொற்றவன் = Korravaṇ / ஸ்ரீமதி = Srīmati
சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṇṇai 2022
550p.; ills. 22 cm.
9789395523219
700gm.
$ 29.00 / pb

Historical Fiction
தகடூரை ஆண்ட குறுநில மன்னன் வாணராயார் அவனது தளபதி சக்கரக்குட்டியர் எனப்பலரும் அறிந்திடாத பல வரலாற்று கதை மாந்தர்களை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி, புதியதோர் வரலாற்றை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் புதினமே. 'கொற்றவன்'
**http://www.marymartin.com/web?pid=843605**
------------------------------------------------------------------------------------------
காஞ்சி விஜயம் [ககனம் கடந்த காவலன்] = Kāñci Vijayam [Kakaṇam Kaṭanta Kāvalaṇ] / சதீஷ் விவேகா = Catīś Vivēkā
சென்னை: சீதை பதிப்பகம் = Cītai Patippakam, Ceṇṇai 2022
566p.; 22 cm.
9789395523301
750gm.
$ 30.00 / pb

Historical Novel

காஞ்சி விஜயம் வரலாற்று ஆய்வாளர்களால் இரண்டாம் நந்திவர்மன் என்று அழைக்கப்படும் பல்லவ அரசனின் வரலாற்றை மையமாக கொண்ட சரித்திர புதினம். பல்லவ மல்லனிலிருந்து பல்லவ அரசன் நந்திவர்மனாக உருவாகும் காலம் வரை அவர் சந்தித்த வெற்றிகள், அரசியல் போராட்டங்கள், சதிகள், அவைகளை முறியடித்த விதங்கள், அரியணையில் நிலைப்படுத்த எடுத்த முயற்சிகள் என அனைத்தையும் எடுத்துக் கூறும் சரித்திர புதினமே காஞ்சி விஜயம்.
**http://www.marymartin.com/web?pid=843604**
------------------------------------------------------------------------------------------

கடவுள் பிசாசு நிலம்! = Kaṭavuḷ Picācu Nilam! / அகரமுதல்வன் = Akaramutalvaṉ
சென்னை: விகடன் பிரசுரம் = Vikaṭaṉ Piracuram, Ceṉṉai 2022
384p.; ills. 24 cm.
9789394265486
750gm.
$ 21.50 / pb

ஈழ மண் பல யுத்தங்களையும் வலிகளையும் கண்ணீரையும் கண்டு, கலங்கி நிற்கிறது. அங்கு வாழ்ந்த, வாழும் தமிழ் மக்கள் போரின் வலிகளையும் அது தந்த வடுக்களையும் தாங்கி ஒரு சூன்யமான வாழ்க்கையை அனுபவித்தவர்கள். எப்போது என்ன நடக்கும் என்ற அச்சத்தோடேயே ஈழத் தமிழர்கள் நாட்களை நகர்த்திக்கொண்டிருப்பவர்கள். இலங்கையில் அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த சமாதான பேச்சுவார்த்தை காலத்தில் தொடங்கி இறுதிப் போர் தொடங்கும் வரையிலான காலகட்டம்தான் இந்தக் கதையின் களம். ஒரு சிறுவனின் பார்வையிலிருந்து அந்த காலகட்டத்தில் நடந்ததை, பல பாத்திரங்களுடன் பயணித்தபடியே செல்கிறது இந்தப் புனைவு. உண்மையும் கற்பனையும் கலந்து, போராளிகளின் வாழ்க்கையையும் அரசின் தந்திரங்களையும் அந்தச் சிறுவன்வழியே கதை நகர்கிறது. ஜூனியர் விகடன் இதழில் வெளிவந்த `கடவுள் பிசாசு நிலம்' தொடரின் தொகுப்பு நூல் இது. இறுதிப் போர் தொடங்கியபோது ஈழத் தமிழர்களின் மனநிலை, போராளிகளின் முடிவு, அரசு செய்த சூழ்ச்சி என அத்தனையையும் பல கதாபாத்திரங்கள் வழியே சொல்லிச் செல்கிறார் நூலாசிரியர். கடவுளும் பிசாசும் வாழும் நிலத்துக்குள் வாருங்கள்!
**http://www.marymartin.com/web?pid=841913**
-----------------------------------------------------------------------------------------------
கடவுளுக்கு வேலை செய்பவர் = Kaṭavuḷukku Vēlai Ceypavar / அ. முத்துலிங்கம் = A. Muttulinkam
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
255p.; 22 cm.
9789355230294
350gm.
$ 16.00 / pb

அ. முத்துலிங்கத்தின் கிளாசிக் கட்டுரைகள் தொகுப்பில் தொகுப்பாசிரியராக பணியாற்றியுள்ளேன். " தகவல்களின் இலக்கியக் களஞ்சியம்" என்கிற தலைப்பில் ஒரு முன்னுரையும் எழுதியுள்ளேன். இத்தொகுப்புக்கு நான் தேர்ந்து கொண்ட அளவுகோல்கள் இரண்டு. முதலாவது அ.மு வின் எல்லா ஆர்வங்களும் வெளிப்படவேண்டும். இரண்டாவது என் சொந்த ரசனை. 1500 பக்கத்தை 250 பக்கமாக

சுருக்குவது கடினமான பணியாக இருந்தது. அ.மு வின் வாசகர்கள் இந்த நூலை விரும்புவார்கள் என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.
http://www.marymartin.com/web?pid=841911
----------------------------------------------------------------------------------------------------------------
அஞ்ஞை நீ ஏங்கி அழல் = Aññai Nī ēnki Alal / பூமணி = Pūmaṇi
சேலம் மாவட்டம்: மணல்வீடு = Maṇalvīṭu, Cēlam Māvaṭṭam 2023
128p.; 23 cm.
250gm.
$ 7.50 / pb

Novel
முதல் கதையென்று எதைச் சொல்வது. முதலில் மனசுக்குள் எழுதிப் பார்த்தையா. மனசுக்குள் வண்டலாகப் பதிந்த கதைகள் ரெம்ப இருந்தாலும் வெளியே கசிந்து வாய்க்காலிட்டதைத்தான் முதலாவது என்று சொல்லனும்.
http://www.marymartin.com/web?pid=841920
--------------------------------------------------------------------------------------------------
ஐம்பத்தேழு சிநேகிதிகள் சிநேகித்த புதினம் = Aimpattēlu Cinēkitikaḷ Cinēkitta Putiṇam / வா. மு. கோமு = Vā.Mu. Kōmu
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022
151p.; 22 cm.
9789393650498
250gm.
$ 9.50 / pb

Novel
“மூன்றாவது பத்தில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்தால் பத்மனாபனுக்கு முறுக்கு மாலை போடுவதாக சுள்ளிமேடு கட்டிட மேஸ்த்திரி அறிவித்துள்ளார். முறுக்கு மாலையோடு பத்து ரூபாயும் தருவதாக இங்கே மேடையில் அறிவித்துள்ளார். அவரது மூன்றாவது பந்தை சந்திக்க தயாராகிறார் மூர்த்தி, அந்தப் பந்தை தடுத்தாட முயற்சித்து செந்தில்நாதனிடம் கேட்சாகிறது! செந்தில்நாதன் அதை குட்டியாக் கரணம் போட்டு பிடித்தேவிட்டார். கிரிக்கெட்டில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதற்கு இது தான் உதாரணம். பத்மனாபன் பத்து ரூபாயையும் முறுக்கு மாலையையும் வென்று தான் ஒரு சிறந்த பௌலர் என்று நிரூபித்திருக்கிறார். தொன்னூறு ரன்களில் மூன்று விக்கெட் என்று நல்ல நிலையில் இருந்த வின்னர்ஸ் அணி அதே ரன்னில் இப்போது ஆறு விக்கெட்டுகளை இழந்துவிட்டது! வின்னர்ஸ் அணி நூறு ரன்களைத் தொடுமா?” ஐம்பத்தேழு சிநேகிதிகள் சிநேகித்த புதினம்.
http://www.marymartin.com/web?pid=843606
----------------------------------------------------------------------------------------------------------------
கற்பனாவாதம் = Karpaṇāvātam / ராமசாமி மாரப்பன் = Rāmacāmi Mārappaṇ
செங்கல்பட்டு: அகநாழிகை = Akanālikai, Cenkalpaṭṭu 2022
288p.; 22 cm.
9788195590131

400gm.
$ 20.00 / pb

Historical Fiction

கற்பனாவாதம் எனப்படும் ‘ரொமாண்டிசிஸம்’ பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தில் முதலில் பிரிட்டனிலும் பிறகு ஜெர்மனி, ரஷ்யா முதலிய பிற தேசங்களிலும் விதைக்கப்பட்டு இன்று உலகம் முழுவதும் பரவி முளைத்து வியாபித்துக் கிடக்கும் ஓர் உன்னத இலக்கிய இயக்கம். இதன் உச்சபட்ச பொற்காலம் 1780 - 1830 எனப்படுகிறது. ஆரம்பத்தில் இயற்கையைப் பாராட்டிப் போற்றிப் பின் அழகை ஆராதித்து கடைசியில் எளிமை, இனிமைகள், காதல், காமாந்தகங்கள், அமானுஷ்யங்கள், அதிபயங்கரங்களின் கலவை அம்சங்களாயின அதன் போக்குகள். கலைஞன் அந்நியன் - அவன் சமூகச் சட்டங்களுக்கு அடங்காதவன், அப்பாற்பட்டவன் - அடுத்தவன் மனைவியை அனுபவிக்கலாம், ஆசைநாயகிகளை வைத்துக்கொள்ளலாம், பொய் புரட்டுகள் சொல்லலாம், ஏன்? கொலை, கொள்ளைகளில் கூட ஈடுபடலாம் - ஆனால் அப்படி அடாவடி அட்டூழியங்களால் அவன் குற்றவாளி ஆக மாட்டான் என்கிற பொஹிமீயத்தனம் அதன் ஆணிவேர். வோர்ட்ஸ்வொர்த், கோலிரிட்ஜ், கீட்ஸ், ஷெல்லி, பைரன், ஸ்காட், கதே, புஷ்கின் ஆகியோர் கற்பனாவாதக் கலகக்காரர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள்.
**http://www.marymartin.com/web?pid=843598**
----------------------------------------------------------------------------------------------------
வசுந்தரா சொன்ன கார்ப்பரேட் கதைகள் (கதைகளின் வழியே கார்ப்பரேட் உலகம் உங்கள் கண்முன்னால் விரியும், அதன் நிறைகுறைகளுடன்) = Vacuntarā Coṉṉa Kārpparēṭ Kataikaḷ (Kataikaḷiṉ Valiyē Kārpparēṭ Ulakam Unkaḷ Kaṇmuṉṉāl Viriyum, Ataṉ Niraikuraikaḷuṭaṉ) / ஜெயராமன் ரகுநாதன் = Jeyarāmaṉ Rakunātaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
160p.; 22 cm.
9788195752478
200gm.
$ 9.50 / pb

Short Stories
கார்ப்பரேட் உலகின் அடிப்படைப் பாடங்களைச் சுருக்கமாகவும் எளிமையாகும் சொல்லும் நூல். ஒவ்வொரு அடிப்படைப் பாடத்தையும் எளிமையான கதை மூலம் விளக்கி இருப்பது இதன் தனிச்சிறப்பு. கதைகளை நாஸ்டால்ஜியா கலந்து சொல்லி இருக்கிறார் ஜெயராமன் ரகுநாதன். ஒருவரின் இயல்பான குணநலம் எப்படி கார்ப்பரேட் வாழ்க்கையில் பிரதிபலிக்கிறது, எப்படி முரண்படுகிறது என்பதை விளக்குவதோடு, அதை எப்படி மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதையும் கோடி காட்டுகிறது இந்தப் புத்தகம். ஒவ்வொரு

கதையிலும் வெளிப்படும் உணர்வுபூர்வமான தருணம், இப்புத்தகத்தை மேனேஜ்மெண்ட் புத்தகம் என்கிற தளத்திலிருந்து இன்னொரு தளத்துக்கு உயர்த்துகிறது. பல இடங்களில் தெறிக்கும் நகைச்சுவையும் நுனிநாக்கு ஆங்கிலமும், நாம் வாசிப்பது சுஜாதாவின் எழுத்தையோ என்கிற மயக்கம் ஏற்படும் அளவுக்குத் தரமாக வெளிப்படுகிறது.
**http://www.marymartin.com/web?pid=843569**
----------------------------------------------------------------------------------------------
மாயத்தச்சன்: பிச்சமூர்த்தியின் கவித்வம் பாகம்-2 = Māyattaccaṉ: Piccamūrttiyiṉ Kavitvam Pākam-2 / சி. சு. செல்லப்பா = Ci. Cu. Cellappā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
131p.; 22 cm.
9789391748876
200gm.
$ 8.00 / pb

Poetry

மாயத்தச்சன் ந. பிச்சமூர்த்தியின் நெடுங் கவிதையான வழித்துணையைப் பற்றிய ஆய்வுநூல். இந்நெடுங்கவிதை, பல கோணங்களிலிருந்து, தொனி, ரசனை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு கவிதைக்கு மட்டுமே இத்துணை நீண்ட ஆய்வை மேற்கொள்ளவேண்டிய அளவிற்கு நுண்ணிய அம்சங்கள் அதில் ஆழ்ந்து பொதிந்து இருக்கின்றன. தமிழ்ப் புதுக்கவிதை இலக்கியத்தில் ந. பிச்சமூர்த்தியின் வழித்துணையும் சி. மணியின் நரகமும் இரண்டு மைல்கல்கள் ஆவன. வழித்துணை படித்துப் புரிந்து கொள்வதற்கு சுலபமாக இருக்கிறதுதான். ஆனால் அந்த எளிமையும் சுலபத்தன்மையும் ஏமாற்றக்கூடியதென்றும், அதில் ஆழமான பொருள்களையும், நயங்களையும், துருவிப்பார்க்க நிறையவே இருக்கின்றன என்பதை இவ்வாய்வு நூலைப் படித்த பின்புதான் அறியமுடியும்.
**http://www.marymartin.com/web?pid=843555**
---------------------------------------------------------------------------------------------------
தசவர்க்கியின் தேடலும் நவகதிர் ரகசியமும் தேர்த்துகன்-1 = Tacavarkkiyiṉ Tēṭalum Navakatir Rakaciyamum Tērttukaṉ-1 / சி. வெற்றிவேல் = Ci. Verrivēl
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṉati Patippakam, Ceṉṉai 2022
435p.; 22 cm.
500gm.
$ 20.00 / pb

Historical Fiction
தசவர்க்கிகள், தமிழகத்தில் மறைத்து பாதுகாக்கப்படும் நவகதிரைக் கைப்பற்ற மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகவ போராடுகிறார்கள். அந்தத் தேடலை முடிவுக்குக் கொண்டு வர அதி தீவிரத்துடன் களத்தில்

இறங்குகிறார்கள். அதே நேரம், நவகதிரைக் காப்பாற்ற ஒரு பிரிவினர் போராடுகிறார்கள்.
**http://www.marymartin.com/web?pid=843585**
------------------------------------------------------------------------------------------
கரிகால் வளவன்: சரியான பெயரும் தவறான புரிதலும் = Karikāl Vaḷavaṇ: Cariyāṇa Peyarum Tavarāṇa Puritalum / சி.அ.வ. இளஞ்செழியன் = Ci.A.Va. Iḷañceliyaṇ
மதுரை: கருத்து பட்டறை = Karuttu Paṭṭarai, Maturai 2022
200p.; 22 cm.
9789393633002
300gm.
$ 15.00 / pb

Historical Fiction
இப்புதிய ஆய்வு நூல் மெய்ப்பொருள் காண்பதற்கான இப்புதிய கோணத்தின்படியான வாசிப்பு, கற்றலையும் உற்றலையும் உய்த்துணர் திறங்களையும் வாசிப்போரிடை தகவமைக்கும் என்கிறார் - பன்முகத்திறன் கொண்ட இந்நூல்.
**http://www.marymartin.com/web?pid=843600**
------------------------------------------------------------------------------------------
அமரர் கல்கி தீபாவளி மலர்க் கதைகள் = Amarar Kalki Tīpāvaḷi Malark Kataikaḷ / கல்கி (ஆர். கிருஷ்ணமூர்த்தி) = Kalki (ār. Kiruśṇamūrtti)
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṇṇai 2023
584p.; 22 cm.
700gm.
$ 22.50 / pb

Collection of Short Stories

இந்தக் கதைகள் வெறும் கற்பனை இல்லை. உண்மையில் நடந்தவற்றையே கதை வடிவில் கல்கி வழங்குகிறார் என்று எண்ணத் தோன்றும். மர்மம் நிறைந்த கதைகளில் திடீர் திருப்பங்களையும் எதிர்பாராத முடிவையும் வழங்குவதில் கல்கிக்கு நிகர் கல்கியேதான். கல்கி ஒரு சோஷலிஸ்ட் மட்டுமல்ல அவர் ஒரு 'மர்மிஸ்ட்'டும் கூட என்று சுந்தா குறிப்பிடுதுண்டு.
**http://www.marymartin.com/web?pid=842801**
------------------------------------------------------------------------------------------
கானல் நதி = Kāṇal Nati / யுவன் சந்திரசேகர் = Yuvaṇ Cantiracēkar
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
407p.; 23 cm.
9789390884865
450gm.
$ 11.50 / pb

Novel

இசையை எதற்காகக் கேட்க வேண்டும்? சிந்தனையைக் கிளர்த்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் ஆற்றுப் படுத்துவதற்கும் இலக்கியம் உதவுகிறது என்றால், இசையின் பணி என்ன? சிந்தனையைத் தற்காலிகமாக மழுங்கச் செய்வதா? சிந்தனை ஓய்ந்த மனத்தில் இசை கிளர்த்தும் அனுபவத்துக்குப் பெயர் என்ன? ஒருங்கமைக்கப்பட்ட இசைவடிவத்தில் சுதந்திரமாகத் திரியும் இசைஞன் எனக்குள் உருவாக்கும் கட்டற்ற நிலையை உத்தேசித்துத்தான் திரும்பத் திரும்ப அவனிடம் போய்ச் சேர்கிறேனா? மீண்டும் மீண்டும் பலமுறை கேட்டதற்குப் பிறகும் ஒரு இசைக் கோவை புதிதாகவே இருக்கும் மர்மம் என்ன? இசை பற்றிய அடிப்படை நுணுக்கங்களும் அடையாளங்களும் அறியாதவர்களின் இசையனுபவம் இன்னமும் ஆழமாய் இருக்குமோ? நூலின் பின்னுரையிலிருந்து...
[http://www.marymartin.com/web?pid=835860](http://www.marymartin.com/web?pid=835860)
-------------------------------------------------------------------------------------
இலக்கியத்துக்கு ஓர் இயக்கம் (சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நூல்-1986) = Ilakkiyattukku ōr Iyakkam (Cākitya Akātami Paricu Perra Nūl-1986) / க.நா. சுப்ரமண்யம் = Ka. Nā. Cupramaṇyam
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2022
184p.; 22 cm.
300gm.
$ 10.00 / pb

Articles on Literature

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இவற்றைச் சேர்த்து ஒரு நூலாக வெளியிட முயலும்போது, அநேகமாக எவ்விதமான மாறுதலும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது என்பது பற்றித் தமிழ் இலக்கிய உலகம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது.
[http://www.marymartin.com/web?pid=843594](http://www.marymartin.com/web?pid=843594)
-----------------------------------------------------------------------------------
பனிவிழும் பனைவனம் = Paṇivilum Paṇaivaṇam / செல்வம் அருளானந்தம் = Celvam Aruḷāṇantam
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
247p.; 22 cm.
9789355232724
350gm.
$ 14.50 / pb

பலநூறு ஆண்டுகளாகத் தமிழர்கள் கேட்டும் பார்த்தும் வாசித்தும் கற்பனையில் சேர்த்துவைத்திருந்த போர்களுக்கும் அதன் வன்முறைகளுக்கும் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் நேரடி சாட்சியாக இருந்து அனுபவித்தவர்கள் ஈழத் தமிழர்கள். செல்வம் அருளானந்தத்தின் தனிக்குரலில் அவர்களின் ஒட்டுமொத்தத் துயரமும்

வெளிப்படுகிறது. இலட்சியம், தியாகம், விடுதலை ஆகிய சொற்கள் இவரது மொழியில் புதிய அர்த்தங்களைப் பெறுகின்றன. செல்வம் தன்னுடைய அனுபவங்களைப் புகாரோ குற்றச்சாட்டோ பொருமலோ இன்றிப் பகடியாகவும் எதையும் துறக்க முடியாத துறவியின் பாவனையிலும் எழுதிச் செல்கிறார். இது அவரின் மூன்றாவது அனுபவப் புனைவு நூல்.
**http://www.marymartin.com/web?pid=843299**
----------------------------------------------------------------------------------------------------
இந்திய பாரம்பரியத்தில் சுவை (With References from Kuttanul to Cilappadikaram and their commentaries) = Intiya Pārampariyattil Cuvai / லட்சுமி ராமசுவாமி = Laṭcumi Rāmacuvāmi
சென்னை: ஸ்ரீ முத்ராலயா = Srī Mutrālayā, Ceṇṇai 2019
267p.; 24 cm.
500gm.
$ 25.00 / pb

முனைவர் லட்சுமி ராமஸ்வாமி அவர்கள் சிறந்த நடன கலைஞராக, கண்டிப்பான ஆசிரியராக, ஆழங்கால்பட்ட ஆராய்ச்சியாளராக, கலை நயம் மிக்க நடன அமைப்பாளராக, கலை நயம் மிக்க நடன அமைப்பாளராக, தொடர்ந்து கற்கும் ஆர்வமுடைய மாணவராக, பரத நாட்டிய உலகில் தனக்கென தனியிடம் பெற்றுக்கொண்டவர்.
**http://www.marymartin.com/web?pid=843571**
----------------------------------------------------------------------------------------------
இலக்கிய வரலாற்று வரைவியல் = Ilakkiya Varalārru Varaiviyal / இரா. சீனிவாசன் = Irā. Cīṇivācaṇ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
320p.; 21cm.
9789391949396
400gm.
$ 19.00 / pb

தமிழ் இலக்கிய வரலாற்றின் மையமான சிக்கல்கள் பற்றி ஆராயும் புத்தகம்.
ஒரு இலக்கியத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு யாது? ஒரு ஆக்கத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு எத்தகையது? பண்பாட்டுப் பின்னணி இன்றி ஒரு ஆக்கத்தின் உள்ளடக்கம் அமையுமா?
**http://www.marymartin.com/web?pid=841919**
-----------------------------------------------------------------------------------------------
கம்பனில் நகை மலர்கள் = Kampaṇil Nakai Malarkaḷ / எஸ். ராஜா = Es. Rājā
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṇṇai 2022
128p.; 22cm.
200gm.
$ 6.00 / pb

பண்டிகைக் கால பட்டிமன்றங்களின் வாயிலாக நமக்கு நன்கு பரிச்சயமானவர். பத்மஸ்ரீ சாலமன் பாப்பையாவோடு பல்லாண்டுகளாய்ப் பயணிப்பவர். திருமதி பாரதி பாஸ்கரோடு எதிர்வாதம் செய்து நம்மை மகிழ்விப்பவர்.
**http://www.marymartin.com/web?pid=841954**
-----------------------------------------------------------------------------------------------
கோநகர் கொற்கை = Kōnakar Korkai / அ. இராகவன் = A. Irākavaṇ
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2023
160p.; 22 cm.
250gm.
$ 8.00 / pb

இன்று தமிழகத்தில் பல்வேறு இனத்தவர்கள், "நாங்கள் பாண்டியர் இனத்தவர், பாண்டியர் குடும்பத்தவர்; பாண்டியரின் நேர்வழியில் வந்தவர்'' என்று உரிமை கொண்டாட முன்வந்துள்ளனர். பாண்டியர் ஆட்சி மறைந்து 500 ஆண்டுகளுக்கு அப்பால் - நாடு உரிமை பெற்றபின் இப்பொழுதாவது பலர் தைரியமாக பாண்டியர்களின் குடியில் வந்தவர்கள் என்று உரிமையுடன் தலை நிமிர்ந்து பேச முன் வருவது கண்டு களிபேருவகை அடைகின்றேன். ஆனால், நம்மால், “யார் பாண்டியர் இனம்? யார் பாண்டியரின் நேர்வழியில் வந்தவர்கள்?” என்று தீர்மானிக்க முடியவில்லை. உரிமை கொண்டாடுகிறவர்கள் எவரிடமும் எழுத்து மூலமான ஆதாரமோ அல்லது கொடி வழிப்பட்டியலோ அல்லது பாண்டியர்களின் அரசு கட்டில், செங்கோல், முடி, கொடி, முத்திரை போன்ற அடையாளங்களோ இல்லை. எனவே நம்மால், யார் பாண்டியர்களின் வழிவந்தவர்கள்? என்று அறுதியிட்டு உறுதிகூற முடியவில்லை.
**http://www.marymartin.com/web?pid=841955**
-----------------------------------------------------------------------------------------------
பொருநை - ஆதிச்சநல்லூர் (அறிக்கைகளும், அருங்காட்சியகங்களும்) = Porunai - āticcanallūr (Arikkaikaḷum, Arunkāṭciyakankaḷum) / முத்தாலங்குறிச்சி காமராசு = Muttālankuricci Kāmarācu
தூத்துக்குடி: பொன்சொர்ணா = Poṇcorṇā, Tūttukkuṭi 2022
406p.; 22cm.
9788195702046
500gm.
$ 20.00 / pb

முத்தாலங்குறிச்சி காமராசு எழுதும் ஆதிச்சநல்லூர் குறித்த மூன்றாவது நூல் இது. ஏற்கனவே 2010&இல் இவர் எழுதிய ஆதிச்சநல்லூர் ஆய்வுகள் என்ற நூலை காவ்யா பதிப்பகம் வெளியிட்டது. 2020&இல் அந்த நூல் மறுபதிப்பாகி வெளிவந்துள்ளது. இதைக் குழந்தைகளிடம் கதை சொல்வது போல எழுதியிருப்பார். இரண்டாது நூல் முத்தாலங்குறிச்சி காமராசு ஆதிச்சநல்லூர் ஆய்வு நடத்த வேண்டும் என்று மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அதில் ஏற்பட்ட அனுபவத்தினை ஆதிச்சநல்லூர் வழக்கு

எண் 13096/2017 என்ற தலைப்பில் எழுதினார். அதை ‘தி தமிழ் திசை’ இந்து பதிப்பகம் வெளியிட்டது. இந்த இரண்டு நூலுமே நல்ல வரவேற்பைப் பெற்றது. பொருநை & ஆதிச்சநல்லூர் அறிக்கைகளும் அருங்காட்சியகங்களும் என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் மூன்றாவது நூல்.
http://www.marymartin.com/web?pid=841956
----------------------------------------------------------------------------------------------------
படைப்புக் கலை = Paṭaippuk Kalai / மு. சுதந்திர முத்து = Mu. Cutantira Muttu
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
176p.; 22 cm.
9789391947187
250gm.
$ 10.00 / pb

மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த மு. சுதந்திரமுத்து மிகச் சிறந்த கல்வியாளர், பல பாடத்திட்டங்களுக்கும் பாடநூல்களுக்கும் உயரிய பங்களிப்பை வழங்கியவர். இவர் எழுதிய பாடங்களை இப்போதும் நான் தேடித் தேடிப் படிப்பதுண்டு. படைப்புக்கலை என்னும் நூல் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குப் படைப்பிலக்கியம் நடத்துவதற்குந் தகுதி கொண்ட ஒரே நூலாக விளங்குகிறது தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் புலமை மிக்கவர், புதுக்கவிதை தொடர்பாக இவர் எழுதியுள்ளன மிகுந்த கவனம் பெற்றவை. பெருமாள்முருகன் எழுத்தாளர்
http://www.marymartin.com/web?pid=841957
-------------------------------------------------------------------------------------
பன்னிரு திருமுறை வரலாறு (4 vols. set) = Paṇṇiru Tirumurai Varalāru (4 vols. set) / க. வெள்ளைவாரணன் = Ka. Veḷḷaivāraṇaṇ
சென்னை: அமராவதி பதிப்பகம் = Amarāvati Patippakam, Ceṇṇai 2022
4 vols. 22 cm.
2200gm.
$ 100.00 / hb
http://www.marymartin.com/web?pid=841961
---------------------------------------------------------------------------------
நின்றொளிரும் மின்னல்: காருகுறிச்சி ப. அருணாசலம் = Niṇroḷirum Miṇṇal: Kārukuricci Pa. Aruṇācalam / என்.ஏ. எஸ். சிவக்குமார் = Eṇ.ē.Es. Civakkumār
கோவில்பட்டி: அட்சரம் வெளியீடு = Aṭcaram Veḷiyīṭu, Kōvilpaṭṭi 2022
215p.; ills. 23 cm.
400gm.
$ 15.00 / pb

இசைக்கருவிகளன நாகஸ்வரமும், தவிலும் இசையின் பல்வேறு அம்சங்களை வளர்த்து வந்தன. ராக ஆலாபனை, லய வேலைப்பாடுகள் மிகுந்த பல்லவி போன்ற இசை வகைகளையெல்லாம் விரிவாகக்

கையாண்டுவளர்த்து, பிற கலைகளுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தது நாகஸ்வரம்.
http://www.marymartin.com/web?pid=843572
-----------------------------------------------------------------------------------------------
ஒரு சித்தாள் சிம்மாசனம் ஏறினாள் = Oru Cittāḷ Cimmācaṇam ēriṇāḷ / பேரா. பி. யோகீசுவரன் = Pērā. Pi. Yōkīcuvaraṇ
சென்னை: நீலா பதிப்பகம் = Nīlā Patippakam, Ceṇṇai 2022
292p.; 22 cm.
400gm.
$ 14.00 / pb

Novel
ஐரோப்பாவில் தோன்றிய தொழிற்புரட்சி மக்கள் வாழ்வியலில் மாற்றங்களைத் தோற்றுவித்தது. அந்த மாற்றங்கள் அரசியல், பொருளாதாரம், சமூகச் சூழல்களில் புதிய பார்வைகளைத் தோற்றுவித்தன. அவை கலை, இலக்கியங்களிலும் தாக்கம் பெற்றன.
http://www.marymartin.com/web?pid=843593
---------------------------------------------------------------------------------
தொல்காப்பியம்: ஒரு பனுவலின் நெடும்பயணம் (தமிழ்ச்சமூக வரலாற்று நோக்கில் தொல்காப்பிய உருவாக்கம் பற்றிய ஆய்வு) = Tolkāppiyam: Oru Paṇuvaliṇ Neṭumpayaṇam (Tamilccamūka Varalārru Nōkkil Tolkāppiya Uruvākkam Parriya āyvu) / சிலம்பு. நா. செல்வராசு = Cilampu. Nā. Celvarācu
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
151p.; 22 cm.
9789355230966
250gm.
$ 9.75 / pb

தொல்காப்பிய இலக்கணக் கூறுகளுக்கான மரபுகளை வழங்கிய சமூகமும் அச்சமூகத்து நிகழ்வுகளும் தொல்காப்பியத்தின் கருத்தியலுக்கு அடிப்படையாகும். இந்தக் கருதலோடு காலவோட்டத்தில் தொல்காப்பியப் பனுவலில் ஏற்பட்ட அகநிலை, புறநிலை மாற்றங்களை ஆய்விற்கு உட்படுத்துகிறது இந்நூல். களவியல் என்னும் கருத்தியல் தமிழ்ச் சமூகத்தில் நிகழ்த்திய நெடும்பயணத்தையும் பாலைத்திணையின் பரிணாம வளர்ச்சியையும் இந்நூல் பதிவு செய்கிறது. வருணம் வேறு – தொல்காப்பியர் காலத் தமிழ்ச் சமூகப் பிரிவுகள் வேறு என்பதற்கு வடமொழியிலேயே நால்வருணம் பற்றிய தெளிவான கோட்பாடுகள் முரண்பாடின்றிக் கிடைக்காதபோது தொல்காப்பிய மரபியல் நூற்பாக்கள் பேசியதாலேயே தமிழ்ச்சமூகத்தில் நால்வருண வேறுபாடு நிலைபெற்றிருந்தது என வாதிட முடியாது என்பதையும் இந்நூலில் சிலம்பு செல்வராசு பதிவு செய்கிறார். தொல்காப்பியப் பனுவலின் இந்நெடும்பயணத்தில் புராதன தமிழ்ச் சமூகத்தின்

வாழ்வியல் அமைப்பை வரலாற்றினூடே உரைச் சித்திரமாகச் செல்வராசு தம் எளிய மொழிநடையில் தந்துள்ளார்.
http://www.marymartin.com/web?pid=843549
---------------------------------------------------------------------------------------------------
மாயமான் கரடு = Māyamāṉ Karaṭu / யாழ்க்கோ லெனின் = Yālkkō Leṉiṉ
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṉṉai 2023
184p.; 20 cm.
200gm.
$ 9.00 / pb

Novel
இடிச்சுத்தம் கேட்ட செங்கன், பதட்டத்தில் இடைக் கச்சையில் கட்டியிருந்த கொக்கரையை எடுத்து முழங்கச் செய்திட காட்டில் சலசலப்புக் கூடியது.
அதே சமயம், தில்லை விருட்சத்திலிருந்து பறந்து வந்த அந்த பெரிய கருங்கோட்டான் (கரிய ஆந்தை) கொம்பனின் வலது விழியைப் பதம் பார்க்க, "ஐயோ கண்ணு... என் சாமி தம்பிரமுத்தா... என்னையக் காப்பாத..! எனக் கீழே விழுந்துத் துடிக்கலானான்.
http://www.marymartin.com/web?pid=843638
---------------------------------------------------------------------------------------
இருள் நான்! பிறை நீ! = Iruḷ Nāṉ! Pirai Nī! / ஜெயலட்சுமி கார்த்திக் = Jeyalaṭcumi Kārttik
சென்னை: ஸ்ரீ பதிப்பகம் = Srī Patippakam, Ceṉṉai 2023
152p.; 20 cm.
200gm.
$ 7.50 / pb
குடும்ப நாவல்கள் / Novel
http://www.marymartin.com/web?pid=843639
-------------------------------------------------------------------------------
வெள்ளந்தி மனிதர்கள் = Veḷḷanti Maṉitarkaḷ / மிலிட்டரி போலீஸ் = Miliṭṭari Pōlīs
சென்னை: நர்மதா பதிப்பகம் = Narmatā Patippakam, Ceṉṉai 2022
142p.; 21 cm.
200gm.
$ 20.00 / pb

Short Stories
வெள்ளந்தி மனிதர்கள் வாசம் இந்த மண்ணில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் காற்றில் மெல்ல அசைபோட்டு சமுத்திரத்தில் கலந்து பேய் மழையாகி பெருவெள்ளம் கொண்டு மனிதத்தில் வீசுகிறது. அந்த வாசம் உப்புக்காத்துடன் இணைந்து நீலபுறாவுடன் வட்டமிடுகிறது. பாவியர் சபைதனிலே மெய்தீண்ட ஸ்பரிசம் வழியே அன்பெனும் சொல்லை ஈன்றெடுக்கிறது. கொல்லான் புலால் நோற்று மீட்டாத வீணையில் கானம் இசைக்கும் இந்த வெள்ளந்தி மனிதர்கள் அந்நிய வாசம் பெற்று கடவு உள்ளம் கொண்டு நயன மொழி பேசி சுற்றி திரிகிறார்கள்.

http://www.marymartin.com/web?pid=843640
----------------------------------------------------------------------------------------------
சங்கத் தமிழ் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் = Cankat Tamil Vaḷḷal Pāṇṭitturait Tēvar / பேரா.சு. சண்முகசுந்தரம் = Pērā. Cu. Caṇmukacuntaram
சென்னை: காவ்யா = Kāvyā, Ceṇṇai 2022
xiv, 224p.; 22cm.
320gm.
$ 13.00 / pb

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைத்த அமைப்பாளர்களில் ஒருவரும், தமிழறிஞரும் ஆவார். இவரே நான்காம் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவராகப் பணியாற்றினார். இவர் செந்தமிழ் என்னும் இதழ் வெளியிடவும், 'கப்பலோட்டிய தமிழர்' வ.உ.சி யின் சுதேசிக் கப்பல் விடும் பணிக்கும் பொருள் உதவி நல்கினவர். தமிழ்த் தொண்டினைத் திறம்படச் செய்த செந்தமிழ் பைந்தமிழை மறக்காத பாண்டித்துரைத் தேவரைத் தமிழரும் மறக்காமல் இருக்கஇந்நூல் உதவும்.
http://www.marymartin.com/web?pid=841951
----------------------------------------------------------------------------------------------
தமிழ் வேளாண் கலைச்சொற்களின் வட்டார வேறுபாட்டு அகராதி = Tamil Vēḷāṇ Kalaiccorkaḷiṇ Vaṭṭāra Vērupāṭṭu Akarāti / நீ. ராஜசேகரன் நாயர், ச. ராஜா, சா. சுந்தரபாலு = Nī. Rājacēkaraṇ Nāyar, Ca. Rājā, Ca. Cuntarapālu
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
326p.; 22cm.
9789355230645
380gm.
$ 19.50 / pb

பொருள் உணர்வோடும் வட்டார வழக்கு ஒப்பீட்டோடும் உருவாக்கப்பட்ட முதல் வேளாண் கலைச்சொல் அகராதி
4133 தலைச்சொற்கள் 95 தலைச்சொல்லிற்கான படங்கள்
அகராதியியல், மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
http://www.marymartin.com/web?pid=841962
----------------------------------------------------------------------------------------------
குறளும் அலகீடும் = Kuraḷum Alakīṭum / சு. கார்த்திகேயன் = Cu. Kārttikēyaṇ
சென்னை: காவ்யா = Kāvyā, Ceṇṇai 2022
xviii, 341p.; 22cm.
9789393358158
500gm.
$ 18.00 / pb

யாப்பிலக்கண அடிப்படையில் திருக்குறள் செய்யுள் ஒவ்வொன்றையும் அலகிட்டு உரைக்கும் நூல். அனைத்துக் குறட்பாக்களையும், அலகு பிரித்து தனித்தனியாக நேரசை, நிரையசை

மற்றும் தளை, அடிகளை காட்டியிருப்பது அரிய செயலாகும். அதை பொறுமையாகச் செய்திருப்பதை இந்த நூலில் காணலாம்.

தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் கற்கும் இளைஞர்களுக்கும் பயன்படும்படியான நூலாகத் திகழ்வதோடு, சீர் பிரிப்பதை எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் அமைத்திருப்பது பாராட்டுக்குரியது.
**http://www.marymartin.com/web?pid=841953**
----------------------------------------------------------------------------------------------------
பத்மஸ்ரீ கவிஞர் சிற்பியின் ஒரு கிராமத்து நதி நாட்டுப்புறவியல் நோக்கு = Patmasrī Kaviñar Cirpiyiṇ Oru Kirāmattu Nati Nāṭṭuppuraviyal Nōkku / பெ. சுப்பிரமணியன் = Pe. Cuppiramaṇiyaṇ
சென்னை: காவ்யா வெளியீடு, சென்னை = Kāvyā Veḷiyīṭu, 2022
xiv, 180p.; 22 cm.
9789393358059
300gm.
$ 10.00 / pb

எனக்கு என் கிராமத்து நதி வெறும் தண்ணீர் ஊர்வலமல்ல. அதன் அசைவு என் தமிழ், அதன் அலை என் கலை அதனுள் நானும் என்னுள் அதுவும் கரைந்து கலந்திருக்கிறோம். ஒரு கிராமத்து நதி இபோது தமிழ் வாசகர் நெஞ்சங்களில் எல்லாம் பாய்வது கண்டு மகிழ்ந்து போகிறேன். பன்னிரண்டு ஆண்டுகளில் 11ஆம் பதிப்பு என்பது ஒரு சாதனை அல்ல, ஆயினும் படைப்பாளிகளுக்குள் ஒரு ஊற்று குறுகுறுக்கத்தான் செய்கிறது. சாகித்திய அகாதெமி விருதை எனக்கு பெற்றுத் தந்த செல்லமான நதியை மானசீகமாய் வணங்குகிறேன்.
**http://www.marymartin.com/web?pid=843576**
----------------------------------------------------------------------------------------------------
தமிழக நாட்டுப்புறக் கலை இலக்கிய மரபுகளின் நீட்சி = Tamilaka Nāṭṭuppurak Kalai Ilakkiya Marapukaḷiṇ Nīṭci / தி. சோமசுந்தரம் = Ti. Cōmacuntaram
சென்னை: தமிழியல் ஆய்வு மையம் = Tamiliyal āyvu Maiyam, Ceṇṇai 2022
154p.; 22 cm.
ISSN No: 2394-2428
250gm.
$ 12.50 / pb

நாட்டுப்புறக்கலை இலக்கியத்தின் இனிமைக்குக் காரணம் திரும்பத் திரும்ப ஒரே அடிகள் அல்லது சொற்கள் வருவதுதான். ஏட்டிலக்கியத்தில் குற்றமாகக் கருதப்படும் 'கூறியது கூறல்' முறைானது நாட்டுப்புறவியல் கலை இலக்கியங்களில் குற்றமாகக் கொள்ளாமல் அதனை விதிவிலக்காகக் கொண்டு பாடப்படுகிறது.
**http://www.marymartin.com/web?pid=843579**
----------------------------------------------------------------------------------------------------
படைப்பியல் = Paṭaippiyal / சி. சு. செல்லப்பா = Ci. Cu. Cellappā
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022

128p.; 22 cm.
9789391748807
200gm.
$ 7.50 / pb

மதக் கொள்கைகள், சமூகக் கொள்கைகள், அரசியல் கொள்கைகள் இத்யாதிகள் போல் இலக்கியக் கொள்கைகள் உண்டு. முன்னவை மூன்றும் மனித வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட மத இயல், சமூக இயல், அரசியல் போல, மனிதனால் படைக்கப்படும் இலக்கிய உருவங்களுக்கும் படைப்பியல் உண்டு. அந்தப் படைப்பியல் சம்பந்தமான அடிப்படைக் கொள்கைகளை, அவற்றின் லட்சணங்களை அறிமுகப்படுத்துவதுதான் இந்தச் சிறுநூலின் நோக்கம். பால பாடநூல் என்று சொல்லலாம். ஏனென்றால் இலக்கியத்துறை நியதிகள், லட்சணங்கள் சம்பந்தமான தகவல்கள் சம்பந்தமாக நம் தமிழ் இலக்கிய வாசக நிலை பாலர் வகுப்பு படிப்பு கட்டத்தில்தான் இருக்கிறது. இந்த ஒரு வாக்கியம் போதும் என்று நினைக்கிறேன். இந்தச் சிறுநூல் சாமான்ய இலக்கிய வாசகர்களுக்கு எழுதப்பட்டது என்பதை மீண்டும் சொல்லி, இது அவர்களுக்குப் பயன்படக்கூடும் என்று நம்புகிறேன். இந்த நூலை, விமர்சனத் துறைக்கு என்னை இழுத்த ஒத்த வயதுள்ள ஒத்துப் பழகிய க.நா. சுப்ரமணியம் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். - சி.சு. செல்லப்பா.
http://www.marymartin.com/web?pid=843491
----------------------------------------------------------------------------------------------------
பாரதி தமிழ் (வசனத்திரட்டு) = Pārati Tamil (Vacaṇattiraṭṭu) / ம. ப. பெரியசாமித்தூரன் = Ma. Pa. Periyacāmittūraṇ
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṇṇai 2022
206p.; 22 cm.
9789391947194
300gm.
$ 11.00 / pb

நிமிர்ந்த பார்வையும், நேர்கொண்ட நன் நடையும் நம் பெண்களுக்கு வேண்டும் என்று வற்புறுத்தியவர் பாரதியார். அவருடைய கவிதைகளும், உரைநடைப் படைப்புகளும் இவ்வுணர்ச்சியை எதிரொலிப்பனபோல் எளிமையும் உள்ளத்தை நேராகத் தாக்கும் படியான வலிமையும், சிந்தனைத் தெளிவும் கொண்டிருக்கின்றன.
http://www.marymartin.com/web?pid=843533
---------------------------------------------------------------------------------
கண்டதைச் சொல்கிறேன் = Kaṇṭataic Colkirēṇ / சுமதி = Cumati
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2022
192p.; 22 cm.
300gm.
$ 10.00 / pb

சுமதியின் பதிவுகள் கட்டுரையா, கதையா, சட்ட நுணுக்கமா அல்லது சட்டச்சிக்கல்கள் பற்றிய தகவல்களா என்று இனம் பிரிக்க முடியாத வகையில் அமைந்துள்ள புதுவகை உரைநடை. சமூகத்தின் கூட்டு நனவிலி மனதின் கலைடாஸ்கோப் படிமங்களை, உண்மைகளை பருண்மையான காட்சிப் படிமங்களாகச் சித்தரிக்கிறது இந்த உரைநடை.
அவரின் எழுத்து நடை வித்தியாசமானதாக இருக்கிறது. பொதுவாக நீதிமன்ற மொழிக்கென்றே ஒரு தனி அகராதி (diction) உண்டு. ஒரு புரோநோட் எழுதுவதற்குக்கூட அதற்கான எழுத்துக்காரர் வேண்டும். பெரும்பாலும் நீதிமன்றம் வழக்குகள், தீர்ப்புகள் சார்ந்த செய்திகளே இதில் சொல்லப்பட்டாலும் சுமதி கைக்கொண்டிருக்கின்ற நடை அலுப்பின்றி அவற்றை வாசிக்க வைக்கும் அழகியலைக் கொண்டிருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=843531**
-------------------------------------------------------------------------------------------
தமிழ் இலக்கிய அகராதி = Tamil Ilakkiya Akarāti / ந.சி. கந்தையா = Na. Ci. Kantaiyā
சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2023
216p.; 22 cm.
350gm.
$ 10.75 / pb

தமிழ் மொழி அகராதி செய்தவர்கள் மேல் நாட்டவர்களேயாவர். (Percival) பாதிரியார் ஆறாயிரம் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து ஆங்கில மொழிப்பெயர்ப்போடு வெளியிட்டார். இந்நூலின் இரண்டாவது பதிப்பு 1874-ல் சென்னையில் வெளிவந்தது.
**http://www.marymartin.com/web?pid=843489**
------------------------------------------------------------------------------------------
திருக்குறள் 100 (வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்) = Tirukkuraḷ 100 (Vaḷḷuvar Valiyil Vālntavarkaḷ Varalārruṭaṉ Kuraḷ) / சிவக்குமார் = Civakkumār
சென்னை: அல்லயன்ஸ் கம்பெனி = Allayaṇs Kampeṇi, Ceṇṇai 2023
312p.; ills. 23 cm.
450gm.
$ 15.00 / pb

நூறு திருக்குறள்களை எடுத்துக்கொண்டு அதற்கு ஏற்ற பொருத்தமான வாழ்க்கை அனுபவங்களை இணைத்து 'வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்களின் வரலாற்றுடன் குறள்' என்கிற பார்வையில் 'திருக்குறள் 100' என்ற உரையை 4 மணி நேரம் நிகழ்த்தி, அதை நூலாகவும் எழுதி வெளியிட்டிருக்கிறார் சிவகுமார். இதுவரை திருக்குறளுக்கு வார்த்தைகள் வடிவில் மணக்குடவர், பரிமேலழகர் முதல் கலைஞர், சாலமன் பாப்பையா வரை ஏராளமான பேர் உரை எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில் சிவகுமார் வள்ளுவர் வழி

நின்று வாழ்ந்த, தங்களை அறியாமலேயே குறளின் வழியே சென்ற மனிதர்களின் வாழ்க்கையின் வழியே இந்த உரையை எழுதியுள்ளார்.

'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு' என்ற குறளில் தொடங்கி நூறாவது கதையாக மலக்குழியில் இறங்கி உயிர்விடும் துப்புரவுத் தொழிலாளியின் கதை வரை கூறி 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அதற்குரிய குறளைக் கூறி நிறைவு செய்துள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=841928**
--------------------------------------------------------------------------------------
தமிழும் வடமொழியும்: மெய்யும் பொய்யும் (திறனாய்வுக் கட்டுரைகள்) = Tamilum Vaṭamoliyum: Mauyyum Poyyum (Tiraṇāyvuk Kaṭṭuraikaḷ) / பேரா. ப. மருதநாயகம் = Pērā. Pa. Marutanāyakam
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
326p.; 22 cm.
9789391949846
450gm.
$ 17.50 / pb

Research Articles on Classical Tamil

பேராசிரியர் ப. மருதநாயகம் ஆங்கிலம், தமிழ், அமெரிக்க இலக்கியம் ஆகிய மூன்றிலும் முறையே சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அமெரிக்க நாட்டு ஹவாயி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டங்களும் தொன்மத் திறனாய்வு பற்றிய ஆய்வேட்டிற்காகத் தமிழில் முனைவர் பட்டமும், "தமிழ்ச் செவ்விலக்கியங்கள்: ஒப்பியல் பார்வை" என்னும் ஆங்கிலக் கட்டுரைத் தொகுதிக்காகப் புதுவை நடுவண் பல்கலைக்கழகத்தின் முதல் டி. லிட். பட்டமும் பெற்றவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலப் பேராசிரியராகக் கடமை ஆற்றியுள்ளார். புதுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றபின் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தின் இயக்குநராக மூன்றாண்டுகள் பணிபுரிந்தார்.
**http://www.marymartin.com/web?pid=842535**
------------------------------------------------------------------------------------------------
தமிழில் மொழிப்பெயர்ப்பு இலக்கியம் = Tamilil Molippeyarppu Ilakkiyam / அ. பிச்சை = A. Piccai
மதுரை: கபிலன் பதிப்பகம் = Kapilaṇ Patippakam, Maturai 2022
478p.; 22 cm.
9789392351556
550gm.
$ 24.00 / pb

தமிழில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்களை இலக்கியவகை அடிப்படையில் தொகுத்துள்ள நூல். தமக்கு கிடைத்த நூல்களையும்,

சேகரித்து வைத்துள்ள காலச்சுவடு, திசை எட்டும், தீரா நதி, புது எழுத்து இதழ்களில் வந்த மதிப்புரைகளிலிருந்தும், சில நூல்களின் முன்னுரையில் இருந்தும், அணிந்துரையிலிருந்தும் திரட்டிய தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மொழியியலும் மொழிபெயர்ப்பும், மொழிபெயர்ப்பு இலக்கியம், கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பாளர்கள், வெளிநாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு சிந்தனைகள் போன்ற தலைப்புகளில் அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பு தகவல் களஞ்சியமாக உள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் சேர்க்கப்பட்டிருக்கலாம்.
**http://www.marymartin.com/web?pid=841930**

---

சிலம்பின் காலம் = Cilampiṉ Kālam / இராம கி = Irāma Ki
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṉṉai 2022
191p.; ills. 22 cm.
9789391949976
320gm.
$ 11.00 / pb

வரலாற்றுக் காலக்கணிப்பு முற்றைப் புள்ளிகளால் (absolute markers) ஒழுங்கு செய்யப் படுவதைச் சொல்லி, இந்திய, தமிழக வரலாறுகளின் முற்றைப் புள்ளிகளையும், சிலம்பின் பழைய காலக் கணிப்புக்களையும் இக்கட்டுரை முதலில் தெரிவிக்கிறது. அதோடு, காரவேலனின் அத்திகும்பா கல்வெட்டின் காலம் கி.மு.165 ஆகவும், முதலாம் கயவாகு காமினியின் காலத்தை கி.பி.171-193 ஆகவும் கொண்டு, பழந்தமிழக வரலாற்றை ஒழுங்கு செய்வதையும் கேள்வியெழுப்புகிறது. அடுத்து, மேடைக்கூத்து வடிவங்கொண்ட சிலம்பிற்குள், முன்னால் வரும் பதிகமும், கடைசியில் வரும் வரந்தரு காதையும், மற்ற காதைகளோடும், உரைபெறு கட்டுரையோடும், பெரிதும் முரண்படுவதால், அவற்றை இளங்கோ எழுதியிருக்க வாய்ப்பில்லை என்பது சான்றுகளோடு தெளிவாக நிறுவப் படுகிறது.
**http://www.marymartin.com/web?pid=842489**

---

சாமானியனின் முகம் "நெல்லை மண் மணம் கமழும் தனித்துவமான கட்டுரைகள் = Cāmāṉiyaṉiṉ Mukam "Nellai Maṇ Maṇam Kamalum Taṉittuvamāṉa Kaṭṭuraikaḷ / சுகா = Cukā
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
200p.; 22 cm.
9788195752430
360gm.
$ 12.00 / pb

திருநெல்வேலி வட்டார வழக்கின் தனித்துவத்தை எழுத்து வழியாகத் தமிழ்நாடெங்கும் எடுத்துச் சென்றவர் சுகா. வட்டார வழக்கின்

இனிமையை எழுத்து எந்த வகையிலும் சிதைத்துவிடக் கூடாது என்பதில் அதீத கவனம் கொண்டவர். பேச்சு வழக்கின் இனிமை என்பதன் இயல்பான ஒலியில் இருக்கிறது என்பதைத் தன் ஒவ்வொரு கட்டுரையிலும் சுகா அழுத்தமாகச் சொல்லி இருப்பதை, இந்த நூலில் உள்ள கட்டுரைகளில் மட்டுமல்ல, அவரது எந்த ஒரு கட்டுரையிலும் காணலாம். இன்னும் சொல்லப் போனால் அவரது எழுத்தின் அடிநாதமே இதுதான். சுகா மிகச் சிறந்த கதை சொல்லி. நல்ல பாரம்பரியமான உணவைத் தேடிச் செல்லும்போதும் சரி, தன் நட்புகளைப் பற்றிச் சொல்லும்போதும் சரி, அவர்களுள் உயர்ந்தவர் சாதாரணமானவர் என்கிற பாகுபாடின்றி உரிமையுடன் நகைச்சுவையாகப் பேசும்போதும் சரி, எல்லாவற்றையும் அவர் ஒரு கதைத்தன்மையுடன் சொல்வதை அவதானிக்கலாம்.
http://www.marymartin.com/web?pid=842496
----------------------------------------------------------------------------------------------------
தொல்காப்பியரின் கவிதையியல் டி. என்.ஏ. அணுகுமுறை = Tolkāppiyariṇ Kavitaiyiyal Ti. Eṇ. ē. Aṇukumurai / பொ. நா. கமலா = Po. Nā. Kamalā
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
163p.; 22 cm.
9789393358042
300gm.
$ 9.00 / pb

தொல்காப்பியத்தைப் புதிய அணுகுமுறையில் ஆராய்ந்துள்ள நூல். இந்த வகை அணுகுமுறை அண்மைக்காலமாக வளர்ந்து வருகிறது. மேனாட்டுத் திறனாய்வு முறையிலும், அறிவியல் கண் கொண்டு பார்க்கும் ஆர்வத்திலும் தமிழறிஞர்கள் முயன்றுள்ளனர். இந்த நூல், டி. என்.ஏ., என்ற மரபணுக் கூறுகளோடு தொல்காப்பியக் கவிதையியலை ஒப்பிட்டுள்ளது. இது புதுமையானது. மேனாட்டு மொழியியல் அறிஞர் ஜே. எஸ். ஹில்லிஸ் கூற்றின் அடிச்சுவட்டில் எழுதியிருப்பது புதுமை விருந்தாக உள்ளது. தொல்காப்பியம் கூறும் அகம், புறம் கூறுகளைப் பல வகையில் டி. என்.ஏ., அணுகுமுறையோடு பாகுபடுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியக் கவிதையியலில், 23 இணை கூறுகளைத் தெரிவு செய்து, முதல் 23 இணைகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து கிடப்பதாக காட்டியுள்ளார். சில பகுப்புகள் ஏற்றுக்கொள்ள தக்கதாகவும், மறுபரிசீலனைக்கு உரிய வகையிலுமாக அமைந்துள்ளன. ஆய்வறிஞரின் அரிய முயற்சி இந்த நூல்.
http://www.marymartin.com/web?pid=841939
----------------------------------------------------------------------------------------------------
நாட்டுப்புற அறிவியல் = Nāṭṭuppura Ariviyal / பேரா. சு. சண்முகசுந்தரம் = Pērā. Cu. Caṇmukacuntaram
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
iv, 134p.; 22 cm.
9789393358226
260gm.
$ 7.50 / pb

பேரா. முனைவர் சு. சண்முகச்சுந்தரம் பெங்களூர் செயிண்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். 25க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். குறிப்பாக நாட்டுப்புறவியல் ஆய்வுகள் மிகுதி. இந்நூலும் ஒரு நாட்டுப்புறவியல் ஆய்வுக்தான்.
**http://www.marymartin.com/web?pid=842485**
----------------------------------------------------------------------------------------------------
கவிதையின் அந்தரங்கம் = Kavitaiyiṉ Antarankam / க.வை. பழனிசாமி = Ka. Vai. Palaṇicāmi
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
215p.; 22 cm.
9789355230805
300gm.
$ 12.50 / pb

நவீன கவிதையை எப்படி புரிந்துகொள்வது? நவீன கவிதைகளின் மொத்தச் சொற்களைக் காட்டிலும் கூடுதலான அளவில் அந்தக் கவிதைகளைப் பற்றிக் கவிஞர்களும் விமர்சகர்களும் வாசகர்களும் எழுதியிருக்கிறார்கள்; என்றாலும் நவீன கவிதையின் ரகசியங்கள் பிடிபடாமல் நழுவுகின்றன.

கவிதைக்குள்ளிருந்து கவிதையைப் பேசுவதன் மூலம் இந்தப் புதிரை விடுவிக்க முயல்கிறார் க.வை. பழனிசாமி. தமிழின் முக்கியமான கவிஞர்களில் 14 பேரின் கவிதைகளை முன்வைத்து அவர் இந்தச் சவாலை மேற்கொள்கிறார். கவிதைக்குள்ளேயே அதைத் திறக்கும் திறவுகோல் இருப்பதைத் தன் கூர்மையான, சொற்களை ஊடுருவும் வாசிப்பினூடே கண்டடைகிறார். அந்த அனுபவத்தைப் பூடகமற்ற சொற்களின் மூலம் பகிர்ந்துகொள்கிறார்.
**http://www.marymartin.com/web?pid=842522**
------------------------------------------------------------------------------------
சங்க இலக்கிய ஆய்வுகள் = Canka Ilakkiya āyvukaḷ / சு. அட்சயா = Cu. Aṭcayā
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṉṉai 2022
170p.; 22 cm.
9789393358035
250gm.
$ 8.50 / hb

தொழில், இசை, கருவிகள், அறம், நேரமேலாண்மை, பண்பாடு, உளவியல் என இன்றைய நவீன சமுதாயம் அதிகம் கவனம் செலுத்தும் கூறுகளை சங்க இலக்கியத்திலிருந்து ஆய்வு நோக்கில் இந்த நூல் விவரிக்கிறது.
19-ஆம் நூற்றாண்டில்தான் மேற்கு உலகம் உளவியல் குறித்த ஆய்வை மேற்கொண்டது. ஆனால், அதற்கும் பன்னெடுங்காலம் முன்பே

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என பல்வேறு சங்கப்புலவர்களும் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.
வேட்டை, வழிபாடு, போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்ட கொம்பு என்ற இசைக்கருவி தமிழர் வாழ்வில் இருந்து தற்போது வழக்கொழிந்துள்ளது. அதேநேரத்தில் கேரளத்தில் பஞ்சவாத்தியத்தில் ஒன்றாக கொம்பு இசைக்கப்படுவதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=837207**
-------------------------------------------------------------------------------------------
ஹேமபர்க்கரும் குழிப்பணியாரமும்: நாட்டார் வழக்காற்றியல் கட்டுரைகள் (நாட்டார் வழக்காற்றியல் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு = Hēmaparkkarum Kulippaṇiyāramum: Nāṭṭār Valakkārriyal Kaṭṭuraikaḷ (Nāṭṭār Valakkārriyal Parriya Kaṭṭuraikaḷiṇ Tokuppu) / பழனி கிருஷ்ணசாமி = Palaṇi Kiruśṇacāmi
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
vii, 148p.; 22 cm.
9789393358271
300gm.
$ 9.00 / pb

A Collection of Essays on Folklore

தமிழர் நாகரிகத்திலும், பண்பாட்டிலும் நாட்டார் வழக்காறுகளின் செல்வாக்கு மிக அழமாக இருப்பதாலேயே அவர்கள் நாகரிகமும், பண்பாடும் இப்போதும் தனித்தன்மை கொண்டவையாக இருக்கின்றன. தமிழ்நாட்டு அளவிலும், அதற்கு அப்பாலும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்குப் பங்களிப்புச் செய்த பல ஆளுமைகளோடு எனக்கு நேரடியாகவும், புத்தகங்கள் மூலமாகவும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் விளைவாக எழுதிய கட்டுரைகள் இதில் உள்ளன.
**http://www.marymartin.com/web?pid=842483**
------------------------------------------------------------------------------------------
தமிழ் இலக்கியத்தில் கவின் கலைகள் = Tamil Ilakkiyattil Kaviṇ Kalaikaḷ / 'எண்ணம் மங்கலம்' அ. பழநிசாமி = 'Eṇṇam Mankalam' A. Palanicāmi
சென்னை: ஸ்ரீசெண்பா பதிப்பகம் = Srīceṇpā Patippakam, Ceṇṇai 2023
184p.; 22 cm.
260gm.
$ 9.00 / pb

தமிழர்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற கவின்கலைகள், அழகுக்கலைகள், நுண்கலைகள் காலத்தால் நின்று நிலைத்து, என்றும் பெருமை பேசக்கூடியவைகளாக விளங்குகின்றன. பழந்தமிழர்களின் கலைநெஞ்சத்தில் விளைந்த கருத்தாழமிக்க நுட்பங்களை ஆராய்ந்து நல்ல திட்பமுடன் நூலைப் படைத்துள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=841944**
---------------------------------------------------------------------------------------------------

அழகில் கொதிக்கும் அழல் = Alakil Kotikkum Alal / இசை = Icai
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
103p.; 22 cm.
9789355232427
220gm.
$ 6.50 / pb

பழந்தமிழ் சொல்லிணைவுகள் மீதும், அது உருவாக்கும் ஆழமான பொருள் மீதும் தீரா மயக்கம் கொண்டவர் கவிஞர் இசை. இக்கட்டுரை நூலில் நமது நீண்ட கவி மரபின் கண்ணிகளைக் காட்சிக்கு வைக்கிறார். பழந்தமிழ்ப் பாடல்களைப் பம்பரமாயும், நவீன கவிதைகளைச் சாட்டையெனவும் பாவித்து இசை சுழற்றுகையில் உண்மையில் பெரும் ஆட்டம் கழ்ந்துவிடுகிறது. காமத்தையும் காதலையும் அழகையும் ஆன்மீக நிலையில் வைத்துப் பார்க்கும் இசையின் கண்களில் கொஞ்சம் திவ்யம் கூடியிருக்கிறது.
http://www.marymartin.com/web?pid=842500
-----------------------------------------------------------------------------------------------
லவ் யூ டி = Lav Yū Ti / வா. மு. கோமு = Vā. Mu. Kōmu
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṉṉai 2022
112p.; 22 cm.
9789393650481
250gm.
$ 7.50 / pb

Novel

திருமணப்பத்திரிக்கை கொண்டு வரும் தூரத்து உறவினர் பத்திரிக்கையை கொடுத்து விட்டு, ‘என்னை அடையாளம் தெரியுதுங்களா?’ என்று வேறு கேட்கிறார். யோசிக்கையில், திருப்பூர் மின்மயானத்தில் ‘ஜென்மம் நிறைந்தது... சென்றவர் வாழ்க!” வென இவரை எரித்து விட்டு வந்த ஞாபகம் தாள் வருகிறது. ‘திருமணத்துக்கு ரெண்டு நாள் முந்தியே வந்துடோணுமுங்க!’ என்று சொல்கிறார்கள். ரெண்டு நாள் முந்திப்போய் நான் என்ன செய்வேன்? அனைவருக்கும் கட்டிங் சேவிங் செய்து விடலாம் அல்லது அழுக்குத்துணிகளை மூட்டையாய் கட்டிக்கொண்டு போய் பைப்படியில் வைத்து துவைத்துக்கொண்டு போய் வெய்யிலில் காயவைக்கலாம்!
http://www.marymartin.com/web?pid=842513
-----------------------------------------------------------------------------------------------
உயிர்பெறும் புனைவுச் சித்திரங்கள்: படைப்பு, மொழி குறித்த பார்வைகள் = Uyirperum Puṇaivuc Cittirankaḷ: Paṭaippu, Moli Kuritta Pārvaikaḷ / அரவிந்தன் = Aravintaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
94p.; 22 cm.
97881960658968

200gm.
$ 6.50 / pb

அரவிந்தனின் இக்கட்டுரைகள் எளிமையான தோற்றத்திலிருக்கும் பிரம்மாண்டமான உலகத்தின் சொற்கள்.
படைப்பு, படைப்பாளி, வாசகர், வாசிப்பு, மொழி, நூலகம் முதலான இலக்கியச் செயல்பாடுகளின் அக, புறக் கூறுகளை இக்கட்டுரைகள் அலசுகின்றன. படைப்பின் வியத்தகு அம்சங்களை நடைமுறை வாழ்வுடன் இணைத்துப் பேசும் கட்டுரைகளுடன் மொழியைப் பற்றிய நுட்பமான, கூர்மையான அலசல்களும் உள்ளன.
சொல் தனக்கு முன்னும் பின்னுமாகக் கொண்டுள்ள அரசியலையும் தத்துவத்தையும் அறிந்துகொள்ள உதவக்கூடிய கட்டுரைகளைக் கொண்ட நூல் இது.
**http://www.marymartin.com/web?pid=841925**
-----------------------------------------------------------------------------------------------
வண்ணநிலவன் சிறுகதைகள் 1970-2019 = Vaṇṇanilavaṉ Cirukataikaḷ 1970-2019 / வண்ணநிலவன் = Vaṇṇanilavaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
735p.; 22 cm.
9789355232977
750gm.
$ 45.00 / pb

Short Stories
வண்ணநிலவனின் கதாபாத்திரங்கள் வாழ்க்கைச் சோதனையில் அனைத்தையும் பறிகொடுத்த பின்னரும் அன்பின் நெகிழ்ச்சியைத் தக்கவைத்துக்கொண்டிருப்பவர்கள். மனிதனை மனிதனாகக் காண்பதற்கு இவருக்குக் கடைசியாக மிஞ்சியிருக்கும் அடையாளம் இதுதான். கதை மரபிலிருந்து விடுபட்டுச் சிறுகதைக்குரிய சிக்கனம், குறிப்புணர்த்தல், குறைவாகக் கூறி அனுபவ அதிர்வுகளுக்கு இடம் தரும் பாங்கு ஆகிய சிறுகதைக்குரிய சிறப்பம்சங்களை இவரது கதைகளில் காணலாம். சுந்தர ராமசாமி
**http://www.marymartin.com/web?pid=842698**
----------------------------------------------------------------------------
உதயபானு - வார்க்கடல் = Utayapāṇu – Vārkkaṭal / கோகுல் சேஷாத்ரி = Kōkul Cēṣātri
சென்னை: பழனியப்பா பிரதர்ஸ் = Palaṇiyappā Piratars, Ceṉṉai 2022
519p.; ills. 22 cm.
9789392324079
650gm.
$ 22.00 / pb
**http://www.marymartin.com/web?pid=842539**

**Historical Novel**
---------------------------------------------------------------------------------------

செம்பா: கனவு தேடிக் கரை கடந்தவள் = Cempā: Kaṇavu Tēṭik Karai Kaṭantavaḷ / மாயா = Māyā
சென்னை: வானதி பதிப்பகம் = Vāṇati Patippakam, Ceṇṇai 2022
372p.; 22 cm.
450gm.
$ 12.00 / pb

Historical Novel
உலக வரலாற்றில் மிக முக்கியமானதொரு காலகட்டம். அன்றைய உலகின் பல திசைகளிலும் கரையிறங்கிப் பரவத் தொடங்கியிருந்தான் தமிழன். சங்க காலமென நம் இலக்கியங்கள் சுட்டும் காலத்தின் மையப்புள்ளி.
அப்படியானதொரு காலத்தின் ஒரு துளியாய் வருகிறது நம் கதை. செம்பாவின் கதை வரலாறல்ல. வரலாறென்பது கல்லில் பொறித்ததுபோல தெளிவான சான்றுடையதாக இருக்க வேண்டும். ஆனால், செம்பாவின் கதை கல்லில் வடிக்கப்பெறவில்லை. அது காற்றில் வரையப்பட்டிருக்கிறது. அது பன்னெடுங்காலமாய் மூச்சிலும் பேச்சிலும் கலாசாரப் பண்பாட்டு வடிவங்களிலும் அடைபட்டு அரூபமாய் திரிந்தலையும் கதைகளுள் ஒன்று. தமிழ் நிலத்துக்கும் கொரிய தீபகற்பத்துக்குமான உறவைப் பறைசாற்றும் வலிமை இன்னும் அதற்குக் கைகூடவில்லை.
ஆனால், அதைச் சாத்தியப்படுத்தத் தேவையான நூலிழைகள் அத்தனையும் நம்மைச் சுற்றியே திரிகின்றன. அவற்றைச் சேகரித்து, சான்று நெய்யும் வேலையில் முதல் தறிக்கோலைக் கையிலெடுத்திருக்கிறேன்.
இது இப்படித்தான் நடந்ததென்ற தெளிவுமில்லை, இப்படி நடந்திருக்கலாமென்ற அனுமானமுமில்லை, இப்படி நடந்திருந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனையே. கற்பனையை விஞ்சும் இந்தக் கதையின் உண்மை வேரைத் தேட வாசகரைத் தூண்டுவதே எம் நோக்கம். திறந்த மனதோடு வாருங்கள்.
**http://www.marymartin.com/web?pid=842545**
-----------------------------------------------------------------------------------------
மேடை (ஒரு நிகழ் கலைஞனின் நிதர்சனங்கள்) = Mēṭai (Oru Nikal Kalaiñaṉiṉ Nitarcaṉankaḷ) / பாண்டியக் கண்ணன் = Pāṇṭiyak Kaṇṇaṉ
சென்னை: தடாகம் பப்ளிகேஷன்ஸ் = Taṭākam Papḷikēśaṉs, Ceṇṇai 2022
277p.; 22 cm.
9788195268887
450gm.
$ 15.00 / pb

Novel
தாழ்த்தப்பட்டவர்கள் எப்போதும் பல்லாக்கு தூக்குபவர்களாகவே இருக்க வேண்டும், பல்லாக்கில் அமர்பவர்களாக இருக்கக் கூடாது, அது முற்போக்கு அரசியலானாலும் சரி, பிற்போக்கு அரசியலானாலும் சரி, எல்லோருக்கும் எப்போதும் அடிமைகள் தேவை. இது போன்ற

அடிமை விலங்கை உடைத்தெறியவும், இப்படிப்பட்ட கொடுமைகளைத் தகர்க்கவும் இந்நாவல் வெளிவந்திருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=842537**
----------------------------------------------------------------------------------------------------
சிங்களத் தீவினுக்கொரு சிறுகதைப் பாலம் (இலங்கைக் கதைகள்) = Cinkaḷat Tīviṉukkoru Cirukata Pālamip (Ilankaik Kataikaḷ) / ஏ.ஏ. ஹெச்.கே. கோரி = ē.ē. Hec. Kē. Kōri
சென்னை: இருவாட்சி = Iruvāṭci, Ceṉṉai 2022
146p.; 22 cm.
9788195486380
740gm.
$ 7.50 / pb

Short Stories
2019இல் இவன் இலங்கைக்குப் போயிருந்தபோது, யாழ்ப்பாணத்து எழுத்தாளர் நண்பர் சாந்தனுடைய முயற்சியில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில், 'காணாமல் போகவிருந்த கதைகள்' என்கிற இவனுடைய அந்தச் சிறுகதைத் தொகுதிக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அறிமுகக் கூட்டத்தில் உரையாற்றிய ஞானம் இலக்கிய இதழின் ஆசிரியர்.
**http://www.marymartin.com/web?pid=842697**
----------------------------------------------------------------------------------------------------
பொல்லாத பாசம் - பராங்குசம் கதைகள் = Pollāta Pācam - Parānkucam Kataikaḷ / ராணிதிலக் = Rāṇitilak
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
234p.; 22 cm.
9789390884438
300gm.
$ 14.00 / pb

Short Stories

உண்மையும் தைரியமும் நிறைந்த எழுத்து பராங்குசம் அவர்களின் தனிச்சிறப்பு. இவர் அச்சுக்காக எழுதியது மிகவும் குறைவு. இவருடைய சிறுகதைகள் கலாமோகினி, சிவாஜி, சுதேசமித்திரன் வாரப் பதிப்பு, தேனீ முதலியவற்றிலே வெளிவந்தன. வெங்கட்ராமன் தனிமனிதனின் ஏக்கங்களோடு விளையாடுபவர். கிருத்திகா தனிமனிதன் சமுதாயத்தில் போலி ஆசாரங்களிலிருந்து விடுபடும் திணறலைச் சித்தரிப்பவர். பராங்குசம் சமூகத்தைத் தனிமனிதன் உருவாக்க முடியும், திருத்த முடியும், அழகுறச்செய்ய முடியும், இப்பொழுதைவிடப் பண்பும் பயனுமுள்ளதாக வாழச்செய்ய முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டவர். அவருடைய எழுத்தில் இந்த நம்பிக்கை விரவிக் கிடக்கிறது. சிலசமயம் கணிப்பாக ஒலிக்கிறது. இதைக் காணும்பொழுது முந்திய இருவரையும்விட பாரத இலக்கியப் பண்பு இவரிடம் ஓங்கியிருக்கிறது என்பதை உணர முடியும்.

http://www.marymartin.com/web?pid=842715
------------------------------------------------------------------------------------------------
கற்றாழை = Karrālai / ஐ. கிருத்திகா = Ai. Kiruttikā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
103p.; 22 cm.
9789355232380
200gm.
$ 7.00 / pb

Short Stories

பெண்ணுலகம் எதனையெல்லாம் கொண்டு துயருறுகிறது? அவர்களுக்குத் தங்களின் மனங்கள்போலவே உடல்களும் சுமையாக மாறுகின்றன. தன்னிலையைச் சமூக நிலையோடு பொருத்த வேண்டிய அவசியத்துக்குள்ளும் திணிக்கப்படுகிறார்கள். அந்தப் போராட்டங்களின் அவசங்களையும் மன எழுச்சியையும் இயல்பான சொற்களுக்குள் வடித்தெழுதுகிறார் கிருத்திகா. பெண்களின் அக உலகம் அவர்கள் உடல்களினின்றும் வேறானவையல்ல என்பதை ஒரு பெண்ணின் பார்வையில் சொல்லும் கதைகள் இவை.
http://www.marymartin.com/web?pid=842716
------------------------------------------------------------------------------------------------
கோடை காலத்தின் சாலை = Kōṭai Kālattiṉ Cālai / பா. ராஜா = Pā. Rājā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
94p.; 22 cm.
9789355232601
150gm.
$ 6.25 / pb

Short Stories

தொடர்ச்சியான உறவுகளில், வாழ்நிலைகளில் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் நெருக்கங்களுக்கும் நெருடல்களுக்கும் பிறகான மன அமைதியில், வெற்றிடத்தில், மனப்பிறழ்வில், ஆகக் கடைசியிலான தேடலில் நமது கைகளுக்குள் தங்கிக்கொள்ளும் சில உணர்வுகளின் ஈரமான தடத்தைப் போலவே இக்கதைகள் நம்முள் தங்கிக்கொள்கின்றன. கைவிடப்பட்ட வழியில், சந்திப்பில் தோன்றி மறைந்துபோகும் சில முகங்களின் சிறு சிறு ஞாபகங்களும் தொடர்ச்சிகளும் முடிவுகளும் இப்படித்தான் நம்மை நிலைகுலையவைக்கின்றன. வாழ்வு எப்போதும் கச்சிதத்தன்மையற்றதுவே, அதைத்தான் இக்கதைகள் பட்டவர்த்தனமாக எடுத்துக் காண்பிக்கின்றன.
http://www.marymartin.com/web?pid=842718
------------------------------------------------------------------------------------------------

கடவுளை தரிசித்த கதை = Kaṭavuḷai Taricitta Katai / தரணி ராசேந்திரன் = Taraṇi Rācēntiraṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci 2022
128p.; 22 cm.
9789390811922
200gm.
$ 8.00 / pb

Short Stories

வேத கூற்றுப்படி மனைவியோட அடிப்படை கடமை கணவனை அவன் மனம் கசக்காதபடி பார்த்துக்கொள்வது. கணவனே அவளின் கடவுள். இதில் தவறும் மனைவி அந்த தகுதியை இழக்கிறாள். நீ ஒரு கணவனா தந்தையா உன்னோட கடமைய சரியா செஞ்சிட்ட. நீ உன்னோட இறுதி காலத்த எட்டியாச்சி. இனி உன்ன சுத்தியிருக்கும் உறவுகள் மேல இருக்கும் எல்லா பற்றையும் துறந்துடு. எல்லா தேவையையும் எதிர்பார்ப்பையும் துறந்துடு. கடவுளை தரிசிக்கும் வழிய தேடு. அத நோக்கி போ. கடைசி மூச்சுக்குள்ள கடவுள தரிசிக்க முயற்சி.
**http://www.marymartin.com/web?pid=838031**
------------------------------------------------------------------------------------------
பழைய குருடி = Palaiya Kuruṭi / த. ராஜன் = Ta. Rājaṉ
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci 2022
168p.; 22 cm.
9789390811175
350gm.
$ 12.50 / hb

Short Stories

உலகம் நமக்கு சமதளமாகவும் அசைவற்றதாகவும் தெரிந்ததை, அப்படி இல்லை, அது கோள வடிவமாக, கொஞ்சம் சாய்ந்தவாக்கில், சுழன்றபடியே சூரியனைச் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று நாம் ஒப்புக்கொள்ளக் கடினமான தர்க்கத்தை அளித்த, அந்த உண்மையான யதார்த்தத்தின் கண்டுபிடிப்பைப் போல்தான் புனைவுகளுக்குள் மறைந்திருக்கும் யதார்த்தக் கதைகளும். ஆனால், அந்த உண்மையான யதார்த்தத்தை நம்மால் எந்நேரமும் நினைவில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. கோளத்தையும் சுற்றிக்கொண்டிருப்பதையும் பிரக்ஞையிலிருந்து அகற்றிவிட்டு அதுதான் உண்மை என்றபோதும் நாம் நம்புவது சமதளமாகவும் அசைவற்றதாகவும் தெரியும் இந்த உலகத்தின் புனைவு யதார்த்தத்தைத்தான். இப்படியான அம்சங்களையே இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் வரித்துக்கொண்டிருக்கின்றன; சமதள அனுபவத்துக்கும் கோள அறிவுக்கும் இடையேயான உரையாடல்களாக விரிகின்றன.
**http://www.marymartin.com/web?pid=842700**
------------------------------------------------------------------------------------

கடைசி ரயில் பெட்டி = Kaṭaici Rayil Peṭṭi / அகிலாண்ட பாரதி = Akilāṇṭa Pārati
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2022
232p.; 22 cm.
350gm.
$ 11.25 / pb

என்னுடைய பலவருட வாசிப்பு அனுபவத்தில், எழுத்தை வைத்தே எழுதும் கலைஞனைப் பற்றி பலதையும் புரிந்து கொள்ள முடியும் எனும் என் கணிப்பு அகிலாண்டபாரதியின் படைப்பில் சற்றே உலுக்கப்பட்டது. ரயில் பயணத்தில் அது சகஜந்தானே! எழுத்தாளரைப் பற்றி அதிகம் ஊகிக்கமுடியாத, தனி சாதுர்யத்தோடு ஆரம்பிக்கும் எழுத்து, பிறகு நெல்லைத் தமிழ், ஊர்கள், அரசு மருத்துவமனை, என்று நமக்குத் தெரிந்த பாரதியைக் கண்ணில் காட்டுகிறது. 'உண்மையான சொற்கள் நேர்த்தியாகஇருப்பதில்லை நேர்த்தியான சொற்களில்உண்மை இருப்பதில்லை' என்பதைமீறி 'கடைசி ரயில்ப்பெட்டி' அன்றாட வாழ்வின் உண்மையான மனிதர்களை மிக நேர்த்தியாய் அடுக்கி வைத்திருக்கின்றது. விதவிதமான கதாபாத்திரங்களைச் சீட்டுக்கட்டு போல் கலைத்துப் போட்டு பிறகு விசிறியாக ஒன்று சேர்த்து வாசிக்கத் தரும் போது வாசகர்களின் மனம் நிச்சயம் பூரிக்கும்.
[http://www.marymartin.com/web?pid=843616](http://www.marymartin.com/web?pid=843616)
------------------------------------------------------------------------------------------
கி. ரா ஒன்பது தொகுதிகள் = Ki. Rā Oṇpatu Tokutikaḷ / கி. ராஜநாராயணன் = Ki. Rājanārāyaṇaṇ
தஞ்சாவூர்: அன்னம் = Aṇṇam, Tañcāvūr 2022
9 vols. 23 cm.
9000gm
$ 300.00 / hb

Complete Collection of Ki. Rājanārāyaṇaṇ

தொகுதி1: நாவல்கள், குறுநாவல்கள் = Tokuti 1: Nāvalkaḷ Kurunāvalkaḷ
தொகுதி2: சிறுகதைகள்= Tokuti 2: Cirukataikaḷ
தொகுதி3: தொடர் கட்டுரைகள் = Tokuti 3: Toṭar Kaṭṭuraikaḷ
தொகுதி4: தொகுப்புக் கட்டுரைகள் = Tokuti 4: Tokuppuk Kaṭṭuraikaḷ
தொகுதி5: தனிக்கட்டுரைகள்= Tokuti 5: Taṇikkaṭṭuraikaḷ
தொகுதி6: நட்டுப்புறக் கதைகள்-1 = Tokuti 6: Naṭṭuppurak Kataikaḷ-1
தொகுதி7: நட்டுப்புறக் கதைகள்-2 = Tokuti 7: Naṭṭuppurak Kataikaḷ-2
தொகுதி8: கடிதங்கள்= Tokuti 8: Kaṭitankaḷ
தொகுதி9: வழக்குச் சொல்லகராதி = Tokuti 9: Valakkuc Collakarāti

கி. ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு தேர்ந்த கதை சொல்லி. 'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப்பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு

இருந்துவிட்டேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர். நல்ல இசை ஞானம் கொண்டவர், கவியரசு நா. காமராசன் அவர்கள் நடத்திய இலக்கிய பத்திரிகையான" சோதனை"யின் ஆலோசகர் ஆக இருந்துள்ளார்.
http://www.marymartin.com/web?pid=843644
------------------------------------------------------------------------------------------
படிமம் = Paṭimam / மு. சுதந்திரமுத்து = Mu. Cutantiramuttu
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṇṇai 2022
150p.; 22 cm.
9789391947095
250gm.
$ 8.50 / pb

படிமம் பற்றிய இந்நூல் சிறியது! ஆனால் இது செப்பமான செய்திகளின் பெருஞ்சுரங்கம்! தமிழில் வளமான இலக்கியக்கொள்கைகள் இருக்கின்றன. இருந்தாலும் புதியனவற்றை உள்வாங்கித் தமிழ் இலக்கியக்கொள்கைகளை வளப்படுத்த வேண்டியது நம் கடமை.
http://www.marymartin.com/web?pid=841898
------------------------------------------------------------------------------------------

## Literature - Short Stories

அய்யம்மா கதைகள் = Ayyammā Kataikaḷ / சைமன் ஜான் = Caimaṇ Jāṇ
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
80p.; 22 cm.
9789391949884
200gm.
$ 5.00 / pb

அய்யம்மா சொல்லியிருக்கும் ஐந்து கதைகளும் தமிழ்க் கதையாடல் மரபில் தவிர்க்கவியலாத நிகழ்வாக இப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பேசும் கதைக்கும் பேசாத கதைக்குமான இடைவெளியை இத்தொகுப்பிலுள்ள கதைகள் நிரவ முயலுகின்றன. திருநெல்வேலி வட்டார மொழிநடையும், வில்லுப்பாட்டின் கதை சொல்லும் முறைகளையும் கலந்து உருவான அய்யம்மாவின் கதைமொழி, தமிழில் நவீனக் கதை சொல்லலைக் கட்டமைக்க முனைவோருக்கு ஏராளமான மொழி வழி தந்திரங்களைச் சொல்லித்தரக்கூடும்.
http://www.marymartin.com/web?pid=842821
------------------------------------------------------------------------------------------
ஆயிரங்கண் போதாது வண்ணக்கிளியே... = āyirankaṇ Pōtātu Vaṇṇakkiḷiyē... / விநாயக முருகன் = Vināyaka Murukaṇ
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022

99p.; 22 cm.
9789393650603
200gm.
$ 6.50 / pb

விநாயக முருகனின் கதைகள் மாநகரம் மனிதர்களிடம் உருவாக்கும் பிறழ்வுகள், வினோத நடத்தைகள், விசித்திரங்கள் வழியே உருவாகும் தனிமை உணர்ச்சியை பிரதிபலிப்பவை. அவரது கதைசொல்லல் முறையும் சுவாரசியமான மொழி நடையும் வாசகர்களுடன் இணக்கமான ஒரு உரையாடலை நிகழ்த்துகின்றன.
[http://www.marymartin.com/web?pid=842824](http://www.marymartin.com/web?pid=842824)
------------------------------------------------------------------------------------
மகா மாயா = Maha Maya / குமாரநந்தன் = Kumarananthan
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
271p,; 22cm.
9788195978120
350gm.
$ 17.00 / pb

குமாரநந்தன் கதைகள் தத்துவங்களாலும் கடவுள்களாலும் கைவிடப்பட்ட அல்லது தத்துவங்களிலிருந்தும் கடவுள்களிடமிருந்தும் விடுதலை பெற்றுக்கொண்ட இடத்தில் பிறக்கின்றன. வாழ்வில் சாத்தியமுள்ள வெவ்வேறு நிகழ்தகவுகளால் உருவாகும் சம்பவங்களைக் கதாபாத்திரங்களின் அருகருகே வைக்கும்போது ஏற்படும் மரணத்துக்கு நெருக்கமான அல்லது வாழ்வையே புரட்டிப்போடும் நிகழ்வுகள் இவரிடத்தில் கதைகளாக உருக்கொள்கின்றன. காலாவதியாகிப்போன விவரித்தல் மொழியிலோ அல்லது வழவழப்பான ரொமான்டிக் கூறுமுறையிலோ அல்லாமல் நேரடியாகவும் கச்சிதமாகவும் கூர்மையாகவும் விவரிக்கப்படுவது இவர் கதைகளின் பலம். அதிகார நிறுவனங்களால் எளிய மனிதர்களுக்கு ஏற்படும் துயரங்களின் வழியே, வாழ்வின் புதிர்களுக்குள், முடிவற்ற தர்க்கங்களுக்குள் வாசகனைத் தள்ளிவிடுபவராக இருக்கிறார் குமாரநந்தன்.
[http://www.marymartin.com/web?pid=841988](http://www.marymartin.com/web?pid=841988)
------------------------------------------------------------------------------------------------
முரட்டுப் பச்சை = Murattup Paccai / லாவண்யா சுந்தரராஜன் = Lāvaṇyā Cuntararājaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
159p.; 22cm.
9789355232823
250gm.
$ 10.00 / pb

மரபார்ந்த கதைக்களன்களிலிருந்து மாறுபட்டுச் செல்கின்றன லாவ ண்யாவின் சிறுகதைகள்.
தகவல் தொழில்நுட்பத் துறையில் பெண்களின் இருப்பு,
அவர்களின் பிரத்யேகமான பிரச்சினைகள்,
துறை சார்ந்த நெருக்கடிகள், குடும்ப -
சக பணியாளர்களுடனான உறவுகளில் ஏற்படும் மாற்றங்கள்,
விரிசல்கள்,
உறவுச் சிக்கல்கள் ஆகியவற்றை இவரின் சிறுகதைகள் கவனப்படுத்து கின்றன. இவை பெண்களின் கதைகள் மட்டுமன்று.
ஆண்களின் பிரச்சினைகளும் அவை அவர்களைச் சிதைக்கும் வழிவ கைகளையும் ஆராய முயலும் கதைகள்.
பெண்ணின் நோக்கிலிருந்து சொல்லப்படாததே இந்தக் கதைகளின் மு க்கிய அம்சம். அமைப்புகளின் வன்முறை,
அதிலிருந்து மீளத் தடுமாறும் மனிதர்கள் எனப் புனைவுலகின் எல்லை களை இக்கதைகள் விரிவுபடுத்துகின்றன. புதிய களம்,
புதிய வாசிப்பனுபவம்.
http://www.marymartin.com/web?pid=841987
----------------------------------------------------------------------------------------------------
மகாபாரத்க் கிளைக் கதைகள் (Makāpāratk Kiḷaik Kataikaḷ) / லதா குப்பா = Latā Kuppā
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
168 p.; 22 cm.
9789395272438
250gm.
$ 10.00 / pb

மகாபாரதத்தில் சொல்லப்படும் இந்த உபகதைகள் மிகவும் ஆழமானவை. அர்த்தம் பொதிந்தவை. நம் புராணச் சிறப்புக்கு என்றென்றும் சாட்சியாக நிற்பவை. மகாபாரதத்தில் வரும் பல்வேறு கிளைக் கதைகளில் சில இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.
இந்தக் கிளைக் கதைகளின் சிறப்பம்சம், இவை மகாபாரதத்தின் நெடுங்கதைக்கு இணையான சுவாரஸ்யம் கொண்டவை. அதேசமயம், பெரிய பெரிய தத்துவங்களை மிக எளிமையாக விளக்கும் தன்மை கொண்டவை. ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. இக்கதைகள் மகாபாரதத்தில் எந்த இடத்தில் யாரால் ஏன் சொல்லப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொண்டால், மகாபாரதத்தின் விரிவையும் ஆழத்தையும் நாம் புரிந்துகொள்ளமுடியும்.
இக்கதைகளை சுவாரஸ்யமாகவும் எளிமையாகவும் எழுதி இருக்கிறார் லதா குப்பா.
http://www.marymartin.com/web?pid=841986
----------------------------------------------------------------------------------------------------
கொஞ்சம் அறிவியல், கொஞ்சம் கதை = Koñcam Ariviyal Koñcam Katai / என். சொக்கன் = Eṇ. Cokkaṇ

சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
110p.; 22cm.
9789393882097
200gm.
$ 6.50 / pb

அறிவியல்தான் இந்த உலகத்தின் அச்சாணி. பல நூற்றாண்டுகளாக வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு அறிவியலாளர்களுடைய சிறிய, பெரிய கண்டுபிடிப்புகள்தான் நம்முடைய இன்றைய வாழ்க்கைக்கும் அடித்தளமாக இருக்கின்றன. அவர்களுடைய பெயர்களை நாம் அறியாமல் இருக்கலாம், ஆனால், அவர்கள் கண்டுபிடித்தவற்றை ஒவ்வொரு கணமும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம், அதன்மூலம் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறோம். சுவையான அறிவியல் நிகழ்வுகள், செய்திகள், கண்டுபிடிப்புகளை எளிமையான கதைகளின் வடிவில் வழங்கும் நூல் இது, அறிவியலின்மீது மாணவர்களுக்கு ஆர்வத்தையும் காதலையும் உண்டாக்கக்கூடியது. இவ்வகையில் இன்னும் பல கதைகளை ரசிக்க, என். சொக்கனுடைய 'அறிவியல் கதைகள்' என்ற நூலைப் படியுங்கள்.
**http://www.marymartin.com/web?pid=841984**
-----------------------------------------------------------------------------------------
ச்சூ காக்கா = Ccū Kākkā / பிரபு தர்மராஜ் = Pirapu Tarmarāj
பொள்ளாச்சி: எதிர் வெளியீடு = Etir Veḷiyīṭu, Poḷḷācci 2023
200p.; 22cm.
9789390811656
300gm.
$ 6.50 / pb

நாமெல்லோரும் ஒருவகையில் பாவனை நடிகர்கள். அழும் முகமூடியையும் சிரிக்கும் முகமூடியையும் அவரவர் சௌகரியங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் பயன்படுத்திக் கொள்கிறோம். சமகாலம் முகமூடிகளையே முகமாக்கிவிட்டது. பிரபுவின் கதைகள் இந்த மூடிகளைச் சற்றேத் திறந்து மூச்சுவிட வைக்கின்றது.
**http://www.marymartin.com/web?pid=841985**
-----------------------------------------------------------------------------------------------
சரோஜா திறக்கும் உலகம்: தேர்ந்தெடுத்த சிறுகதைகள் = Carōjā Tirakkum Ulakam: Tērnteṭutta Cirukataikaḷ / சரோஜா ராமமூர்த்தி = Carōjā Rāmamūrtti
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
296p.; 22 cm.
9789355232502
350gm.
$ 18.75 / pb

வாழ்க்கையை நேரடியாக நோக்கி எந்தவிதச் சப்பைக்கட்டுகளோ உபதேசங்களோ இல்லாமல் கதைகள் எழுதுபவர்களில் ஒருவர்.

மாறிவரும் காலம், மாறாத சிலவற்றுடன் தொடர்ந்து செய்ய நேரிடும் மௌன யுத்தங்களின் சாயல்கள் அவர் கதைகளில் உண்டு. இந்த யுத்தத்தில் உள்ள இழுபறி உறவுகள், இறுக்கங்கள், கோபங்கள், சோகங்கள், ஏய்ப்புகள், அடக்குமுறைகள், மௌனங்கள், சலனங்கள் எல்லாம் அவர் எழுதிய கதைகளில் பல வடிவங்களில் உருப்பெற்றன. தன் கதைகளில் எதையும் விளக்க முற்படுவதில்லை சரோஜா ராமமூர்த்தி. எந்த நிகழ்வையும் கதாபாத்திரத்தையும் அலசி ஆராய்ந்து இதனால் இது என்று நியாயப்படுத்துவதில்லை. தீர்ப்புக் கூறும் பொறுப்பையும் ஏற்பதில்லை. இதைத்தான் மிகையில்லாமல் "குறைபடவே சொல்லல்" என்று க.நா.சு. பாராட்டியிருக்கிறார். அவர் பாணியில், அவர் நோக்கில் அவர் எழுதிய கதைகளை ஒரு தொகுப்பாக இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு கொண்டுவந்து மீண்டும் அவரை எல்லோருக்கும் அறிமுகம் செய்துவைக்க இதுவும் ஒரு காரணம். மீண்டும் சரோஜா ராமமூர்த்தியைப் படிக்கும் உந்துதலை இத்தொகுப்பு அளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.
http://www.marymartin.com/web?pid=841982
--------------------------------------------------------------------------------------------
தஞ்சை ப்ரகாஷ் சிறுகதைகள் = Tañcai Prakāś Cirukataikaḷ / தஞ்சை ப்ரகாஷ் = Tañcai Prakāś
சென்னை: ஸ்ரீ செண்பகா பதிப்பகம் = Srī Ceṇpakā Patippakam, Ceṉṉai 2023
516p.; 22cm.
650gm.
$ 25.00 / pb

வாழ்வின் தீரா ஆச்சரியங்களும், முடிவற்றுத் தொடரும் காமத்தின் தீண்டல்களும் கொண்டவர்களாக தஞ்சை ப்ரகாஷின் கதை மாந்தர்கள் வலம் வருகிறார்கள். அசட்டுத்தனமான, மிகையுணர்ச்சியற்ற நிதானத்துடன் கதைசொல்லும் ப்ரகாஷ், ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் தனித்தனி சித்திரமாகப் பதியும்படி தீட்டியிருக்கிறார். ஆண் / பெண் மனங்களில் பொதிந்து கிடக்கிற காமத்தின் மூர்க்கத்தனமும், வன்மமும் தெறிக்கத் தெறிக்க, அதன் பொருட்டெழுகிற பகையுணர்ச்சி என அவர் காட்டுகிற உலகம் என்றென்றைக்குமானது. பாலுணர்ச்சியின் எல்லையற்ற கற்பனைகள், உள்மன விகாரங்கள், அதன் மீதான சுய பகடிகள் என கதைகளில் இழையோடுகின்றன. ப்ரகாஷ் கதைகளில் வீழ்ச்சியுற்ற, தோல்வியடைந்த மனிதர்களை நாம் நிறைய சந்திக்கலாம். தன்னைத்தானே கேள்விக்குள்ளாக்கிக் கொள்கிறவர்களாக அவர்களை நாம் தெரிந்துகொள்கிறோம். நன்றாக வாழ்ந்தவர்கள், காலத்தால் சிதிலமுற்று தங்களின் கதையை அசைபோடுவது மிகுந்த மனச் சவாலுக்குரிய ஒன்று.
http://www.marymartin.com/web?pid=841981
--------------------------------------------------------------------------------------------
சுரேஷ்குமார இந்திரஜித் சிறுகதைகள் (1981-2020) = Curēśkumāra Intirajit Cirukataikaḷ / சுரேஷ் குமார் இந்திரஜித் = Curēś Kumār Intirajit

நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
654p.; 22cm.
9789355232489
800gm.
$ 41.50 / pb

மேகத்திலிருக்கும்போதும், தரையிறங்கிப் பாயும்போதும் நீரின் அந்தரங்கம் மாறுவதில்லையே! கதைகளின் உருவம், சொல்முறை, மொழி அமைப்பு என மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டாலும், சுரேஷ்குமார இந்திரஜித் கதைகளில் மாறாத அம்சம் ஒன்று உள்ளது. பொதுச் சமூகத்துக்கு எதிர்க் குரலாக இயங்குபவை இந்தக் கதைகள். வல்லானோ பெரும்பான்மையோ உருவாக்கி நிலைப்படுத்திய பொதுக்களத்தின் நடுவே நின்று, தீவிரமான எதிர்க் குரலில் பேசுபவை இந்தக் கதைகள்.
சமூகத்தின் நியதிகளுடன் ஒட்டி ஒழுகும் வாசக மனத்துக்கு இக்கதைகள் வனைந்து அளிக்கும் அனுபவம் புதிதானது; அசலானது. ஏற்கனெவே தெரியவந்த சங்கதிகளிலும் புதிய மர்மங்களை தொனிக்கவைப்பது. எனவே, பழகிய அனுபவமாக இருந்தபடியே புதிய உச்சங்களுக்கு இட்டுச்செல்வது. நவீனத் தமிழ்ச் சிறுகதையின் தவிர்க்க முடியாத முன்னோடிகளில் ஒருவர் சுரேஷ்குமார இந்திரஜித் என்பதை இவை உறுதிசெய்கின்றன. - யுவன் சந்திரசேகர்
**http://www.marymartin.com/web?pid=841980**
--------------------------------------------------------------------------------
தாரிணியின் சொற்கள் = Tāriṇiyiṉ Corkaḷ / சுரேஷ்குமார் இந்திரஜித் = Curēśkumār Intirajit
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil
2022
143p.; 22 cm.
9789355232366
250gm.
$ 9.00 / pb

இத்தொகுப்பில் உள்ள குறுங்கதைகள் மனித உறவுகளிடையில் அரங்கேறும் நாடகத் தருணங்களைப் பகடி செய்து அவற்றின் முரண்பாட்டைக் குறிப்புணர்த்துகின்றன. பல கதைகள் வாழ்க்கை குறித்த மரபான நம்பிக்கைகளைத் தகர்ப்பவை. கதைத்தன்மைக்குப் பதிலாக எளிதில் கடந்துவிட முடியாத நுண்சித்தரிப்புகளை முன்வைக்கின்றன. அலங்காரங்களுக்கும் வர்ணனைகளுக்கும் இடமளிக்காத சுரேஷ்குமார இந்திரஜித்தின் எழுத்து இந்தத் தொகுப்பில் மேலும் செறிவாக வெளிப்பட்டு குறுங்கதை இலக்கியத்தில் ஒரு முக்கியமான முன்னகர்வை நிகழ்த்தியுள்ளது.
**http://www.marymartin.com/web?pid=841936**
----------------------------------------------------------------------------------------------------

பூட்டன் பாட்டன் அப்பன் நான்: தமிழ்த் தேய வரலாற்று வியத்தகு சிறுகதைகள் (பழங் கதைகள்- புதிய கோணம்- புதிய சிந்தனை) = Pūṭṭaṉ Pāṭṭaṉ Appaṉ Nāṉ: Tamilt Tēya Varalārru Viyattaku Cirukataikaḷ (Palan Kataikaḷ-Putiya Kōṇam-Putiya Cintaṇai) / வின்சன் இராசேந்திரன் = Viṇcaṉ Irācēntiraṉ
சென்னை: கொற்கைப் பதிப்பகம் = Korkaip Patippakam, Ceṉṉai 2022
93p.; 22 cm.
200gm.
$ 6.00 / pb

வின்சன் இராசேந்திரன் வரலாற்று ஆய்வு புதின எழுத்தாளர். விவிலியத்தை ஆய்வு செய்து 'தேம்பாவணி பயணம்' .'முறுவல்' போன்ற பல புதினங்கள் எழுதியவர்.'பூட்டன்,பாட்டன்,அப்பன்,நான்' என்ற தலைப்பில் வரலாற்று ஆய்வு சிறுகதைகள் ஏழு எழுதியிருக்கிறார். வரலாற்று நிகழ்வுகளை புதிய கோணத்தில் சிந்தித்து, பிற மொழிக் கலப்பில்லாது தூய தமிழில் தேன் சொட்டும் எளிய நடையில் எழுதியிருப்பது இப்படைப்பின் தனிச் சிறப்பு!. இக்கதைகள் படிப்போரின் புருவங்களை உயர்த்தி புதிய சிந்தனையைத் தோற்றுவிக்கும் என்பது உறுதி
**http://www.marymartin.com/web?pid=842756**
--------------------------------------------------------------------------------------
சேத்துமான் கதைகள் = Cēttumāṉ Kataikaḷ / பெருமாள்முருகன் = Perumāḷmurukaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
63p.; 21 cm.
9789355231604
150gm.
$ 4.75 / pb

தென் தமிழகத்தில் புழங்கும் சாதியின் தீவிரம் அதற்கு வெளியிலிருப்பவர்களுக்கு எல்லா விதங்களிலும் உணர்த்தப்பட்டிருக்கிறது. தமிழ் சினிமாவிற்கு அதில் பெரும் பங்கு உண்டு. கொங்கு மண்டலத்தின் யதார்த்தம் திரைப்படங்களில் வேறு விதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே நிலவும் சாதியின் கோரத்தன்மையை அதன் யதார்த்தத்துடன் பெருமாள் முருகனின் கதைகள் வழியாகவே நான் அதிகம் புரிந்துகொண்டேன். ‘வறுகறி', 'மாப்பு குடுக்கோணுஞ் சாமீ' ஆகிய கதைகளைத் திரைப்படமாக உருமாற்றியதில் பெருமாள் முருகனின் பங்கும் அளப்பரியது.
**http://www.marymartin.com/web?pid=843637**
-----------------------------------------------------------------------------------------
சேக்காளிகளின் வரைகோடுகள் = Cēkkāḷikaḷiṉ Varaikōṭukaḷ / அ. ஜெகநாதன் = A. Jekanātaṉ
சென்னை: மலர் புக்ஸ் = Malar Puks, Ceṉṉai 2022
167p.; 22 cm.

9789391947316
300gm.
$ 9.50 / pb
http://www.marymartin.com/web?pid=843119
-------------------------------------------------------------------------------------------
ச்சீய்... பக்கங்கள் = Ccīy... Pakkankaḷ / சி. சரவணகார்த்திகேயன் = Ci. Caravaṇakārttikēyaṉ
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
245p.; ills. 22 cm.
9789391748333
350gm.
$ 15.00 / pb

'ச்சீய்...' என நம் இந்தியச் சமூகத்தின் கூட்டுமனம் கூச்சப்பட்டுக் கதைக்கத் தயங்குகிற விடயங்களைப் புன்னகையுடன் அணுகிப் பார்க்கிறது இப்புத்தகம். பேசாப் பொருளைப் பேசும் துணிச்சலும் அதைச் சுவாரஸ்யமாகக் கடத்தும் திராணியும் இதில் ஜ்வலிக்கிறது! ப்ரேஸியர், காண்டம், சானிடரி நேப்கின் தொடங்கி கலவி, மலட்டுத்தன்மை, பால்வினை நோய்கள் வரை ஒவ்வொரு விஷயத்தையும் எடுத்துக்கொண்டு ஆதியோடு அந்தமாக அவற்றின் வரலாறு, விஞ்ஞானம், வியாபாரம் என விலாவாரியாக விவரிக்கிறது! 2012 - 2013ல் 'குங்குமம்' இதழில் தொடராக வெளியாகி பரவலான வாசகக் கவனம் பெற்றது.
http://www.marymartin.com/web?pid=843488
-------------------------------------------------------------------------------------------
மாமி சொன்ன கதைகள் = Māmi Coṉṉa Kataikaḷ / சந்திரா இரவீந்திரன் = Cantirā Iravīntiraṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
119p.; ills. 22 cm.
9789355232625
250gm.
$ 7.50 / pb

எண்பதுகளிலிருந்து அறியப்பட்ட எழுத்தாளரான சந்திரா இரவீந்திரன் பல சிறந்த சிறுகதைகளைத் தந்தவர். அவரது மொழிநடை தனித்துவமானது. மனதின் உணர்வுகளை அப்படியே உருவி எடுத்துத் தன் மொழியில் படையலிடுபவர். இப்போது தன் மாமியின் அனுபவங்களை, அவருக்குள் இருந்த உணர்வுகளைச் சிறிதும் குறையாமல் இங்கே பதிவுசெய்திருக்கிறார். இந்நூல் நமக்குப் புதியதொரு களத்தை விரித்துக்காட்டுகிறது. மாமியின் உணர்வுகளை நம் மனதோடு பேசவைக்கிறது. சந்திரா இரவீந்திரனின் படைப்பாற்றல் காரணமாக 'மாமி சொன்ன கதைகள்' அனுபவப் பகிர்வு என்பதையும் தாண்டிக் கலைத்துவம் மிக்க இலக்கியமாகியிருக்கிறது என்பதுதான் சிறப்பு!
http://www.marymartin.com/web?pid=842507

-----------------------------------------------------------------------------------------------------
சிருங்காரம் = Cirunkāram / மயில்கள் ஜி சின்னப்பன் = Mayilkaḷ Ji Ciṉṉappaṉ
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṉṉai 2022
135p.; ills. 22 cm.
9789393650160
260gm.
$ 8.50 / pb

ஓராயிரம் கால்கொண்டு நூறாயிரம் திசையில் தறிகெட்டு ஓடுவது அகம். கால்தடங்களைத் தொடர்ந்து அது சென்றடைந்த இடத்தைக் கண்டடையவே கலைகளும் நவீன அறிவியலும் தத்துவங்களும் தொடர்ந்து முயல்கின்றன. உளம் கொள்ளும் திரிபுகளையும் பாவனைகளையும் பகுத்துணர முயலும் மயிலனின் கதைகளும் அந்தப் பெருமுயற்சியின் பகுதியாகவே அமைகின்றன. எம். கோபாலகிருஷ்ணன்.
http://www.marymartin.com/web?pid=842511
---------------------------------------------------------------------------------------------
புராதன ஏலியன்கள் (சிறுகதைத் தொகுதி) = Purātaṉa ēliyaṉkaḷ (Cirukatait Tokuti) / ராம்பிரசாத் = Rāmpiracāt
சென்னை: நியூ லாஜிக் பப்ளிஷர்ஸ் = Niyū Lājik Papḷiśars, Ceṉṉai 2022
142p.; 22 cm.
9789357013925
250gm.
$ 15.00 / pb

Science Fiction
இன்றைய தேதியில், அறிவியல் புனைவுகள் எழுதுவதில் உள்ள சிக்கல் என்னவென்றால், வாசிக்க வாசகர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கமாட்டார்கள் என்பதுதான். சுஜாதா காலத்தில் அறிவியலில் பெரிய வளர்ச்சி இருக்கவில்லை. அறிவியல் உலகமே குழந்தைமையில் இருந்த கால கட்டம் அது. ஆதலால் அப்போது எழுதப்பட்ட அறிபுனைகளை எல்லோராலும் எளிதாக வாசித்துப் புரிந்துகொள்ள முடிந்தது.
http://www.marymartin.com/web?pid=842713
-----------------------------------------------------------------------------------
புலி வேட்டை சிறுகதைத் தொகுப்பு = Puli Vēṭṭai Cirukatait Tokuppu / மாலன் = Mālaṉ
சென்னை: கவிதா பப்ளிகேஷன்ஸ் = Kavitā Papḷikēśaṉs, Ceṉṉai 2022
160p.; 22 cm.
9789388450966
250gm.
$ 8.00 / pb

இது மாலன் அண்மைக்காலத்தில் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு. இந்தக் கதைகளில் பல அயல் மண்ணில் வாழும் தமிழ்ப் பாத்திரங்களை மையமாகக் கொண்டு அமைந்தவை என்ற வகையில்

இவை புதுமையானவை. தமிழ் இலக்கியத்தின் எல்லைகளை விரிவுபடுத்துபவை.
http://www.marymartin.com/web?pid=842712
-----------------------------------------------------------------------------------------
பெருமைக்குரிய கடிகாரம் = Perumaikkuriya Kaṭikāram / ஜே. பி. சாணக்யா = Jē. Pi. Cāṇakyā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
151p.; 22 cm.
9788196015312
250gm.
$ 9.50 / pb

சாணக்யாவின் சொற்கள் மந்தகாசத் தொனியும் மந்திரப் பண்பும் கொண்டவை. கடலால் சூழப்பட்ட கண்டத் துணுக்குகளைப் போல அண்டப் பேரியக்கத்தின் நடுவே மனித உயிரியின் அற்பச் சலனங்களை இந்தச் சொற்களால் அவர் பதிவுசெய்கிறார். குற்றம், ஏழ்மை, நோய்மை ஆகியவற்றை இயல்புகளாகக் கொண்ட அந்தச் சலனம் பேரியக்கத்தின் கதியில் சிலவேளை தண்டிக்கப்படலாம்; சிலவேளை மன்னிக்கப்படலாம். ஆனால் பேரண்டத்தின் பெருங்கருணை ஒருபோதும் அந்த மீச்சிறு சலனத்தைத் தன் கதியிலிருந்து விலக்கிவைப்பதை சாணக்யாவின் புனைவுகள் ஒப்புக்கொள்வதில்லை.
http://www.marymartin.com/web?pid=842706
----------------------------------------------------------------------------------------------------
பால்யம் = Pālyam / சல்மா = Calmā
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
135p.; 22 cm.
9789355231734
200gm.
$ 8.00 / pb

துயரங்களும் சிக்கல்களும் நிறைந்திருக்கும்போது, புதிய வழியைக் கண்டு மீட்சி பெறும் வழிமுறைகளும் தெரியவில்லையென்றால்... அங்கு சல்மா போன்றவர்கள் தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பார்கள். நம்மிடையேயுள்ள கையிருப்புகள் தீர்ந்துபோகின்றனவா? மனிதர்களை நெறிப்படுத்த இன்னும் என்னென்னவெல்லாம் வேண்டும்? தொடர்ந்து இந்தக் கேள்விகளோடு வந்துகொண்டிருக்கின்றன சல்மாவின் புதிய கதைகள்!
http://www.marymartin.com/web?pid=842708
-----------------------------------------------------------------------------------------
அன்லிமிட்டெட் காலம் = Aṇlimiṭṭeṭ Kālam / அழகிய பெரியவன் = Alakiya Periyavaṇ
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṇṇai 2022
174p.; 22 cm.

9789393650405
300gm.
$ 11.00 / pb

இந்த காலத்தின் சுமையைத் தோளிலும், எதிர்காலத்தின் பொறுப்பை நெஞ்சிலும் ஏற்றுக் கொண்டு காட்டாறெனக் கடக்கிறது நடப்புக் காலம். ஒன்று கண்ணில் பட்டவுடனே இன்னொன்று அதன் அருகில் வந்து, பி ன்அதுவும் காணாமல் போய் இன்னொன்று வருகிறது. இந்தச் சமகாலத்தை எழுத வேண்டுமெனில் காலத்தின் முன்னும் பின்னும் சென்று வரவேண்டும். கூர்த்தப் பார்வையும், பொறுப்புமிக்க பரிசீலனையும் தேவை. அழகிய பெரியவனின் கட்டுரைகளில் இவை அனைத்துமே இருக்கின்றன. அதிலு ம்முக்கியமாய் எங்கு நின்று பேசுவது என்ற தெளிவு இருக்கிறது. எனக்கு இந்தி தெரியாது போடா ஹேஷ்டேக் மாட்டுக்கறி பிரியாணிக்கு த்தடை, மாணவனால் தாக்கப்பட்ட ஆசிரியர், குடியிருப்பில் நுழையு ம்யானைகள் என்று பல்வேறு சமூக நடப்புகளையும், அரசியலையு மஇக்கட்டுரைகளில் விவாதிக்கும் அழகிய பெரியவன்.
http://www.marymartin.com/web?pid=841905
-------------------------------------------------------------------------------------------
கண்ணாடிச் சொற்கள் = Kaṇṇāṭic Corkaḷ / ஜி. குப்புசாமி = Ji. Kuppucāmi
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
191p.; 22 cm.
9789355232540
300gm.
$ 12.00 / pb

மொழிபெயர்ப்பாளராகவே அதிகம் அறியப்பட்ட ஜி. குப்புசாமியின் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு இது. குப்புசாமி விரிவான வாசிப்பும் பல்துறை சார்ந்த ஆழமான அறிவும் தேர்ந்த இலக்கிய ரசனையும் கூர்மையான இலக்கியப் பார்வையும் கொண்டவர். இலக்கியம், கிரிக்கெட், டென்னிஸ், திரையிசை, அரசியல் என அவர் ஆர்வத்தின் எல்லைகள் விரிந்து பரந்தவை. தான் ஆர்வம் செலுத்தும் எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டவர். அவை ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்த பார்வையைக் கொண்டிருப்பவர்.
http://www.marymartin.com/web?pid=841912
-----------------------------------------------------------------------------------------------------

## Music

திரை இசையில் தமிழிசை: 3000 பாடல்கள், 1000 திரைப்படங்கள், 210 இராகங்கள் = Tirai Icaiyil Tamilicai: 3000 Pāṭalkaḷ, 1000 Tiraippaṭankaḷ, 210 Irākankaḷ / நிழல் ப. திருநாவுக்கரசு = Nilal Pa. Tirunāvukkaracu
சென்னை: நிழல் பதிப்பகம் = Nilal Patippakam, Ceṉṇai 2022
414p.; ills. 25 cm.

750gm.
$ 25.00 / pb

ஓராயிரம் படங்களிலிருந்து மூவாயிரம் பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதை இருநூற்று பதினைந்து ராகங்களுக்குள் அடுக்கியிருப்பது, இப்புத்தகத்தின் ஆசிரியர் நிழல் திருநாவுக்கரசின் அரியதொரு வாழ்நாள் ஆய்வுப்பயணத்தின் ஒரு முக்கிய மைல் கல்.
**http://www.marymartin.com/web?pid=843574**
----------------------------------------------------------------------------------------------------

## Parenting

பதறும் பதினாறு = Patarum Patiṇāru / பிருந்தா சீனிவாசன் = Piruntā Cīṇivācaṇ
சென்னை: தமிழ் திசை = Tamil Ticai, Ceṇṇai, 2022
158p.; ills. 22 cm.
250gm.
$ 9.00 / pb

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பற்றி எண்ணுவதை இரண்டுவிதமாகச் சுருக்கிவிடலாம். ஒன்று, ‘இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு எல்லாமே தெரியும்’, இரண்டாவது, ‘இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு எதுவுமே தெரியாது’. இவை இரண்டும் முழு உண்மையல்ல. நாம் குழந்தைகளாக இருந்தபோது கிடைக்காத வாய்ப்புகள் எல்லாம் இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு எளிதாகக் கிடைக்கின்றன. உலகம் முழுவதையும் அவர்கள் இருந்த இடத்தில் இருந்தபடியே அறிந்துகொள்கிறார்கள். தொழில்நுட்ப அறிவிலும் இணையத்தைக் கையாள்வதிலும் நம்மைவிட மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இவை எல்லாமே மறுக்க முடியாத உண்மை.
**http://www.marymartin.com/web?pid=841910**
------------------------------------------------------------------------------------------
காட்பரிஸ் கல்வியும் கமர்கட் கல்வியும்... = Kāṭparis Kalviyum Kamarkaṭ Kalviyum.../ இரா. எட்வின் = Irā. Eṭviṇ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
59p.; 22 cm.
9788123443157
150gm.
$ 3.50 / pb

தன் குழந்தையின் கல்விக்காக உரிமைக்குரல் எழுப்பும் தாயை கண்முன் நிறுத்தும் ஆசிரயா், காட்பரிஸ் கல்வியும் கமர்கட் கல்வியும் என்ற கட்டுரையில், தங்குதடையின்றி கல்வி பயிலும் சமூகம் ஒருபுறம், கல்வி மறுக்கப்படும், கிடைத்தாலும் ஏற்கத் தயங்கும் மனநிலையில்

தவிக்கும் சமூகம் ஒருபுறம் என நாணயத்தின் இருபக்கங்களாக விளங்கும் நமது கல்வி அமைப்பை கண்முன்னே நிறுத்துகிறார்.
**[http://www.marymartin.com/web?pid=843603](http://www.marymartin.com/web?pid=843603)**
----------------------------------------------------------------------------------------------------
ஆல்ஃபா அப்பா ஒமேகா அம்மா (Masculine sons, Feminine daughters) = ālpā Appā Omēkā Ammā (Masculine sons, Feminine daughters) / நியாண்டர் செல்வன் = Niyāṇṭar Celvaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṉs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
256p.; ills. 22 cm.
9789395272018
350gm.
$ 14.50 / pb

ஆல்ஃபா அப்பா ஒமேகா அம்மா' என்ற வித்தியாசமான தலைப்புடன் வந்திருக்கும் இந்தப் புத்தகம், இதன் உள்ளடக்கத்திலும் வித்தியாசமான ஒன்றே. தமிழ்ச் சமூகத்துக்கு மிக முக்கியமான புத்தகம் ஒன்றை எழுதி இருக்கிறார் நியாண்டர் செல்வன். ஆண்மை என்ற சொல்லும் பெண்மை என்ற சொல்லும் இன்று பொருளை இழந்து நிற்கின்றன. இன்றைய உலகில் பதின்ம வயதுச் சிறுவர்களுக்கு எதைச் சொல்லித் தருவது, எப்படிச் சொல்லித் தருவது என்பது பெற்றோர்களுக்கும் தெரியவில்லை. அறிவுரை சொல்லி வளர்க்க வேண்டிய ஆசிரியர்களோ குழம்பிப் போய் நிற்கிறார்கள். தாங்கள் நம்பும் வாழ்க்கைக் கோட்பாடுகளைத் தங்கள் பிள்ளைகளிடம் புகுத்துவதா அல்லது இன்றைய நவீனக் கோட்பாடுகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதா என்ற கேள்விக்கு இன்று யாரிடமும் பதிலில்லை. இந்நிலையில் இப்புத்தகம் பதின்ம வயதுச் சிறுவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கம் போல விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.
**[http://www.marymartin.com/web?pid=842811](http://www.marymartin.com/web?pid=842811)**
----------------------------------------------------------------------------------------------------

## Performing Arts

களரி அடிமுறை பாகம்-1 = Kaḷari Aṭimurai Pākam-1 / முத்தாலங்குறிச்சி காமராசு = Muttālankuricci Kāmarācu
சென்னை: உலக களரி அடிமுறை கூட்டமைப்பு வெளியீடு= Ulaka Kaḷari Aṭimurai Kūṭṭamaippu Veḷiyīṭu, Ceṉṉai 2022
192p.; ills. 22 cm.
9788195696604
350gm.
$ 15.00 / pb

உலக களரி கூட்டமைப்பு (அமெரிக்கா) சார்பில் எழுத்தாளர் முத்தலாங்குறிச்சி காமராசு எழுதிய களரி அடிமுறை பாகம் 1 புத்தக

வெளியீட்டு விழா சென்னை நந்தனத்தில் உள்ள வெங்கடேஸ்வரா மருத்துமனை வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடந்தது.
**http://www.marymartin.com/web?pid=843528**
---------------------------------------------------------------------------------------------
நிகழ்த்துக் கலைகளில் உடைகளும் ஒப்பனைகளும் (மதுரை மாவட்டம்) = Nikalttuk Kalaikaḷil Uṭaikaḷum Oppaṇaikaḷum (Maturai Māvaṭṭam) / பா. சிங்காரவேலன் = Pā. Cinkāravēlaṉ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṉṉai 2022
xvi, 146p.; 22 cm.
9789393358028
270gm.
$ 8.50 / pb

நாட்டுப்புறவியலில் ஆர்வம் கொண்டு, நாட்டுப்புற இயலாய்வைத் திறம்பட மேற்கொண்டு வருபவர். ஆய்வுத் திட்பமும், நுட்பமும் கொண்டவர். இவர் எழுதிய நிகழ்த்து கலைகளில் உடமைகளும் ஒப்பனைகளும் மதுரை மாவட்டம் என்னும் நூல். நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வு நூலாகும்.
**http://www.marymartin.com/web?pid=841909**
---------------------------------------------------------------------------------------
நாற்காலிக்காரர் = Nārkālikkārar / ந. முத்துசாமி = Na. Muttucāmi
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
54p.; 15 cm.
9788196015374
100gm.
$ 5.00 / pb

மக்கள் இரு குழுக்களாகப் பிரிந்து கோலிக்குண்டு விளையாடுகிறார்கள். சீட்டுக்கட்டு விளையாடுகிறார்கள். இவற்றைக் காட்டிலும் சுவாரஸ்யமான விளையாட்டு தேவைப்படுகிறது. அரசியல் விளையாட்டு விளையாடலாம் எனத் தீர்மானிக்கிறார்கள்! இந்த விளையாட்டின் விதிகள், போக்குகள், விளைவுகள் என்ன? இந்திய அரசியல் யதார்த்தத்தின் அபத்தம் நாடகக் காட்சிகளினூடே தோற்றம் கொள்கிறது. ஆகிவந்த மதிப்பீடுகளையும் இயல்பாகிவிட்ட சமரசங்களையும் நோக்கிக் கேள்வி எழுப்பும் இந்த நாடகம் அரசியல் அபத்தத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. எழுதிப் பல பதிற்றாண்டுகள் கடந்தாலும் இன்றளவும் பொருத்தப்பாடுடைய நாடகம் இது.
843507
-------------------------------------------------------------------------------------------

## Politics

நெருக்கடி நிலை உலகம் தொகுதி-1 = Nerukkaṭi Nilai Ulakam Tokuti-1 / அ. மார்க்ஸ் = A. Marx
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
218p.; 22 cm.
9789393882127
300gm.
$ 13.00 / pb

2001 செப் 11-ஐ அத்தனை எளிதாக யாரும் மறந்துவிட இயலாது. இரட்டைக் கோபுரத் தாக்குதலை ஒட்டி உலகம் மாறிய நாள் அது. அமெரிக்காவின் கீழே உள்ள கியூபப் பகுதியில் அப்போது நிறுவப்பட்ட சிறை முகாம்தான் அது. அங்கு நடந்த சித்திரவதைக் கொடுமைகள் குறித்து கசிந்து வந்த செய்திகள் நம் நெஞ்சை உலுக்கின. ஐயத்திற்கிடமானவர்கள் அங்கே கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். ஆனால் அவர்களை, கைதிகள் அல்லது விசாரணைக் கைதிகள் என்றெல்லாம் வகைப் படுத்துவதில்லை. அவர்கள் தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்று மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டார்கள்.
[http://www.marymartin.com/web?pid=842829](http://www.marymartin.com/web?pid=842829)
---------------------------------------------------------------------------------------------
பொருளற்றதாக்கப்படும் அரசியல் சட்ட உரிமைகள்: நெருக்கடி நிலை உலகம் தொகுதி-3 = Poruḷarratākkappaṭum Araciyal Caṭṭa Urimaikaḷ: Nerukkaṭi Nilai Ulakam Tokuti-3 / அ. மார்க்ஸ் = A. Marx
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
559p.; 22 cm.
9789393882424
600gm.
$ 33.50 / pb

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனித உரிமைகளின் முக்கியத்துவம் உலகெங்கிலும் உணரப்பட்டது. உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் உருவானது. குடிமக்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுதல், எல்லோரும் எல்லாமும் பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெறுதல், ஆகக் கீழே உள்ளவர்களும், எண்ணிக்கையில் சிறிய பிரிவினர்களும் தங்களை மேம்படுத்திக் கொள்ளுதல், தமது நம்பிக்கைகளையும், பண்பாடுகளையும் காத்தல் உட்பட எல்லா உரிமைகளையும் பெறுவதற்கு அரசு பொறுப்பேற்றல் ஆகிய மதிப்பீடுகள் மேலுக்கு வந்தன. இப்படியாக உலக அளவில் மனித உரிமைப் பண்பாடு ஒன்று உருவானது. விடுதலைபெற்ற இந்தியா இதற்குரிய ஒரு அரசியல் சட்டத்தையும் உருவாக்கியது. எனினும் அதே நேரத்தில் இவற்றைப் பொருளற்றதாக்கும் காலனிய ஆள்தூக்கிச் சட்டங்களும் தொடர்ந்தன.
[http://www.marymartin.com/web?pid=842827](http://www.marymartin.com/web?pid=842827)
---------------------------------------------------------------------------------------------
காந்தி ஒரு புதிர்?: காந்தியும் தமிழ்ச் சனாதனிகளும் (தொகுதி-2) = Kānti Oru Putir?: Kāntiyum Tamilc Caṉātaṉikaḷum (Tokuti-2) / அ. மார்க்ஸ் = A. Marx

சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
166p.; 22 cm.
9789391748289
250gm.
$ 10.00 / pb

'காந்தி ஒரு புதிர்' என இத்தொகுப்பு தொடங்குகிறது. ஆம். நாம் அவரைப் புரிந்து கொள்ளாதவரை அவர் நமக்கு ஒரு புதிர்தான். காந்தி வருண முறையை ஆதரித்தாரே என்பர் சிலர். இல்லை அவர் தொடக்கத்தில் ஆதரித்தார். ஆனால் பின்னாளில் அதைக் கைவிட்டார் என்பார்கள் மற்றவர்கள். ஆனால் மிகவும் நெருக்கமாகப் பார்க்கும்போதே அவர் தென் ஆப்ரிகாவில் இருந்த காலத்திலிருந்தே வருண சாதி முறையைக் கடைபிடிக்காதது தெரியும். சாதி வேறுபாடுகள் அற்ற கம்யூன் முறையை அங்கு அவர் செயல்படுத்தினார். மலம் அள்ளுவது உட்பட எல்லோரும் அங்கே எல்லா வேலைகளையும் பகிர்ந்து கொண்டனர். முதலாளிய நவீனத்துவத்தின் மீதான கடும் விமர்சனம், சத்தியாக்கிரகம் எனும் அமைதி வழிப் போராட்ட வடிவம், அகிம்சை எனும் அணுகல்முறை, பன்மைத் தன்மைக்கு அடையாளமான இந்தியா எனும் கருத்தாக்கம் ஆகியவற்றுடன் களம் புகுந்த அவரைக் கண்டு வெள்ளை ஏகாதிபத்தியம் மட்டுமல்ல, "அரசியல் சாதுக்களுக்கான இடமல்ல" என முணுமுணுத்தவர்களும் அதிர்ந்தனர்.
[http://www.marymartin.com/web?pid=841891](http://www.marymartin.com/web?pid=841891)
----------------------------------------------------------------------------------------------------
தமிழர்கள் எதில் குறைந்து போய்விட்டார்கள்? = Tamilarkaḷ Etil Kuraintu Pōyviṭṭārkaḷ? / மணா = Maṇā
திருப்பத்தூர் மாவட்டம்: பரிதி பதிப்பகம் = Pariti Patippakam, Tiruppattūr Māvaṭṭam 2022
151p.; 22 cm.
9789394187368
250gm.
$ 7.50 / pb

இந்தத் திணிப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடந்து, பல உயிர்கள் பறிபோன அதை தமிழ்நாட்டில் இன்றும் தமிழை முழுவதுமாக ஆட்சிமொழியாக்கப் பாடுபட வேண்டியிருக்கிறது. கல்விக்கூடங்களில் கட்டயாப்படுத்தித் திணிக்க வேண்டியிருக்கிறது. கோவில் கருவறைக்குள் வழிபாட்டு மொழியாக்க இன்னும் திணற வேண்டியிருக்கிறது. பொதுவெளியில் தமிழில் உரையாடத் தயங்கும் நிலை
நீடித்துக் கொண்டியிருக்கிறது.
[http://www.marymartin.com/web?pid=843490](http://www.marymartin.com/web?pid=843490)
--------------------------------------------------------------------------------------------
மரண தண்டனை: ஒரு சாவு குலுக்கல் சீட்டு (திருத்தி விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு) நெருக்கடிநிலை உலகம் தொகுதி-2 = Maraṇa Taṇṭaṇai:

Oru Cāvu Kulukkal Cīṭṭu (Tirutti Virivākkappaṭṭa Iraṇṭām Patippu) Nerukkaṭinilai Ulakam Tokuti-2 / அ. மார்க்ஸ் = A. Marx
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṇṇai 2022
147p.; 22 cm.
9789393882165
250gm.
$ 9.00 / pb

2002 குஜராத் படுகொலைகளின்போது நரோடா பாடியா என்னும் இடத்தில் மட்டும் 97 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள். நீதி கேட்டு வழக்குத் தொடர்ந்த டீஸ்டா செடல்வாடும் இதர தோழர்களும் கொலையாளிகளுக்குக் கடும் தண்டனை கோரி வழக்கு நடத்தினர். அப்போதுகூட அந்தக் கொலையாளிகளுக்கு மரண தண்டனை வேண்டாம் எனும் கோரிக்கையையும் அவர்கள் சேர்த்தே முன்வைத்தனர். மானுடத்தை மதிப்பவர்கள் மனித கண்ணியத்தைக் குலைக்கும் மரண தண்டனையை ஏற்பதில்லை. மரண தண்டனைக்கு எதிரான இந்நூல் அது ஏன் கூடாது என்பதற்கு ஏராளமான தரவுகளைத் தருகிறது. 14 ஓய்வுபெற்ற நீதிபதிகள் தாங்கள் பதவியில் இருந்தபோது அளித்த மரண தண்டனைகளில் பல தவறாக அளிக்கப்பட்டன என்பதை, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து விளக்கம் அளித்து மரண தண்டனையைக் குறைக்க வேண்டும் என வேண்டிக்கொண்ட வரலாறும் இங்கு உண்டு. அப்படிச் சுட்டிக்காட்டப்பட்ட வழக்குகளில் இரண்டு பேர் ஏற்கனவே இறந்துபோய் இருந்தனர்.
**http://www.marymartin.com/web?pid=843510**
---------------------------------------------------------------------------------------------
கிழக்கும் மேற்கும் பன்னாட்டு அரசியல் கட்டுரைகள் = Kilakkum Mērkum Paṇṇāṭṭu Araciyal Kaṭṭuraikaḷ / மு. இராமனாதன் = Mu. Irāmaṇātaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
231p.; 22 cm.
9788196015343
360gm.
$ 16.25 / pb

வெளியுறவு சார்ந்து தமிழுக்குக் கிடைத்திருக்கும் அருமையான நூல் இது. சர்வதேச உறவுகளைத் தமிழ்ப் பார்வை கொண்டு பார்ப்பது இதன் தனித்துவம். இளையோருக்கு, குறிப்பாகக் குடிமைப் பணித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நல்ல வாசிப்புக்கான நூல் என்பதைத் தாண்டி, வழிகாட்டியாகவும் அமையும். அணிந்துரையில் சமஸ் சீனாவின் வளர்ச்சியும் வறுமை ஒழிப்பும் முன்னுதாரணம் இல்லாதவை. இவை சீனாவின் ஒரு முகம். யதேச்சதிகாரமும் மேலாதிக்கமும் இன்னொரு முகம். இந்த நூலில் இடம்பெறும் கட்டுரைகள் இந்த இரண்டு முகங்களையும் படம்பிடிக்கின்றன. ஹாங்காங்கின் சுயாட்சியையும் தைவானின் எழுச்சியையும்

கலங்கிக் கிடக்கும் தென் சீனக் கடலையும் வரலாற்றுக்கு முகம்கொடுக்க மறுக்கும் ஜப்பானையும் கிழக்காசியக் கட்டுரைகள் பேசுகின்றன.
http://www.marymartin.com/web?pid=842520
-----------------------------------------------------------------------------------------------
போராட்டங்களின் கதை! = Pōrāṭṭankaḷiṉ Katai! / அ. முத்துக்கிருஷ்ணன் = A. Muttukkiruśṇaṉ
சென்னை: விகடன் பிரசுரம் = Vikaṭaṉ Piracuram, Ceṉṉai 2022
287p.; ills. 24 cm.
9789394265486
620gm.
$ 15.50 / pb

போராட்டம். இந்த வார்த்தை காலம் காலமாக உலகெங்கும் கோடிக்கணக்கான உதடுகள் உச்சரித்துக்கொண்டிருக்கும் வார்த்தை. தனக்கான உரிமை மறுக்கப்படும்போதெல்லம் அதைப் பெற மனிதனுக்கு இயற்கை கொடுத்த ஆயுதம்தான் போராட்டக் குணம். உலகத்தில் பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் காலம்தோறும் நிகழ்ந்துகொண்டே இருக்க போராட்டமே ஆணிவேர். ஆண்டான் அடிமை முறை, முதலாளித்துவத்தின் அடக்குமுறை, தனியுடைமை இவற்றையெல்லாம் நீர்த்துப்போகச் செய்ததே போராட்டம்தான். ஆனால், இவை இன்னும் முற்றுமாக ஒழிந்துவிடவில்லை. வேறு பெயரில் வேறு உருவில் ஆங்காங்கே அவ்வப்போது தோன்றிக்கொண்டுதான் இருக்கின்றன.
http://www.marymartin.com/web?pid=842565
-----------------------------------------------------------------------------------------------
நெடுவழி விளக்குகள்: தலித் ஆளுமைகளும் போராட்டங்களும் = Neṭuvali Viḷakkukaḷ: Talit āḷumaikaḷum Pōrāṭṭankaḷum / ஸ்டாலின் ராஜாங்கம் = Stāliṉ Rājānkam
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
199p.; ills. 22 cm.
9789355231529
300gm.
$ 12.50 / pb

கவனிக்காமல் விடப்பட்ட தலித் பங்களிப்பை விரிவான தகவல்களோடு ஆழமான ஆய்வு நோக்கில் காலப் பொருத்தப்பாட்டுடனும் முன்னிருத்துகிறார் ஸ்டாலின் ராஜாங்கம். பொதுச் சமூகம் மறந்துவிட்ட அல்லது நினைவுகொள்ள மறுக்கிற தலித் ஆளுமைகளின் போராட்டங்கள், கல்விப் பணிகள், செயற்பாடுகளின் விரிவான மதிப்பீடுகளை இந்நூல் கொண்டிருக்கிறது. தலித் கல்வி வரலாறு தொடர்பில் காந்தியின் அரிசன சேவா சங்கம் மதுரைப் பகுதியில் மேற்கொண்ட பணிகளையும், தலித்துகளின் கல்வி

வரலாற்றையும் குறித்த இரு கட்டுரைகள் புதிய செய்திகளை அறியத் தருகின்றன.
**http://www.marymartin.com/web?pid=841907**
----------------------------------------------------------------------------------------------------
ஸ்டான் சாமி ஒரு நிறுவனப் படுகொலை (நெருக்கடி நிலை உலகம் தொகுதி-4) = Sṭāṉ Cāmi Oru Niruvaṇap Paṭukolai (Nerukkaṭi Nilai Ulakam Tokuti-4)/ அ. மார்க்ஸ் = A. Marx
சென்னை: எழுத்து பிரசுரம் = Eluttu Piracuram, Ceṉṉai 2022
79p.; ills. 23 cm.
97893938821341
150gm.
$ 5.00 / pb

அவர் நம் தமிழகத்தில் பிறந்தவர். தமிழர். ஆனால் அவரது கருணை மனம் உலக அளவில் விரிந்திருந்தது. ஒரு வாழ்நாளை எளிய பழங்குடி மக்களுக்காக அந்த மக்களோடு வாழ்ந்தவர். அவரது கடைசி ஆசைதான் நிறைவேறாமல் போய்விட்டது. எந்தப் பழங்குடி மக்களை அவர் நேசித்தாரோ அந்த மக்கள் மத்தியில் வாழ்ந்த அவரின் கடைசி விருப்பு அவர்கள் மத்தியில் சாவதுதான். அதை அவர் வெளிப்படையாகச் சொன்னார். கெஞ்சினார். வெளிப்படையாகக் கார்பொரேட்களின் நலன் காக்கும் அரசும், அவர்களின் கைப்பவைகளாகிப் போன சிறப்பு நீதிமன்றங்களும், அவர்கள் உருவாக்கி வைத்துள்ள கொடுஞ் சட்டங்களும் அவரின் கோரிக்கைகளைக் காலில் போட்டு மிதித்தன. கோரிக்கை நிறைவேறாமலேயே அவர் செத்துப் போனார்.
**http://www.marymartin.com/web?pid=841908**
--------------------------------------------------------------------------------------------------

## Religion - Hinduism

சமயம் வளர்த்த சான்றோர் = Camayam Vaḷartta Cāṉṟōr / கே. சுந்தரராமன் = Kē. Cuntararāmaṉ
சென்னை: தமிழ் திசை = Tamil Ticai, Ceṉṉai 2022
215p.; ills. 24 cm.
450gm.
$ 16.00 / pb

மகான்களின் வழியைப் பின்பற்றி, தூய மனதுடன், நாம் இறைவனை சிக்கெனப் பிடித்து, அவனை நோக்கி பயணிக்க வேண்டும். மகான்களின் வழியில் நடந்து, அவர்களது பெருமைகளை உணர்ந்து கொண்டால், அவர்களின் நடத்தை போன்றே நமது நடத்தையும் அமைந்துவிடும். மனிதரின் வாழ்க்கைப் பயணத்துக்கு உரிய விதிகளாக மகான்களின் வாக்கும் வாழ்வும் விளங்குகின்றன. அவர்களிடம் இருந்து கிடைக்கக் கூடிய படிப்பினைகள், நமது வாழ்வை சிறப்பாக்கும். சூரியன் பகலில் இருளைப் போக்குகிறார். தீபம் இரவில்

இருளைப் போக்குகிறது. அதுபோல மகான்கள் இரவிலும் பகலிலும் நம் அஞ்ஞான இருளைப் போக்குகின்றனர். சூரியன் உப்புக் கடலில் இருந்து உப்பு நீரை எடுத்து, மேகத்தில் வைத்து, நன்னீராக மாற்றி மழையை பெய்விக்கிறார். மகான்கள், கடல் போன்ற நம் சம்பிரதாயங்களில் இருந்து, நமக்குப் புரியாத விஷயங்களை எடுத்துக் கூறி நம்மை தெளிவடையச் செய்கின்றனர். மேகங்கள் மழை பொழிந்து, பள்ளங்களை நிரப்புகின்றன.
http://www.marymartin.com/web?pid=842787
--------------------------------------------------------------------------------
கேரளத்தில் கண்ணகி வழிபாடும் கொடுங்கல்லூர் கோவிலும் = Kēraḷattil Kaṇṇaki Valipāṭum Koṭunkallūr Kōvilum / அ. கா. பெருமாள் = A. Kā. Perumāḷ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṇṇai 2022
211p.; ills. 22 cm.
9788123443799
300gm.
$ 13.50 / pb

கேரளப் பெண் தெய்வங்களின் தோற்றத்தில் தாருகன் கதை இணைந்தது போலவே கண்ணகி கதையும் இணைந்துள்ளது. தாருகனின் இடத்தில் மதுரைப் பாண்டியனையும் காளியின் இடத்தில் கண்ணகியையும் வைத்தும். காளி தாருகனை வதைத்த நிகழ்ச்சியைக் கண்ணகி பாண்டியனைக் கொன்றதற்கு ஒப்பிட்டும் புனையப்பட்ட ‘தோற்றம் பாட்டுக்கள்’ கேரளத்தில் வழக்கில் உள்ளன. தமிழகத்தில் வழிபாடு பெறும் மாரியம்மன், முத்தாரம்மன். ரேணுகாதேவி. துரௌபதை அம்மன் என்னும் பெண் தெய்வங்களைப் போலவே கேரளக் கண்ணகியும் வெப்புநோயுடன் இணைக்கப்படுகிறாள். இது குறித்த கதைகளும் உண்டு. கொடுங்கல்லூர் ‘வசூரிமாலா என்னும் தெய்வத்திற்கு ஒற்றை முலைச்சி என்ற பெயரும் உண்டு திருவனந்தபுரம் ஆற்றுக்கால் கோவில் பத்து நாட்கள் விழாவில் சிலப்பதிகாரக் கதை மலையாள மொழியில் பாடப்படுகிறது. இப்பாடலைத் ‘தோற்றம் பாட்டு” என்றே கூறுகின்றனர். இவ்வாறு ஆற்றுக்கால் பகவதி கோயிலில் பெண்கள் கடல்போல் திரண்டு வந்து பொங்கலிட்டுக் கொண்டாடும் விழா உலகப் புகழ்பெற்றுள்ளது. இந்தப் பகவதியே கண்ணகி என விரிவாக விளக்குகிறது இந்நூல்.
http://www.marymartin.com/web?pid=843618
--------------------------------------------------------------------------------------------
திருப்பாவை எளிய விளக்கம் = Tiruppāvai Eḷiya Viḷakkam / பி.ஏ. கிருஷ்ணன் = Pi. ē. Kiruśṇaṇ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
127p.; ills. 22 cm.
9789355233073
200gm.
$ 8.00 / pb

ஆன்மீகம்

பெரும்பாலான தமிழர்களின் வாழ்வில் மார்கழி மாதத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்திருப்பது ஆண்டாள் எழுதிய திருப்பாவை. பக்தியில் கரைந்து, கேட்பவரையும் கரையவைக்கும் இந்த முப்பது பாடல்களும் மனதைக் கொள்ளைகொள்ளும் கவித்துவமான ஆக்கங்கள். இந்தப் பாடல்களுக்கான எளிய உரையைச் சமகாலத் தமிழ் நடையில் வழங்கியிருக்கிறார் பி.ஏ. கிருஷ்ணன். கிருஷ்ணனின் பல்துறை சார்ந்த அறிவும் தகவல் செறிவும் உரையில் இயல்பாக வெளிப்படுகின்றன. கம்பன், அண்ணங்கராச்சாரியர், திருமூலர், பி.ஸ்ரீ., பாரதி, ஷேக்ஸ்பியர், ஷெல் சில்வர்ஸ்டைன் போன்றோரின் கருத்துகளும் வரிகளும் உரைக்குக் கூடுதல் வண்ணங்களைச் சேர்க்கின்றன. வைணவக் கோட்பாடு, பக்தி ரசம், இலக்கிய நயம், மானுட நேயம் முதலானவையும் உரையில் பொருத்தமான விதத்தில் இடம்பெறுகின்றன. திருப்பாவையின் ஒவ்வொரு பாசுரத்தையும் பற்றிய அருமையான தகவல்களும் ரசனையுடன் கூடிய விளக்கங்களும் இந்த உரையில் இருக்கின்றன. சொல்லுக்குச் சொல் உரை எழுதும் முறையினின்று வேறுபட்டுச் சுவாரஸ்யமான இலக்கிய வகுப்பில் அமர்ந்து பாடம் கேட்டதைப் போன்ற உணர்வைத் தரக்கூடிய உரை இது.
http://www.marymartin.com/web?pid=842786
-----------------------------------------------------------------------------------------
புண்ணியம் தரும்! புற்றுக்கோவில்கள் = Puṇṇiyam Tarum! Purrukkōvilkaḷ / லதானந்த் = Latāṇant
சென்னை: சத்யா எண்டர்பிரைசஸ் = Catyā Eṇṭarpiraicas, Ceṇṇai 2022
80p.; ills. 22 cm.
9789392474118
200gm.
$ 6.00 / pb

ஆன்மீகம்

கற்களாலும், இதர கட்டுமானப் பொருட்களாலும் கட்டப்பட்ட ஆலயங்கள் எத்தனையோ நம் நாட்டில் இருக்கின்றன. ஆனால் பல ஆலயங்களில் புற்றே இறைவன் மற்றும் இறைவியின் திருமேனியாகவும், புற்றே ஆலயமாகவும் விளங்கும் அதி அற்புதத் தலங்களும் இருக்கத்தான் செய்கின்றன. பல இடங்களில் புற்று மண்ணே மருந்தாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சில ஆலயங்களில் வேப்பிலை ஆடை அணிந்தும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.
http://www.marymartin.com/web?pid=842784
-----------------------------------------------------------------------------------------
அர்த்தம் நிறைந்த ஹிந்து தர்மம் (பல கதைகளில் ஒரு விதை) = Arttam Nirainta Hintu Tarmam (Pala Kataikaḷil Oru Vitai) / சாது ஸ்ரீராம் = Cātu Srīrām

சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்., = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
152p.; 22 cm.
9789395272421
250gm.
$ 8.50 / pb

ஹிந்து தர்மம் பெரிய கடலைப் போன்றது. அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரத்தை ஒத்தது. இன்றைய தலைமுறையினர் ஹிந்து தர்மத்தை 'அதுவும் ஒரு மதம்' என்ற அளவில் மட்டுமே புரிந்து வைத்திருக்கிறார்கள். காரணம், ஹிந்து மதத்தின் ஆழமான கருத்துகளை யாரும் அவர்களுக்குச் சொல்லித் தரவில்லை. ஹிந்து மதத்தின் புராணங்கள், வேதங்கள் சொல்லும் அடிப்படை விஷயங்களை மிக எளிமையாக இந்தத் தலைமுறையினருக்கு ஏற்ற வகையில் சுவாரஸ்யமாக விளக்கும் நூல் இது. ஹிந்து தர்மம் என்னும் மாபெரும் கடலின் ஒரு துளி இந்தப் புத்தகம். இத்துளியை நீங்கள் புரிந்துகொண்டால், மாபெரும் கடலை முழுவதுமாகப் புரிந்துகொள்ளும் அடுத்த அடியை எடுத்து வைக்கலாம்.
**http://www.marymartin.com/web?pid=842782**
---------------------------------------------------------------------------------------------------
ஆணவக் கொலைச் சாமிகளும் பெருமிதக் கொலை அம்மன்களும் = āṇavak Kolaic Cāmikaḷum Perumitak Kolai Ammaṉkaḷum / ஆ. சிவசுப்பிரமணியன் = ā. Civacuppiramaṇiyaṉ
நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம் = Kālaccuvaṭu Patippakam, Nākarkōvil 2022
95p.; 22 cm.
9789355230737
200gm.
$ 5.50 / pb

அகால மரணமடைந்த ஒரு பெண்ணோ ஆணோ தெய்வமாகி வழிபாடு பெறுவது ஒரு மரபு. இந்த மரணம் கொலை, விபத்து, தற்கொலை என்னும் காரணங்களால் அமையலாம். சாதி மீறிய காதல் திருமணங்கள் தொடர்பான கொலையைச் சாதி ஆணவக் கொலை என்று சொல்வது இன்று பொது வழக்காக உள்ளது. ஆணவக் கொலைக்குப் பின்னால் பணம், அதிகாரம், சாதி என்பன மட்டுமின்றிக் குடும்பப் பெருமிதமும் கொலைகளுக்குத் தூண்டுதலாக அமைகிறது. இப்படிப்பட்ட இறப்புகளுக்குப் பின் தெய்வமாக்கப்பட்ட பதினான்கு பேரின் கதைகள்தான் இந்த நூல்; இதைப் புலனாய்வு அறிக்கை என்றும் கூறலாம். கதைகளை மட்டும் சொல்லாமல் அவற்றின் குற்றப் பின்னணி, தெய்வமாக்கப்பட்ட பின் உருவான வழிபாட்டு முறை என எல்லாவற்றையும் நூலாசிரியர் ஆழமாகப் பதிவுசெய்துள்ளார்.
**http://www.marymartin.com/web?pid=842819**
---------------------------------------------------------------------------------------------------
கருட புராணம் = Karuṭa Purāṇam / ராஜி ரகுநாதன் = Rāji Rakunātaṉ

சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்., = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
168p.; 22 cm.
9789395272155
200gm.
$ 9.50 / pb

அறிவிற் சிறந்த மகாத்மாக்களே! பூமியில் இருந்த போது நரகத்திற்கு அஞ்சி, நற்செயல்களைப்புரிந்தீர்கள், அதனால்தான் மானுடரான நீங்கள் தேவர்கள் ஆனீர்கள். கிடைத்தற்கரிய மானுடப்பிறவி எடுத்தும்கூட தேவர்கள் ஆவதற்கு முயற்சிக்காத வர்கள் நரகத்தில் விழுவார்கள். நீங்களோ நற்செயல் புரிந்து தேவர்கள் ஆவதற்கு முயற்சித்தீர்கள், பாவிகள், நிலையற்ற உடலை நிலையானது என்று பிரமையாக எண்ணி, பாவங்கள் செய்து. நரகத்தில் உழல்கின்றனர். நீங்களோ நிலைத்த சுகமான தேவநிலைக்காக, நிலையற்ற உடலுக்கான சுகங்களைத் துறந்தீர்கள், காலையில் சமைத்தால் மாலையில் பாழாய்ப் போகும் அன்னத்தைப் புசிக்கும் மானுட உடல் மட்டும் பாழாய்ப் போகாமல் இருக்குமா என்ன? அதனால் உடலோடு இருக்கும்போதே. கவளமாக நற்செயல் புரிந்து, தர்ம வழியில் நடந்து நரக வேதளையிலிருந்து காந்துக் கொள்ள வேண்டும். இறைவன் அளித்த புலன்கள், செல்வம், அறிவு அனைத்தையும் நற்செயல்களுக்காகப் பயன்படுத்தினீர்கள். அதனால் புண்ணியமான இந்த இடத்தை வந்தடைத்தீர்கள். நீங்கள் இன்னும் சிறந்த புண்ணிய லோகங்களுக்குச் செல்வீர்கள். வழியில் அனைவரும் உங்களை வழிபடுவார்கள்.
**http://www.marymartin.com/web?pid=843007**
------------------------------------------------------------------------------------------------
தேசியத் தமிழ் முருகன் = Tēciyat Tamil Murukaṉ / பத்மன் = Patmaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட். , = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
199p.; 22 cm.
9789395272285
300gm.
$ 12.50 / pb

இவ்வுலகில் முருகக் கடவுளின் திருத்தலங்கள் எங்கெல்லாம் அமைந்திருக்கின்றன, அதன் சிறப்பு, விசேஷ காலங்களில் அந்தக் கோயில்களில் நடைபெறும் விழாக்கள், அந்தக் கோயில்களில் முருகனின் வரலாறு, அவனுடைய லீலைகள், அண்டை நாடுகளிலும் ஆலயங்களில் இருந்துகொண்டு எப்படி அவன் அருள்பாலிக்கிறான்; தமிழகத்தில் சீர்மிகுந்து காணப்படும் அவனுக்குரிய சிறப்பான இடங்கள் எவை என்பன போன்ற வரலாற்றுத் தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. தென்னகத்தில் தமிழ்க்கடவுளாக வணங்கப்படுகிறான் முருகன். வடக்கே ஸ்கந்தனாக அறியப்படுகிறான் அந்த அழகன். தமிழர்கள் எங்கெல்லாம்

பரவியுள்ளார்களோ அந்த நாடுகளில் எல்லாம் தன் அருட்பார்வை சாம்ராஜ்யத்தைப் பரவவிட்டுள்ள முருகக் கடவுளைப் பற்றி, நமக்குத் தெரியாத புதிய விஷயங்களையும், பல தலங்களைப் பற்றிய சுவையான தகவல்களையும் இந்த நூல் மூலம் அறியலாம். முருகன் உலகக் கடவுள் என்பதைப் பல தரவுகள் மூலம் உறுதி செய்கிறார் ஆசிரியர் பத்மன்.
**http://www.marymartin.com/web?pid=843219**
----------------------------------------------------------------------------------------------------
பழனியாண்டவர் காவடிப் பாட்டு (ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பிக்கப் பெற்றது) = Palaṇiyāṇṭavar Kāvaṭip Pāṭṭu (ōlaiccuvaṭiyiliruntu Patippikkap Perratu) / பெ. சுப்பிரமணியன் = Pe. Cuppiramaṇiyaṇ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
viii, 311p.; 22 cm.
450gm.
$ 16.50 / pb

"பழனி முருகன் கோவிலும் தீர்த்தமும்" (1994), "பழனி முருகன் கோவில் வழிபாடும் திருவிழாக்களும்" (2004) "பழனி முருகன் கோயிலும் பாதயாத்திரையும்" (2009) "பழனியாண்டவர் காவடிப்பாட்டு" எனும் இந்நூல், பழனிமுருகன்கோவில் பற்றிய இவரது நான்காவது நூலாகும்.
**http://www.marymartin.com/web?pid=842774**
------------------------------------------------------------------------------------
திருமந்திரத்தில் மனிதவள மேம்பாடு = Tirumantirattil Maṇitavaḷa Mēmpāṭu / பா. அன்பழகன் = Pā. Aṇpalakaṇ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
xx, 277p.; 22 cm.
450gm.
$ 15.00 / pb

மனித வாழ்க்கைக்கான அவசியம், அதை அடையும் வழிமுறைகளை திருமூலர் வகுத்த திருமந்திரத்தின் வாயிலாக விளக்கியும், அவற்றைப் பின்பற்றுவதால் ஏற்படும் நலன்களை நுட்பமாகவும் ஆராய்கிறது இந்த நூல். இயந்திரத்தனமாகிவிட்ட நவ நாகரிக வாழ்க்கை முறையில் மனித வளம் என்பது பொருளாதார ரீதியில் வாழ்க்கையை மேம்படுத்துவது என்று மேலோட்டமாகப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால், மனித வளம் என்பதை உடல் நலம், மன நலம், இறை நலம், சமூக நலம் ஆகிய தலைப்புகளில் திருமூலரின் திருமந்திரத்தை முதன்மை ஆதாரமாகக் கொண்டு நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய மரபில் திருமந்திரத்தின் பங்கு; மனித உடல் குறித்து, கருவிலிருந்து உடலின் அழிவு வரை திருமந்திரம் பதிவு செய்துள்ள கருத்துகள்; உடலோடு கூடிய உயிரின் சிறப்பு; உயிரும் உடலும் சேர்ந்து இறையை நாட வேண்டிய அவசியம்; ஒட்டுமொத்த சமூக மேம்பாடே மனித குல மேம்பாடு ஆகியவற்றை திருமந்திரம் மூலமாக ஆராய்வதோடு மட்டுமல்லாது அதிலுள்ள மனிதவள மேம்பாட்டு கருத்துகளையும் இந்நூல் ஆராய்கிறது.

ஆங்காங்கே தத்துவங்கள், தரிசனங்கள், வேத உபநிஷத்துகள் போன்றவற்றையும் ஒப்புநோக்கி ஆய்வுக்கு வலு சேர்க்கிறது. இறை நிந்தனை கூடாது என்பதை திருமந்திரமானது சமூக நலன்களில் ஒன்றாகவே வைக்கிறது என்பதை இந்நூல் எடுத்தியம்புகிறது. உடல், மனம், இறை சிந்தனைகளோடு திருமந்திரத்திலுள்ள சமூக நலச் சிந்தனையும், அவற்றை ஆய்வுசெய்து வெளிக்கொணர்ந்திருப்பதும் இந்த நூலின் சிறப்பு.
**http://www.marymartin.com/web?pid=842776**
-----------------------------------------------------------------------------------
கஷ்டங்கள் தீர்க்கும் ஆலயங்கள் = Kaśṭankaḷ Tīrkkum ālayankaḷ / ஜி. மகேஷ் = Ji. Makēś
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṉ Patippakam, Ceṉṉai 2023
186p.; ills. 23 cm.
9788195630431
400gm.
$ 11.25 / pb

இறைவன் பொதுவாகவே அனைத்துக் கஷ்டங்களுக்கும் தீர்வு தருபவன் என்றாலும், சில ஆலயங்களில் சில கஷ்டங்களைத் தீர்ப்பதில் நிபுணனாக இருக்கிறான். இந்தப் புத்தகத்தில் பல கஷ்டங்களுக்கு தீர்வாகும் கோயில்கள் குறித்த செய்திகள், விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அந்தந்தக் கோயில்களுக்குச் சென்று இறைவன் அருளால் உங்கள் கஷ்டங்கள் அனைத்தும் தீர வேண்டும் என்பதே இப்புத்தகத்தின் நோக்கம்.
**http://www.marymartin.com/web?pid=842778**
-----------------------------------------------------------------------------------
108 திவ்ய தேசங்கள்-சுவாரஸ்யமான சுற்றுலா = 108 Tivya Tēcankaḷ-Cuvārasyamāṉa Curruḷā / ஜெயராமன் ரகுநாதன் = Jeyarāmaṉ Rakunātaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṉṉai 2022
272p.; ills. 22 cm.
9789395272292
400gm.
$ 15.00 / pb

108 திவ்ய தேசங்களையும் அறிமுகம் செய்யும் இனிமையான நூல். உங்கள் நண்பருடன் திவ்ய தேசங்களைப் பார்க்கப் போனால் எப்படி இருக்குமோ அப்படி ஓர் அனுபவத்தைத் தருகிறது இந்தப் புத்தகம். ஜெயராமன் ரகுநாதன் திவ்ய தேசங்களின் தல வரலாற்றையும் அங்கே வீற்றிருக்கும் கடவுளையும் தன் பாணியில் அறிமுகம் செய்கிறார். தேவையான இடங்களில் பாசுரத்தின் குறிப்புகளுடன், மற்ற குறிப்புகளும் உண்டு.
மனதைக் கொள்ளை கொள்ளும் ஒரு பயணத்துக்குத் தயாராகுங்கள் இந்த நூலுடன்!
**http://www.marymartin.com/web?pid=842780**

------------------------------------------------------------------------------------------
அனந்தனுக்கு ஆயிரம் நாமங்கள் (பாகம்-2) = Aṇantaṇukku āyiram Nāmankaḷ (Pākam-2) / உ. வே. வேங்கடேஷ் = U. Vē. Vēnkaṭēś
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Ceṇṇai 2023
328p.; 22 cm.
9788195630448
450gm.
$ 12.50 / pb

வேதங்களைத் தொகுத்தவரும், மகாபாரதம், பிரம்ம சூத்திரம், பதினெட்டுப் புராணங்கள் உள்ளிட்டவற்றை அருளியவருமான வேத வியாசர், பல முனிவர்கள் இறைவனைப் புகழ்வதற்காகப் பயன்படுத்திய இறைவனின் திருப்பெயர்களுள் ஆயிரம் திருப்பெயர்களைத் தொகுத்து, அதை ஒரு துதியாக வழங்கினார்.
http://www.marymartin.com/web?pid=842762
-------------------------------------------------------------------------------------------------
அனந்தனுக்கு ஆயிரம் நாமங்கள் (பாகம்-3) = Aṇantaṇukku āyiram Nāmankaḷ (Pākam-3) / உ. வே. வேங்கடேஷ் = U. Vē. Vēnkaṭēś
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Ceṇṇai 2023
331p.; 22 cm.
9788195630479
450gm.
$ 12.50 / pb

வேதங்களைத் தொகுத்தவரும், மகாபாரதம், பிரம்ம சூத்திரம், பதினெட்டுப் புராணங்கள் உள்ளிட்டவற்றை அருளியவருமான வேத வியாசர், பல முனிவர்கள் இறைவனைப் புகழ்வதற்காகப் பயன்படுத்திய இறைவனின் திருப்பெயர்களுள் ஆயிரம் திருப்பெயர்களைத் தொகுத்து, அதை ஒரு துதியாக வழங்கினார்.
http://www.marymartin.com/web?pid=842764
-------------------------------------------------------------------------------------------------
சங்கத் தமிழ்மாலை: ஆண்டாளின் திருப்பாவை விளக்கவுரை = Cankat Tamilmālai: āṇṭāḷiṇ Tiruppāvai Viḷakkavurai / கு. சடகோபன் = Ku. Caṭakōpaṇ
சென்னை: காவ்யா வெளியீடு = Kāvyā Veḷiyīṭu, Ceṇṇai 2022
xiv, 407p.; 22 cm.
9789335811000
550gm.
$ 21.00 / pb

சங்கத் தமிழ்மாலை என ஆண்டாள் நாச்சியார் பெயர் சூட்டியுள்ள தேன்பிலிற்றும் திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதிற்கும் தெள்ளியதோர் விளக்கவுரை எனும் அரிய நூலைப் படைத்துத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு நல்கியுள்ளார். நாவலர் திரு.கு. சடகோபன் அவர்கள்.
http://www.marymartin.com/web?pid=842768
-------------------------------------------------------------------------------------

அழகர் கோயில் = Alakar Kōyil / தொ. பரமசிவன் = To. Paramacivaṇ
சென்னை: ஶ்ரீசெண்பகா பதிப்பகம் = Srīceṇpakā Patippakam, Ceṇṇai 2023
438p.; ills. 22 cm.
9788196085537
500gm.
$ 17.50 / pb

மண்ணின் வரலாறும், பண்பாட்டின் வரலாறும் இணைந்ததே கோயில் வரலாறு. ஆனால் பல பெருங்கோயில்களின் வரலாறுகள் புராணங்கள் புனைந்ததாக மாறி தெய்விகத் தன்மை அடைந்துவிட்டன.
கோயில் ஆய்வுகளுக்கு என்று ஒரு செக்குமாட்டுத் தடம் உண்டு. தல புராணத்திலிருந்து தொடங்கி, சில ஐதீகங்களைப் பட்டியலிட்டு, கோயில் கட்டடத்தின் அமைப்பை விவரிப்பது என்ற சட்டகத்தில் அமைந்துள்ள ஏராளமான கோயில், ஆய்வுகள் அந்தந்தக் கோயிலைப் பற்றி அறியும் தம்முடைய பக்தர்களுக்கு மட்டுமே ஆர்வமூட்டக் கூடியவை. 'அழகர் கோயில்' நூலோ, தலைப்பு ஏற்படுத்தும் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கக் கூடியது. இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள் மட்டுமல்லாமல், நாட்டார் வழக்காறுகள், கள ஆய்வுச் செய்திகள் முதலானவற்றின் அடிப்படையில், குடியிருப்புகளுக்கு வெளியே தனித்து நிற்குமொரு சமூகப் பண்பாட்டு நிறுவனத்திற்கும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் சாதிகள் இடையிலான உறவைப் புதிய கோணத்தில் ஆராய்கின்றது. நூலின் மைய இழைக்கு அரணாகவும் இடைப்பிறவரலாகவும் ஆங்காங்கே இறைந்து கிடக்கும் நுட்பங்களும் இடை வெட்டுகளும் நூலுக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்க்கின்றன.
**http://www.marymartin.com/web?pid=842770**
--------------------------------------------------------------------------------
தேர்: அரிய தகவல்கள் = Tēr: Ariya Takavalkaḷ / எ. பி. ஜனகராஜா = E. Pi. Jaṇakarājā
சென்னை: கங்கை புத்தக நிலையம் = Kankai Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
xvii, 414p.; ills. 22 cm.
500gm.
$ 20.00 / pb

'தேரு வருதே' என்று கூறி மகிழ்வர் சிறுவர். 'தேரு வருதே' என்ற ஒலி கேட்டதும் வாசலுக்கு விரைவோர் வளர்ந்தவர்கள்; வடம் பிடிக்க ஓடுவர். அதுபோலவே இந்த புத்தகத் தேரை வரவேற்று, வடம் பிடித்தலாகிய ஆதரவை வாசகர்கள் நல்கி, இலக்கிய உலகில் பொருத்தமான இடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள் என்று நம்புகிறோம். இந்நூல் பரிசுகளும் பாராட்டும் பெறும் வாய்ப்பு உள்ளது.
**http://www.marymartin.com/web?pid=842772**
--------------------------------------------------------------------------------
தில்லைத்திருக்கோயில் = Tillaittirukkōyil / இளங்கோவன் = Iḷankōvaṇ
சென்னை: பென் அறக்கட்டளை = Peṇ Arakkaṭṭaḷai, Ceṇṇai 2022
474p.; 22 cm.

650gm.
$ 10.00 / pb

கோயில் என்பதன் பொருள் தொடங்கி, கோயிலில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் வரை மொத்தமாய் தில்லைத் திருக்கோயிலுள் பக்திப் பெருக்குடன் சென்று, கண்குளிர வழிபட்டு காலாற திருக்கோயிலை வலம் வந்த உணர்வை இந்நூலில் பெற முடிந்தது.
http://www.marymartin.com/web?pid=842767
-----------------------------------------------------------------------------------------------
சுத்த சைவம்: வேத, ஆகம மரபுகளும் பன்னிரு திருமுறை, மெய்கண்ட சாத்திர உண்மைகளும் கூறும் வர்ணாசிரமம் நீங்கிய நன்மை பெருகு அருள்நெறி = Cutta Caivam: Vēta ākama Marapukaḷum Paṉṉiru Tirumurai, Mauykaṇṭa Cāttira Uṇmaikaḷum Kūrum Varṇāciramam Nīnkiya Naṇmai Peruku Aruḷneri / செ. முருகவேள் = Ce. Murukavēḷ
திருச்சிராப்பள்ளி: புனிதர் பேரவை வெளியீடு = Puṇitar Pēravai Veḷiyīṭu, Tiruccirāppaḷḷi 2022
528p.; 23 cm.
9789356802148
900gm.
$ 42.50 / hb

ஆன்மீகம்

அன்று வணிகத்தின் ஊடாக தென்னகத்தில் மேல்தட்டு மக்களின் சமயமாக வளர்ந்து, பின்னர் அரசின் ஆதரவு பெற்றுச் சமணமும் பௌத்தமும் வளர்ந்த காலத்தில், வேதம் அபௌருஷேயம் என்று நெறி பிறண்டும் நின்றோருக்கு, வேத காரணனும், வேத நாயகனும் சிவபெருமானே என்றும், செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க் கந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே என்று தெளிவு தந்தது.
http://www.marymartin.com/web?pid=842759
---------------------------------------------------------------------------------------------
ஆழி பெரிது: வேதப் பண்பாடு குறித்த உண்மையான தேடல் = āli Peritu: Vētap Paṇpāṭu Kuritta Uṇmaiyāṇa Tēṭal / அரவிந்தன் நீலகண்டன் = Aravintaṇ Nīlakaṇṭaṉ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்., = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
277p.; 22 cm.
9789395272094
400gm.
$ 15.00 / pb

அரவிந்தன் நீலகண்டன் எழுதியிருக்கும் இந்த நூல், ஹிந்து மரபின் பரிணாம வரலாற்றின் ஒரு தொன்மையான, மர்மமான, ஆனால் மிக முக்கியமான தருணத்தை விளக்குகிறது. * வேதங்கள், கைபர் போலன் கணவாய் வழி வந்த ஆரியர்களின் இயற்கை வழிபாட்டுப் பாடல்கள் மட்டுமே! * சோம பானம் என்பது சாராயம்! * திராவிடர்களை

ஆரியர்கள் வெற்றிகொண்டார்கள்! * சூத்திரர்களும் தலித்துகளும் அடிமைப்படுத்தப்பட்ட பூர்விகக் குடிகள்! * வேதம் என்பது பிராமணர்களுக்கு மட்டுமே உரிமையானது! இவை போன்ற போலிக் கட்டுமானங்களை உடைக்கிறது இந்த நூல். * வேத காலம் எப்படி இருந்தது? * வேத கால முனிவர்களது சிந்தனையின் வீச்சும் ஆழமும் என்ன? * வேதங்கள் பெண்ணடிமை முறையைப் பேசுகின்றனவா? * வேதப் பண்பாட்டுக்கு இன்று என்ன இடம்? இவை போன்ற கேள்விகளுக்கான விடைகளையும் அளிக்கிறது. ஆனால் வேத ரிஷிகளுக்கு க்வாண்டம் பிசிக்ஸ் தெரிந்திருந்தது, வேத காலத்தில் ஆகாய விமானம் இருந்தது என்பன போன்ற அபத்த அசட்டுத்தனங்களுக்கு இந்த நூலில் இடமில்லை
**http://www.marymartin.com/web?pid=842913**
----------------------------------------------------------------------------------------------------
தமிழன் வழிபாடு (பொ. ஆ. முன் 400 ஆண்டுகள் முதல் இன்று வரை = Tamilaṉ Valipāṭu (Po. ā. Muṉ 400 āṇṭukaḷ Mutal Iṉru Varai) / அ. ராஜா தமிழ்மாறன் = A. Rājā Tamilmāraṉ
சென்னை: எழிலினி பதிப்பகம் = Eliliṇi Patippakam, Ceṉṉai 2023
xx, ill.; 170p; 22cm.
9789387681828
300gm.
$ 10.00 / pb

கடல் மூழ்கி முத்தெடுப்பது போல, மண் குடைந்து பொன் எடுப்பது போல தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்து ஆய்வு செய்து பல பண்டைய பண்பாட்டுச் செய்திகளை அள்ளித்தருகிறார்.
தாய்த் தெய்வ வழிபாடு. சேயோன் பற்றிய விரிவான செய்திகள் மிகப் பயன் உடையவை. அதிகம் வரலாற்று நூல்களில் பேசப்படாத நடுகல், ஆசீவகம் தொடர்பான செய்திகள் அருமை.
**http://www.marymartin.com/web?pid=841941**
---------------------------------------------------------------------------------------------
தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும் = Teyvankaḷum Paṇpāṭṭu Acaivukaḷum / தொ. பரமசிவன் = To. Paramacivaṉ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṉṉai 2022
200p.; 22 cm.
9788123442990
300gm.
$ 10.75 / pb
**http://www.marymartin.com/web?pid=841904**
------------------------------------------------------------------------------------
பண்பாட்டின் வாழ்வியல் = Paṇpāṭṭiṉ Vālviyal / தொ. பரமசிவன் = To. Paramacivaṉ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் = Niyū Ceñcuri Puk Havus (Pi) Liṭ., Ceṉṉai 2022
190p.; 22 cm.
9788123442877

300gm.
$ 10.75 / pb

தமிழர்தம் நெடிய வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த சடங்குகள், வழிபாடு, திருவிழாக்கள், உணவு, விளையாட்டு, வீடு இன்னபிறவற்றைப் பற்றிய காத்திரமான ஆய்வுகளையும் புதிய பல தரவுகளையும் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்கிய பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்களால் அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.
http://www.marymartin.com/web?pid=841899
-----------------------------------------------------------------------------------------
தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும் = Tamilar Uravu Muraikaḷum Camayamum Valipāṭum / தொ பரமசிவன் = To. Paramacivaṇ
சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் = Niyū Ceñcuri Puk Havus, Ceṇṇai 2022
116p.; 21cm.
9788123442617
200gm.
$ 7.00 / pb

தமிழர் சமயம், வழிபாடு, உறவு முறைகள் குறித்து எழுதப்பட்டுள்ள சுவையான கட்டுரைகளின் தொகுப்பு நூல். பேராசிரியர் நா. வானமாமலை பற்றிய விபரமும் தனியாக இடம் பெற்று உள்ளது. மொத்தம், 27 தலைப்புகளில் தகவல்கள் உள்ளன. முதலில், 'பெண் பூசாரிகளும் தாய் தெய்வ வழிபாடுகளும்' என்ற தலைப்பில் தகவல்கள் உள்ளன.
http://www.marymartin.com/web?pid=841950
-----------------------------------------------------------------------------------------------

## Religion-Islam

இஸ்லாமிய ஃபக்கீர்கள் = Islāmiya Pakkīrkaḷ / வ. ரஹ்மத்துல்லா = Va. Rahmattullā
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
147p.; 22 cm.
9789391949549
250gm.
$ 8.50 / pb

இந்நூல் இஸ்லாமியத் தளத்தில் நின்று முந்தைய வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஏழ்மையும் எளிமையும் நிறைந்த இஸ்லாமிய இரவலர்களாகிய ஃபக்கீர்களை அடையாளம் காட்டுவதுடன், நெருக்களில் ஒரு கலைஞனுக்குரிய தோற்றத்துடன் சென்று, அவர்கள்தாம் பாடுகின்ற சமயநெறிப் பாடல்களின் தன்மையை விளக்க முற்படுவதும் தொடக்க காலத்தில் வாழ்ந்த ஃபக்கீர்களின் வாழ்வியல் நிலை. (வாழ்க்கை நெறி).
http://www.marymartin.com/web?pid=843536

------------------------------------------------------------------------------------------------
வேதவனம்: தேர்ந்தெடுக்கப்பட்ட ரிக், யஜூர், சாம, அதர்வண, உபநிடத பாடல்கள் = Vētavaṇam: Tērnteṭukkappaṭṭa Rik, Yajūr, Cāma, Atarvaṇa, Upaniṭata Pāṭalkaḷ / எஸ்ஸார்சி = Essārci
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṇṇai 2022
288p.; 22 cm.
400gm.
$ 15.00 / pb

எஸ்ஸார்சியின் எளிய வசன கவிதையின் மூலம், வேத கால வாழ்க்கையைப் பற்றி சம்ஸ்கிருதம் தெரியாதவர்களும் புரிந்துகொள்ள முடிகிறது.

இக்காலத்தில் விவாதிக்கப்படுகின்ற பல பாலியல் சம்பந்தமான சர்ச்சைகளும், அக்காலத்தில் இருந்திருக்கின்றன. யமனுக்கும், அவனுடைய சகோதரியாகிய யமிக்குமிடையே நிகழும் சம்வாதம் மிக சுவாரஸ்யம் வாய்ந்தது. எஸ்ஸார்சி அதை அழகாக மொழியாக்கம் செய்திருக்கிறார்.
வேதங்களில் இக்காலத்தில் முற்போக்குக்கு அடையாளமாகக் கருதப்படும் பல கருத்துக்கள் நடைமுறையில் இருந்திருக்கின்றன. இவற்றைப் படித்தால்தான் நமக்கு இதில் நமக்காக எத்தனை ஆச்சர்யங்கள் காத்திருக்கின்றன என்பது புரியும்.
**http://www.marymartin.com/web?pid=843530**
------------------------------------------------------------------------------------------------
எந்த மாதம்? எந்த பண்டிகை? (ஒரு பண்டிகைக்குள் இத்தனை விஷயங்களா) = Enta Mātam? Enta Paṇṭikai? (Oru Paṇṭikaikkuḷ Ittaṇai Viśayankaḷā) / எஸ். கோகுலாச்சாரி = Es. Kōkulāccāri
சென்னை: சூரியன் பதிப்பகம் = Cūriyaṇ Patippakam, Ceṇṇai 2023
317p.; 22 cm.
9788195630493
450gm.
$ 11.50 / pb

சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரைக்கும் உள்ள பண்டிகைகளில், விரதங்களில், உற்சவங்களில் உள்ள, நாம் அனைவரும் அவசியம் அறிய வேண்டிய அற்புதமான, வியக்கத் தக்க செய்திகளை, பல்வேறு தலைப்புகளில் இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கிறோம்.
**http://www.marymartin.com/web?pid=843486**
---------------------------------------------------------------------------------------------

## Sociology / Cultural Studies

தமிழர் நாகரிகமும் தமிழ்மொழி வரலாறும் – 10 தொகுதிகள் = Tamilar Nākarikamum Tamilmoli Varalārum – 10 Tokutikaḷ / அரங்க. இராமலிங்கம் = Aranka. Irāmalinkam
சென்னை: வர்த்தமானன் பதிப்பகம் = Varttamāṇaṇ Patippakam, Ceṇṇai 2021
10 Vols. 22 cm.
4200gm
$ 140.00 / pb

தொகுதி 1-இல் (1) தமிழக ஆற்றங்கரை நாகரிகம் I - டாக்டர் மா. இராசமாணிக்கனார் (காவிரி, வைகை, பாலாறு, தென்பெண்ணை, பொருநை)
தொகுதி 2-இல் (2) தமிழக ஆற்றங்கரை நாகரிகம் II - பேராசிரியர் டாக்டர் சுந்தரசண்முகனார் (கெடிலம், காவிரி)
தொகுதி 3-இல் (3) தமிழர்கள் இல்வாழ்க்கை - டாக்டர் மா. இராசமாணிக்கனார்
தொகுதி 4-இல்(4) தமிழர் வாழ்வு - பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
தொகுதி 5-இல் (5) வெளிநாட்டு வாணிபம் - புலவர் கா. கோவிந்தன்
தொகுதி 6-இல் (6) தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - புலவர் கோவிந்தன்
தொகுதி 7-இல் (7) தமிழின் சிறப்பு - முத்தமிழ் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம்
தொகுதி 8-இல் (8) தமிழக ஆட்சி - டாக்டர் மா. இராசமாணிக்கனார்
தொகுதி 9-இல் (9) சங்ககாலச் சான்றோர்கள் - பேராசிரியர் டாக்டர்
தொகுதி 10-இல் ந. சஞ்சீவி, (10) சங்ககாலத் தமிழ் மக்கள் - பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்.
**http://www.marymartin.com/web?pid=843617**
------------------------------------------------------------------------------------------
பண்பாட்டின் பலகணி: நீத்தார் சடங்குகள்-கதைகள்-பண்டிகைகள் = Paṇpāṭṭiṇ Palakaṇi: Nīttār Caṭankukaḷ-Kataikaḷ-Paṇṭikaikaḷ / ஸ்டாலின் ராஜாங்கம் = Sṭāliṇ Rājānkam
சென்னை: பரிசல் புத்தக நிலையம் = Parical Puttaka Nilaiyam, Ceṇṇai 2022
136P.; 22 cm.
9789391949693
250gm.
$ 9.00 / pb

வெகுமக்களால் பின்பற்றப்படும் பண்டிகைகள், திருவிழாக்கள், வழிபாடுகள் ஆகியவற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கும் இந்நூல். அவற்றின் அடியோட்டமாக நித்தார் நினைவு கூரல்கள் இருப்பதை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.
**http://www.marymartin.com/web?pid=843580**
------------------------------------------------------------------------------------------
கால்களின் கேள்விகள்: மாற்றுத்திறனாளிகள் நவீன சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் = Kālkaḷiṇ Kēḷvikaḷ: Mārruttiraṇāḷikaḷ Navīṇa Camūkattil Etirkoḷḷum Cavālkaḷ / ஆர். அபிலாஷ் = ār. Apilāś

சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṉṉai 2022
183p.; 22 cm.
9789393650542
300gm.
$ 11.50 / pb

மாற்றுத்திறனாளிகளை அவர்களுடைய உடலைக் கடந்து அவர்களுடைய தன்னிலையை, உளவியலை, சமூகம், உறவு, சட்டம், ஊடகங்கள் சார்ந்து எழும் பிரச்சினைகளை, அவர்களுடைய உலகில் கடவுளுக்கும் மதத்துக்கும் அறத்துக்குமுள்ள இடத்தை அறிமுகப்படுத்துகிற இது தமிழில் இவ்வகைமையில் வெளியாகும் முதல் நூலாகும். இது ஒரு கோட்பாட்டு நூல் அல்ல. மாறாக மாற்றுத்திறனாளி அல்லாத பொதுமக்களை நோக்கி எளிமையாக உரையாட முயலும் வெகுஜன நூலாகும். மற்றமையைப் புரிந்து கொள்ளுதல் என்பதே சிந்தனை மரபின் முக்கிய நோக்கம். மற்றமையாக தம்மை மாற்றிக் கொள்ளுதலே ஒரு உன்னதமான ஆன்மீகப் பயிற்சி. நவீன உலகில் மாற்றுத்திறனாளிகளே முதன்மையான மற்றமை என்பதால் இது பொதுமக்கள் ஒவ்வொருவரும் படித்திருக்க வேண்டிய, தம் வீட்டில் வைத்திருக்க வேண்டிய நூலாகிறது.
http://www.marymartin.com/web?pid=842524
-----------------------------------------------------------------------------------------------
தவழ்ந்து வரும் தாமிரபரணி = Tavalntu Varum Tāmiraparaṇi /
முத்தாலங்குறிச்சி காமராசு = Muttālankuricci Kāmarācu
தூத்துக்குடி: பொன்சொர்ணா வெளியீடு = Poṇcorṇā Veḷiyīṭu, Tūttukkuṭi 2022
512p.; ills. 22 cm.
9788195702053
650gm.
$ 25.00 / pb

தாமிரபரணி நதி மேற்கு மலைத் தொடரில் எங்கே தொடங்குகிறது என்பது இதுவரை யாராலும் அறியமுடியவில்லை என்ற தகவலை தரும் இந்த நு£லின் ஆசிரியர் தாமிரபரணி பயணிக்கும் அத்தனை இடங்கள் பற்றிய சிறப்பையும், வியப்பான தகவல்களையும் விரிவாகத் தந்து இருக்கிறார். தாமிரபரணி ஆற்றின் ஊடே, பொதிகை மலையை நோக்கிச் சென்ற சவாலான பயண அனுபவம் மெய்சிலிர்க்க வைக்கிறது. தாமிரபரணி குறுக்கே கட்டப்பட்ட பாலங்கள், அணைகள், படித்துறைகள், மண்டபங்கள் ஆகியவையும் தாமிரபரணி கரையில் பிறந்த மகான்களின் விவரமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தாமிரபரணி நதி தொடர்பான முழுமையான தகவல்களைக் கொண்ட நுலாக இது திகழ்கிறது.
http://www.marymartin.com/web?pid=842548
-----------------------------------------------------------------------------------------------
திராவிடப் பத்திரிக்கையில் ஆதிதிராவிடர் ஆவணங்கள் = Tirāviṭap Pattirikkaiyil ātitirāviṭar āvaṇankaḷ / கோ. ரகுபதி = Kō. Rakupati

சென்னை: தடாகம் = Taṭākam, Ceṉṉai 2022
153p.; 22 cm.
9789393361165
250gm.
$ 8.00 / pb

சுயமரியாதைக் கோட்பாட்டைப் பின்னாளில் பெரியார் பின்பற்றியதால், "நியாயப்படி அயோத்திதாசப் பண்டிதர்தான் சுயமரியாதைத் தலைவர்" எனத் "தாழ்த்தப்பட்டோர் தொண்டர் படைத் தலைவரான பாலகுரு சிவத்தின் பேச்சு திராவிடன் பத்திரிகையிலேயே வெளியானதால் திராவிட இயக்கம் அந்த நியாயத்தை ஒப்புக்கொண்டது தெளிவு. ஆதிதிராவிடத்திலிருந்து திராவிடம் பரிணமித்ததால் முன்னதும் பின்னதும் ஒன்று மற்றொன்றுக்குப் பக்கப் பலமாய் இயல்பாய் இணங்கி இயங்கின. மதவாதத்தைச் சுட்டுவதற்கு சமகாலத்தில் பயன்படுத்தும் "தீவிரவாதம், தீவிரவாதி" என்ற சொற்களுக்கான “Terrorizing, terrorists" என்ற ஆங்கிலச் சொற்களால் ஜாதிவெறியர்களை இரட்டைமலை சீனிவாசனும் ஆர். வீரையனும் குறிப்பிட்டனர்.
**http://www.marymartin.com/web?pid=843601**
---------------------------------------------------------------------------------------------------
மறைந்துபோன மாட்டுத் தாவணிகள் = Maraintupōṉa Māṭṭut Tāvaṇikaḷ / வெள் உவன் = Veḷ Uvaṉ
சென்னை: சந்தியா பதிப்பகம் = Cantiyā Patippakam, Ceṉṉai 2022
177p.; 22 cm.
9789395442268
300gm.
$ 9.50 / pb

மறைந்து போன நாகரிகங்கள் சிலவற்றின் தடங்கள் இன்று அகழ்வாய்வுகள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் மூலமே வெளிப்படுகின்றன. நமது நாகரிகமும் பண்பாடும் அறிவுப் புலன்களும் பல்லாயிரம் ஆண்டுகளாக உயிர்ப்போடு இருந்து வருகின்றன. இதை உணர்ந்து பேணிக் காப்பது நம் கடமை. வானியல், கணிதம், வானயியல் மெய்யியல், இசை என நம் முன்னோர்கள் நமக்கு வழங்கிய கொடைகள் ஏராளம் என்றாலும், இவற்றை நாம் உணர்வதில்லை. நமது அறிவு புலன்களும் தொழில் நுட்பங்களும் மறைந்து வருகின்றன; தொலைந்து போகின்றன; கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடே இந்நூல்.
**http://www.marymartin.com/web?pid=843382**
---------------------------------------------------------------------------------------------------
காதல் இன்று என்னவாக இருக்கிறது? = Kātal Iṉru  Eṉṉavāka Irukkiratu? / சிவபாலன் இளங்கோவன் = Civapālaṉ Iḷankōvaṉ
சென்னை: உயிர்மை பதிப்பகம் = Uyirmai Patippakam, Ceṉṉai 2022
112p.; 22 cm.
9789393650504

200gm.
$ 7.00 / pb

ஆண் – பெண் உறவின் பல்வேறு பரிணாமங்கள் அந்தந்த காலத்தை சார்ந்து வெளிப்படுபவையே! ஒரு ஆண் ஒரு பெண்ணிடம் என்ன எதிர்பார்க்கிறான் என்பதும், ஒரு பெண் ஆணிடம் என்ன எதிர்பார்க்கிறாள் என்பதும் அந்தந்த தனி நபரை பொறுத்தது என்றாலும் கூட, அது அவர்கள் வாழும் காலத்தின் சமூக, கலாச்சார, பண்பாட்டு, பொருளாதார சூழலுடன் நேரடி தொடர்புடையவை. நவீன கால வாழ்க்கை முறை என்பது முந்தைய காலங்களில் இருந்து முற்றிலுமாக வேறாக இருக்கிறது. நம் காலத்தின் ஆண்-பெண் உறவுகளின் சிக்கல்களுக்கான காரணங்களை ஆழமாக ஆராய்கிறது இந்த நூல்.
[http://www.marymartin.com/web?pid=842822](http://www.marymartin.com/web?pid=842822)
-----------------------------------------------------------------------------------------------------
தமிழர் பண்பாடு: குதர்க்கமான கேள்விகளும் தெளிவான பதில்களும் = Tamilar Paṇpāṭu: Kutarkkamāṇa Kēḷvikaḷum Teḷivāṇa Patilkaḷum / பா. இந்துவன் = Pā. Intuvaṇ
சென்னை: சுவாசம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் = Cuvācam Papḷikēśaṇs Piraivēṭ Limiṭeṭ., Ceṇṇai 2022
279p.; 22 cm.
9789395272117
440gm.
$ 16.00 / pb

தமிழர் பண்பாடு என்பதை யாரோ சிலர் வரையறுத்துவிட முடியாது. ஏனென்றால், நம் முன்னோர்களின் வாழ்க்கைத் தொகுப்பு அது. எப்படிப் பொய்யான ஒன்றை நம் பண்பாடு என்று புகுத்திவிட முடியாதோ, அதற்கு இணையாக நிஜமான நம் மரபை இல்லை என்றும் மறைத்துவிட முடியாது. நீண்ட காலமாக நிலவி வரும் நம் பண்பாடு குறித்த சந்தேகங்களை, பொய்ப் பிரசாரங்களை இந்நூலில் எதிர்கொண்டுள்ளார் பா. இந்துவன். தமிழர்களின் பண்பாட்டு அடிப்படைகளை, பழந்தமிழர் நூல்கள் மூலமே நிறுவியுள்ளார். ஒவ்வொரு கேள்விக்கும் மிக விரிவான, ஆழமான, எளிமையான பதில்கள். சங்க காலத்தில் தமிழ்நாடு இருந்ததா, தமிழர் பண்பாட்டில் இதிகாசங்களின் பங்கு என்ன, தமிழர்களின் திருமண முறையில் தாலிக்கு இடம் உண்டா, சங்க காலத்தில் சம்ஸ்கிருதம் இருந்ததா போன்ற இருப்பத்தைந்துக்கும் மேற்பட்ட கேள்விகளை எடுத்துக்கொண்டு, அவற்றுக்கு விரிவாக, ஆதாரபூர்வமான பதில்களை எழுதி இருக்கிறார் நூலாசிரியர். இனி எவரும் இதுபோன்ற குழப்பமான கேள்விகளைக் கேட்கக் கூடாது என்பதற்காகவே தெளிவான ஆதாரங்களுடன் வெளியாகி இருக்கிறது இந்த நூல்.
[http://www.marymartin.com/web?pid=842540](http://www.marymartin.com/web?pid=842540)
-----------------------------------------------------------------------------------------------------